ஸ்ரீ

குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

நீதிநெறி விளக்கம்

DR. J. S. VICTOR.
EYE HOSPITAL,
30, West Perumal Maistry St.,
MADURA.

உரையாசிரியர்

தமிழ்ப்பண்டிட்,

க. பழநிக்குமாரப் பிள்ளையவர்கள்.

பதிப்பாளர்

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்

மதராஸ் & மதுரை

ப்புரிமை] 1935 [விலை அ

அணா 4

ஸ்ரீ

குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

நீதிநெறி விளக்கம்

மூலமும்

தமிழ்ப்பண்டிட்,

க. பழநிக்குமாரப் பிள்ளையவர்களால்

எழுதப்பெற்ற

உரையும்.

TAMIL SANGAM

இதில்

பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, இலக்கணக்குறிப்பு

முதலியவை அடங்கியுள்ளன.

பதிப்பாளர்

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்

மதராஸ் & மதுரை

பதிப்புரிமை] 1935 [விலை அணா 4

Dr. Victor Eye Hospital,
80, WEST PERUMAL MAISTRY ST.,
WEST GATE MADURAI.

PRINTED AT THE
VIVEKANANDA PRESS,
MADURA:—35.

ஸ்ரீ:

நீதிநெறி விளக்கச்

செய்யுட் குறிப்பகராதி.

பாட்டு	பக்கம்
அ	
அல்லன செய்	68
அவையஞ்சி	6
அறம் பொருள்	2
அன்பொடரு	82
ஆ	
ஆக்கம் பெரியார்	16
இ	
இகழின்	42
இசையாத	91
இடை தெரிந்	60
இவறன்மை	11
இளைய முதுதவ	85
இனியவர்	56
இன்சொல்லன்	10
இன்றுகொளற்	29
ஈ	
ஈகையரிதெனி	65
உ	
உலையாமுயற்சி	48
உறுதி பயப்ப	47
எ	
எத்துணைய	5
எவரெவ	92
எவ்வினைய	83
எனைத்துணைய	9
ஏ	
ஏதிலார்யாதும்	32
ஐ	
ஐயந்திரிபின்	95
ஒ	
ஒற்றில்தெரியா	31
க	
கண்கூடாப்	33
கண்ணிற்சொலி	27
கண்ணோக்	35
கருமஞ் சிதை	74
கலனழிந்த	40
கலைமகள்	7
கல்வியுடைமை	15
கல்வியே	4
களைகணாத்	38
கற்பன	22
கற்பில்மகளின்	78
கற்புடைத் தன்பு	77
கற்றன கல்லார்	24
கற்றாங் கறிந்த	94
கற்றுத்துறை	93
கற்றுப் பிறர்க்	20
கற்றோர்க்குக்	12
கா	
காலமறிந்தாங்	49
கு	
குடிகொன்	28
குலமகட்குத்	26
குலம் விற்றுக்	59
கை	
கைவரும்	44
கொ	
கொலையஞ்சார்	75
சி	
சிறியபகை	51
சிறுமுயற்சி	66
சிற்றின்பம்	82
செ	
செயக்கடவ	67
செவிசுடச்	43
சொ	
சொல்வன்மை	65
த	
தத்தம்நிலைக்கும்	62
தம்மின்மெலி	14
தம்முடை	39
தன்னைவியப்பிப்	18

பாட்டு	பக்கம்
தி	
திருவினும்	76
தீ	
தீயசெயல்	71
து	
துயிற்சுவை	81
தெ	
தெய்வமுளதென்	70
தொ	
தொடங்குங்	3
ந	
நட்பிடைக்	54
நட்புப்பிரித்தல்	34
நல்லவை	86
நல்லாரொழுக்கின்	58
நன்மக்கள்	72
நீ	
நீரிற்குமிழி	1
நெ	
நெஞ்சுபுறம்பாத்	87
நெடும் பகல்	8
ப	
பகையின்று	69
பரபரப்பி	84
பழைமை	45
பி	
பிறரால்	19
பிறர்க்குப்	21
பிறன்வரை	73
பு	
புழுநெளிந்து	41
புறநட்டகம்	53
புறப்பகை	52
பெ	
பெண்மை	80
பெற்றசிறுகப்	61
பொ	
பொதுமகளே	63
பொய்குறளோ	57
போ	
போக்கறு கல்வி	23
ம	
மறைவழிப்	89
மனத்தகறுப்	55
மன்னர்புறங்	46
மா	
மாகஞ்சிறுகக்	37
மு	
முடிப்ப முடித்துப்	30
முயலாது	48
முறையுங்	79
முற்றும்உணர்ந்	13
மெ	
மெய்யுணர்ந்தார்	92
மெய்வருத்தம்	50
மெலியார்	90
வ	
வஞ்சித்தொழுகு	88
வருந்தித்தாம்	8
வள்ளன்மை	64
வா	
வாங்குங்களத்	36
வி	
விலக்கிய	17
வே	
வேத்தவை	25

செய்யுட்

குறிப்பகராதி

முற்றிற்று.

உ

நீதிநெறி விளக்கம்

மூலமும்-உரையும்.

கடவுள் வணக்கம்.

1. நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள்! என்னே!
வழுத்தாத தெம்பிரான் மன்று.

(பதவுரை) இளமை-இளமைப் பருவமானது, நீரில்-தண்ணீரினிடத்துண்டாகும்படியான, குமிழி - குமிழிபோல் நிலையில்லாததாகும். நிறைசெல்வம் - (தன்னிடத்துள்ள) மிகுந்த செல்வமானது நீரில் - தண்ணீரினிடத்து, சுருட்டும் - (காற்றினுல்) சுருட்டப்படுகின்ற, நெடுந்திரைகள் - பெரிய அலைகள்போல் நிலைத்துநிற்காததாகும். யாக்கை - சரீரமானது, நீரில்-தண்ணீரில் வரையப்பட்ட, எழுத்துஆகும் - எழுத்தைப்போல் நிலையற்றதாகும். (ஆகையினுல்) நமரங்காள்-நம்மவர்களே! எம்பிரான்மன்று-எம்கடவுளது நர்த்தன சபையை, வழுத்தாதது - வணங்காமலிருப்பது, என்னே - யாதுகாரணம்?

(பொழிப்புரை) இளமைப்பருவமானது, தண்ணீரினிடத்துண்டாகும்படியான குமிழிபோல் நிலையில்லாததாகும். தன்னிடத்துள்ள மிகுந்த செல்வமானது, தண்ணீரினிடத்துக்காற்றினுல் சுருட்டப்படுகின்ற பெரிய அலைகள்போல் நிலைத்து நிற்காததாகும். சரீரமானது, தண்ணீரில் வரையப்பட்ட எழுத்தைப்போல் நிலையற்றதாகும். ஆகையினுல், நம்மவர்களே! எம்கடவுளது நர்த்தனசபையை வணங்காமலிருப்பது யாதுகாரணம்?

(கருத்துரை) அழியும் வாழ்க்கையையுடைய நாம், அழியாச் செல்வத்தைத்தரும் இறைவனை வணங்கவேண்டும்.

(இலக்கணக்குறிப்பு) ஆகும் என்ற பயனிலையை இளமை, செல்வம் என்பனவற்றோடும் கூட்டுக. இது கடைநிலைத்தீபகம் எனப்படும். நிறைசெல்வம் வினைத்தொகை. சுருட்டும்திரை - பெயரெச்சம். யாக்கை-கட்டுதல். அது ஆகுபெயராய் சரீரத்தை உணர்த்திற்று.

2. அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

(ப-ரை) அறம்-தருமத்தையும், பொருள்-பொன், மணி, நெல் முதலிய பொருள்களையும், இன்பமும்-சுகத்தையும், வீடும்-அழிவற்ற மோக்ஷத்தையும், பயக்கும்-உண்டாக்கும். புறங்கடை-முன்வாசலில், நல்இசையும் - சிறந்த புகழையும், நாட்டும் - நிலையாக நிறுத்தும். உறும்-ஊழினால் வரக்கூடிய, கவல் ஒன்று-ஒரு துன்பமானது, உற்று உழியும் - வந்தகாலத்தும், கைகொடுக்கும் - உதவிசெய்யும், (ஆகையினால்) சிறு உயிர்க்கு-அற்ப வாழ்நாளையுடைய மக்களுக்கு, உற்ற துணை - சிறந்த துணை, கல்வியின் - படிப்பைக்காட்டிலும், ஊங்கு - மேலானதொன்று, இல்லை - கிடையாது.

(பொ-ரை) தருமத்தையும், பொருளையும், சுகத்தையும், அழிவற்ற மோக்ஷத்தையும் உண்டாக்கும். முன்வாசலில் சிறந்த புகழையும் நிலையாக நிறுத்தும். ஊழினால் வரக்கூடிய ஒரு துன்பமானது வந்தகாலத்தும் உதவி செய்யும். ஆகையினால், அற்ப வாழ்நாளையுடைய மக்களுக்குச் சிறந்ததுணை, படிப்பைக்காட்டிலும் மேலானது கிடையாது.

(க-ரை) கல்வியே ஒருவனுக்குச் சிறந்த ஐசுவரியமாகும்.

(இ-குறிப்பு) அறம், பொருள், இன்பமும், வீடும்: இவற்றிலுள்ள உம்மைகள் எண்ணுப் பொருளன. கடைப்புறம் என்பது புறங்கடை என்றாயிற்று. இது இலக்கணப்போலி. உறு-மிகுதிப்பொருளைத்தரும் ஓரிடைச்சொல். கல்வி என்ற எழுவாய்க்கு பயக்கும், நாட்டும், கைகொடுக்கும் என்பன பயனிலைகளாக வந்தன.

3. தோடங்குங்கால் துன்பமா யின்பம் பயக்கும்
மடங்கோன் றறிவகற்றும் கல்வி—நெடுங்காமம்
முற்பயக்கும் சின்னீர இன்பத்தின் முற்றிழாய்!
பிற்பயக்கும் பீழை பெரிது.

(ப-ரை) முற்று இழாய்-வேலைப்பாட்டுடன் கூடிய ஆபரணத்தை யணிந்தபெண்ணே!, கல்வி - வித்தையானது, தொடங்குங்கால்-(அதைத்) தொடங்கிப் படிக்குங்காலத்தில், துன்பம் ஆய்-வருத்தத்தைக் கொடுப்பதாய், இன்பம் பயக்கும்-பிறகு சுகத்தைக்கொடுக்கும்; (மேலும்) மடம்கொன்று-அறியாமையைப்போக்கி, அறிவு-அறிவை, அகற்றும்-விரிந்து பரவச்செய்யும். நெடும்காமம் - பெரிய இச்சையானது, முன்பயக்கும்-முதலிற்கொடுக்கிற, சின்னீர-அற்பத்தன்மையான, இன்பத்தின் - சுகத்தைக்காட்டிலும், பின் - பிறகு, பயக்கும்-கொடுக்கிற, பீழை-துன்பமானது, பெரிது-பெரியதாகும்.

(பொ-ரை) வேலைப்பாட்டுடன்கூடிய ஆபரணத்தை யணிந்த பெண்ணே! வித்தையானது, (அதைத்) தொடங்கிப்படிக்குங் காலத்தில் வருத்தத்தைக் கொடுப்பதாய், பிறகு சுகத்தைக்கொடுக்கும்; அறியாமையைப்போக்கி அறிவை விரிந்து பரவச்செய்யும். பெரிய இச்சையானது, முதலிற் கொடுக்கிற அற்பத்தன்மையான சுகத்தைக் காட்டிலும், பிறகு கொடுக்கிற துன்பமானது பெரியதாகும்.

(க-ரை) கல்விகற்பது முதலிற் சிரமமாகவிருப்பினும், பின்னால் அடையும் பெருமையைக் கருதி விடாது கற்றல்வேண்டும்.

நெடுங்காமம் பண்புத்தொகை. நெடுமை எனற் பாலது, காமம் என்பதனுடன் புணரும்பொழுது விகாரப்பட்டது. பயக்கும் இன்பம், பயக்கும் பீழை-பெயரெச்சங்கள். கல்விஎன்ற எழுவாய் பயக்கும், அகற்றும் என்னும் பயனிலைகளைக்கொண்டது.

4. கல்வியே கற்புடைப் பெண்டிர் அப்பெண்டிர்க்குச்
சேல்வப் புதல்வனே ஈர்ங்கவியாச்—சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும்
சேல்வமும் உண்டு சிலர்க்கு.

(ப-ரை) கல்வியே-(தான்) படித்தபடிப்பே, கற்புஉடைய-கற்புத்தன்மைபொருந்திய, பெண்டிர் (ஆக)-மனைவியாகவும், அப்பெண்டிர்க்கு-அம்மனைவிக்கு, ஈர்ங்கவியே - இனிமைபொருந்தியகவிகளே, செல்வப்புதல்வன்ஆக-சிறந்தபுத்திரனாகவும், சொல்வளம் - சொல்வன்மையே, மல்லல்-வளப்பம்பொருந்திய, வெறுக்கைஆக-செல்வமாகவும், (இருப்பதல்லாமல்) மாண்-மாட்சிமைப்பட்ட, அவை-அறிவுடையசபையை, மண்ணுறுத்தும் - அழகுபெறச்செய்கின்ற, செல்வமும்-செல்வமும், சிலர்க்கு-சிலரிடத்து, உண்டு-இருக்கிறது.

(போ-ரை) தான்படித்த படிப்பே கற்புத்தன்மைபொருந்திய மனைவியாகவும், அம்மனைவிக்கு இனிமை பொருந்திய கவிகளே சிறந்த புத்திரனாகவும், சொல்வன்மையே வளப்பம் பொருந்திய செல்வமாகவும் இருப்பதல்லாமல், மாட்சிமைப்பட்ட அறிவுடைய சபையை அழகுபெறச் செய்கின்ற செல்வமும் சிலரிடத்து இருக்கிறது.

(க-ரை) கல்விச்செல்வத்துடன், சொல்வன்மையும் ஒருவனுக்கு இருக்குமாயின் அது சிறப்புடையதாகும்.

(இ-குறிப்பு) சொல்வளம், ஈர்ங்கவி - பண்புத்தொகைகள். வெறுக்கை - அறிவுடையோரால் வெறுக்கப்படுதலின் வெறுக்கை

யென்றாயிற்று. இதுகாரணப்பெயர். உறுத்தும் செல்வம்-பெயரெச்சம். செல்வம்என்றஎழுவாய் உண்டு என்ற பயனிலையைக் கொண்டது.

5. எத்துணைய ஆயினும் கல்வி இடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும் — உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றேனி னென்னும்? அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து.

(ப-ரை) எத்துணைய ஆயினும் - எவ்வளவு ஆனாலும், இடம் அறிந்து-நல்ல உபாத்தியாயரை யறிந்து, கல்வி-(தான் படிக்கவிரும்பிய) படிப்புக்களை, உய்த்துஉணர்வு-ஆராய்ச்சிசெய்து அறியும்சக்தி, இல்எனின்-இல்லைஎன்றால், இல்ஆகும்-(அப்படிப்புக்களும்) இல்லையாம். உய்த்து - ஆராய்ச்சிசெய்து, உணர்ந்து - தெரிந்தும், சொல்வன்மை-பேசும் திறமையானது, இன்றுஎனின்-இல்லாமற்போனால், என்ஆம்-யாது பயன்படும். அஃதுஉண்டேல்-அப்பேசும் திறமையுமிருக்குமானால், பொன்மலர்-பொன்னாற்செய்தபுஷ்பமானது, நாற்றம் உடைத்து-வாசனையுடையதற்கு ஒப்பாகும்.

(பொ-ரை) எவ்வளவுஆனாலும் நல்லஉபாத்தியாயரை யறிந்து தான் படிக்கவிரும்பிய படிப்புக்களை ஆராய்ச்சிசெய்து, அறியும் சக்தி இல்லையென்றால், அப்படிப்புக்களும் இல்லையாம். ஆராய்ச்சிசெய்து தெரிந்தும், பேசும்திறமையானது இல்லாமற்போனால் யாதுபயன்படும்? அப்பேசுந்திறமையுமிருக்குமானால், பொன்னாற்செய்த புஷ்பம் வாசனை யுடையதாயிருப்பதற்கொப்பாம்.

(க-ரை) கல்வி யறிவோடு பேசும்திறமையும் ஒருவனுக்கு அவசியம் வேண்டும்.

(இ-குறிப்பு) சொல்வன்மை, பொன்மலர்-வேற்றுமைத்தொகைகள். மலர்என்னும் எழுவாய் உடைத்து என்னும்பயனிலைகொண்டது

6. அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும் — நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று.

(ப-ரை) அவை - அறிவுடையவர் கூடிய சபைக்கு, அஞ்சி-பயந்து, மெய்விதிர்ப்பார்-சரீரம் நடுங்குவோருடைய, கல்வியும்-படிப்பும், கல்லார்-அறிவில்லாத மூடருடைய. அவை அஞ்சா-சபைக்குப் பயப்படாத, ஆகுலச்சொல்லும்-கெம்பீரமான வார்த்தைகளும்,நவை-(வாழ்க்கையிலேற்படும்) குற்றங்களுக்கு, அஞ்சி-பயந்து, ஈத்து உண்ணார்-யாசிப்பவருக்குக் கொடுத்துச் சாப்பிடாதவருடைய, செல்வமும்-ஐசுவரியமும், நல்கூர்ந்தார்-தரித்திரர்களுடைய. இன்நலமும்-ஈகை, அருள் முதலிய இனியகுணங்களும்,பூத்தலில்-உண்டாவதைக் காட்டிலும், பூவாமை-உண்டாகாமலிருப்பதே, நன்று-நல்லது.

(பொ-ரை) அறிவுடையவர்கள் கூடிய சபைக்குப்பயந்து சரீரம் நடுங்குவோருடைய படிப்பும், அறிவில்லாத மூடருடைய சபைக்குப் பயப்படாத கெம்பீரமான வார்த்தைகளும், வாழ்க்கையிலேற்படும் குற்றங்களுக்குப் பயந்து யாசகருக்குக் கொடுத்துண்ணாதவருடைய ஐசுவரியமும், தரித்திரர்களுடைய ஈகை, அருள், முதலிய இனிய குணங்களும் உண்டாவதைக் காட்டிலும் உண்டாகாமலிருப்பதே நல்லது.

(க-ரை) அவைக்கு அஞ்சுவோருடைய கல்வி முதலாயின பிரயோஜனமில்லை.

(இ-குறிப்பு) அஞ்சாச்சொல்- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் - உண்ணார் செல்வம், நல்கூர்ந்தார் நலம் இவை வேற்றுமைத்தொகைகள். இன்னலம் - பண்புத்தொகை, பூவாமை என்பது நன்று என்றபயனிலை கொண்டு முடிந்தது.

7. கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு.

(ப-ரை) வண்தமிழோர் - கல்விவளம்பொருந்திய புலவர்கள், செய்யும் - செய்கின்ற, உடம்பு - (கவிகளாகிய) உடம்புகள், புகழ் - கீர்த்தியை, கொண்டு- தம்மிடத்துக்கொண்டு, மலரவன்-பிரமாவானவன், செய் - படைக்கின்ற, வெறுஉடம்பு - யாதொருபயனுமில்லாத சரீரங்கள், மாய்வனபோல் - அழிவதைப்போல், மாயா - அழிவன ஆகா, (ஆகையினால்) கலைமகள் - சரஸ்வதியினுடைய, வாழ்க்கை- இருப்பிடமானது, முகத்தது எனினும் - தன் முகத்தினிடமாக விருந்தபோதிலும், மலரவன் - அப்பிரமாவானவன், இவர்க்கு இத் தமிழ் வித்வான்களுக்கு, ஒவ்வான் - ஒப்பாகமாட்டான்.

(பொ-ரை) கல்விவளம் பொருந்திய புலவர்கள் செய்கின்ற கவிகளாகிய உடம்புகள் கீர்த்தியைத் தம்மிடத்துக்கொண்டு, பிரமாவானவன் படைக்கின்ற யாதொரு பயனுமில்லாத சரீரங்கள் அழிவதைப்போல் அழிவன ஆகா. ஆகையால், சரஸ்வதியினுடைய இருப்பிடமானது தன் முகத்தினிடமாக விருந்தபோதிலும், அப்பிரமாவானவன் இத்தமிழ் வித்வான்களுக்கு ஒப்பாகமாட்டான்.

(க-ரை) பிரமனிலும் கலைவல்லார் சிறந்தவராவர். ஆதலின், பெருமையை யளிக்கும் கல்வியை விடாது கற்றல் வேண்டும்.

(இ-குறிப்பு) கலைமகள்-வேற்றுமைத்தொகை. வண்டமிழ்-பண்புத்தொகை, வெற்றுடம்பு இதுவுமது. மலரவன் என்பது ஒவ்வான் என்னும் பயனிலை கொண்டு முடிந்தது. உடம்பு என்பது மாயா என்னும் பயனிலை கொண்டது.

8. நெடும்பகல் கற்ற அவையத் துதவா
துடைந்துளா ருட்குவருங் கல்வி—கடும்பகல்
ஏதிலான் பாற்கண்ட இல்லினும் பொல்லாதே
தீதேன்று நீப்பரி தால்.

(ப-ரை) நெடும்பகல்-பலகாலமாக, கற்ற-வாசித்தறிந்த நூற் பொருள்கள், அவையத்து - கற்றுவல்லோர் சபையில், உதவாது-பயன்படாமல், உடைந்துஉளார் - பயந்துநடுங்குபவருடைய, உட்கு வரும்-நாணத்தைக்கொடுக்கின்ற, கல்வி-கல்வியானது, கடும்பகல்-நடுப்பகற்பொழுதில், ஏதிலான்பால் - அன்னியனிடத்து, கண்ட-உறவுகொண்டிருக்கப்பார்த்த, இல்லினும்-ஒழுக்கங்கெட்ட மனையாளினும், பொல்லாது - கொடியதாம். (ஏனென்றால்) தீதுஎன்று - கொடியதுஎன்று, நீப்புஅரிது - தன்னைவிட்டு நீக்கிக்கொள்ள முடியாது.

(பொ-ரை) பலகாலமாக வாசித்தறிந்தநூற்பொருள்கள் கற்று வல்லோர்சபையில் பயன்படாமல் பயந்து நடுங்குபவருடைய நாணத்தைக் கொடுக்கின்ற கல்வியானது, நடுப்பகற்பொழுதில் அன்னியனிடத்தில் உறவுகொண்டிருக்கப்பார்த்த ஒழுக்கங்கெட்ட மனையாளினும் கொடியதாம். ஏனென்றால், கொடியதென்று தன்னை விட்டு நீக்கிக்கொள்ளமுடியாது.

(க-ரை) சபைக்கு நடுங்குபவருடைய கல்வி மிகக்கொடியதாம்.

(இ-குறிப்பு) நெடும்பகல் - பண்புத்தொகை. கற்ற-வினையாலணையும் பெயர். கடும்பகல்-பண்புத்தொகை. கல்வி என்பது பொல்லாது என்னும்பயனிலைகொண்டு முடிந்தது.

9. வருந்தித்தாம் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்.

(ப-ரை) தாம்வருந்தி-தாம்கஷ்டப்பட்டு, கற்றன-படித்த நூற் பொருள்களை, ஓம்பாது - (ஆராய்ந்து) பாதுகாவாமல், மற்றும்சில - இன்னுஞ் சிலநூல்களை, பரிந்து - கஷ்டத்துடன், கற்பான்தொடங் கல்-வாசிக்கத்தொடங்குதல், கைத்தலத்த-கையின்கண்உள்ள, கருந் தனம்-மிகுந்தபொருள்களை, உய்த்து-தாங்கிச்சென்று, சொரிந்திட்டு- எறிந்துவிட்டு, ஆங்கு-அவ்விடத்திலேயே, அரிப்புஅரித்து - அரித்து (அதாவது ஒவ்வொன்ருகத் தேடிப்பிடித்து), எய்த்து-மனம்வருந்தி, பொருள்செய்திடல்-பொருள்தேடுவதற்கு ஒப்பாகும்.

(போ-ரை) தாம் கஷ்டப்பட்டுப் படித்த நூற்பொருள்களை, ஆராய்ந்து பாதுகாவாமல் இன்னுஞ்சில நூல்களைக் கஷ்டத்துடன் வாசிக்கத் தொடங்குதலானது கையின்கண்உள்ள மிகுந்த பொருள் களைத் தாங்கிச்சென்று எறிந்துவிட்டு, அவ்விடத்திலேயே அரித்து மனம்வருந்திப் பொருள்தேடுவதற்கு ஒப்பாகும்.

(க-ரை) கற்ற பாடங்களை மறவாமல் காப்பதே மேலான தாகும்.

(இ-குறிப்பு) கற்றன-வினையாலணையும் பெயர், ஓம்பாது-வினை யெச்சம். மற்று, உம்-இடைச்சொற்கள். கைத்தலத்த-வினையாலணை யும்பெயர். தொடங்கல் என்பது செய்திடல் என்னும் பயனிலையைக் கொண்டது. அதற்குப்பின் ஆகும் என்று ஒரு சொல் வரவழைத்து முடிக்க.

10. எனைத்துணைய வேனும் இலம்பாட்டார் கல்வி
தினைத்துணையும் சீர்ப்பா டிலவாம்—மனைத்தக்காள்
மாண்பிலள் ஆயின் மணமகன் நல்லறம்
பூண்ட புலப்படா போல்.

(ப-ரை) மனை-இல்வாழ்விற்கு, தக்காள்-தகுதியுடையவளாகிய மனைவியானவள், மாண்பு-சிறந்த நற்குணங்கள், இலள்ஆயின் - இல் லாதவளாகவிருந்தால், மணமகன் - கணவனானவன், பூண்ட - கைக்

கொண்டனவாகிய, நல்அறம் - சிறந்த தருமகாரியங்கள், புலப்படா போல்-(கீர்த்திபெற்று) விளங்காது போவதுபோல, இலம்பாட்டார்-தரித்திரர்களுடைய, கல்வி-படிப்புக்கள், எனைத்துணையஎனும் - எவ்வளவு சிறந்தனவாகவிருந்தபோதிலும், தினைத்துணையும் - அவை தினையளவேனும், சீர்ப்பாடு-சிறப்படைதல், இலஆம்-இல்லையாம்.

(பொ-ரை) இல்வாழ்விற்குத் தகுதியுடையவளாகிய மனைவியானவள் சிறந்தநற்குணங்கள் இல்லாதவளாகவிருந்தால் கணவனைவன் கைக்கொண்டனவாகிய நல்ல தருமகாரியங்கள் கீர்த்திபெற்று விளங்காது போவதுபோல, தரித்திரர்களுடைய படிப்புக்கள் எவ்வளவு சிறந்தனவாகவிருந்தபோதிலும் அவை தினையளவேனும் சிறப்படைதல் இல்லையாம்.

(க-ரை) தரித்திரன் எவ்வளவு கல்வியறிவு உடையவனாக இருந்தபோதிலும், அவன் கல்வி பெருமையடையாது.

(இ-குறிப்பு) இலம்பாட்டார்-வினையாலணையும்பெயர். நல்லறம்-பண்புத்தொகை. தினைஎன்பது சிறுமையைக் காட்ட வந்ததொரு பொருள். கல்விஎன்பது இலவாம் என்னும் பயனிலைகொண்டது.

11. இன்சொல்லன் தாழ்நடைய னாயினுமொன் றில்லானேல்
வன்சொல்லின் அல்லது வாய்திறவா—என்சொலினும்
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்குங் கடன்ஞாலம்
பித்துடைய அல்ல பிற.

(ப-ரை) இன்சொல்லன் - இனிமையான சொல்லைப்பேசுபவனையும், தாழ்நடையன் - பணிந்துநடக்கும் தன்மையுடையவனையும், ஆயினும் - இருந்தபோதிலும், ஒன்றும் இல்லானேல் - கையில் யாதொரு பொருளும் இல்லாதிருந்தால், கடல் - சமுத்திரத்தாற் சூழப்பட்ட, ஞாலம் - உலகத்திலுள்ள ஜனங்கள், வல்சொல்லின் - கொடுஞ்சொல் சொல்லுதலினின்றும், அல்லது - இனிமைபொருந்

திய சொற்களைப்பேசுதற்கு, வாய்திறவா - வாயைத்திறக்கமாட்டார்கள். என்சொல்லினும் - கொடுஞ்சொற் கூறினபோதிலும், கைத்து உடையான்-செல்வம் உடையவனது, கால்கீழ் - பாதங்களின்கீழாக, ஒதுங்கும்-பணிந்துநடப்பார்கள். (ஆகையினால்) பித்து-பைத்தியத் தன்மையை, உடைய-உடையவராவர். பிறஅல்ல-வேறுநல்லகுணங்களை யுடையவராகார்.

(பொ-ரை) இனிமையான சொல்லைப் பேசுபவனும், பணிந்து நடக்கும் தன்மையுடையவனும், இருந்தபோதிலும் கையில் யாதொரு பொருளும் இல்லாதிருந்தால் சமுத்திரத்தாற் சூழப்பட்ட உலகத்திலுள்ள ஜனங்கள் கொடுஞ்சொல் சொல்லுதலினின்றும் இனிமைபொருந்திய சொற்களைப் பேசுதற்கு வாயைத் திறக்கமாட்டார்கள். கொடுஞ்சொற் கூறினபோதிலும் செல்வம் உடையவனது பாதங்களின் கீழாகப் பணிந்துநடப்பார்கள். ஆகையினால், அவர்கள் பைத்தியக்காரத் தன்மையையுடையவராவர். வேறு நல்ல குணங்களையுடையவராகார்.

(க-ரை) கல்வியறிவு உடையானுக்கு மரியாதைசெய்வதே பொருத்தமுடையது. செல்வனுக்கு மரியாதைசெய்வது பொருத்தமற்றது.

(இ-குறிப்பு) இன்சொல், வன்சொல் - பண்புத்தொகைகள். உடையான்-குறிப்பு வினையாலணையும் பெயர். ஞாலம் - இடவாகு பெயர். ஞாலம்என்பது ஒதுங்கும், திறவா என்னும் இருபயனிலைகளைக்கொண்டது.

12. இவறன்மை கண்டும் உடையாரை யாரும்
குறையிரந்தும் குற்றேவல் செய்ப—பெரிதுந்தாம்
முற்பகல் நோலாதார் நோற்றாரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை யன்று.

(ப-ரை) இவறன்மை-உலோபகுணம் உடையவராயிருத்தலை, கண்டும்- தெரிந்துவைத்தும், உடையாரை-தனவந்தர்களை, யாரும்-எல்லோரும், குறை - (தமக்குவேண்டிய) குறையாகியபொருளை, இரந்து-(வேண்டுமென்று) யாசித்து, குறுஏவலும்-(அவர் கட்டளையிட்ட) இழிந்ததொழில்களையும், செய்ப-செய்துமுடிப்பார்கள். முன்பகல்-முன்காலத்தில், பெரிதும்-மிகவும், நோலாதார்-தவஞ்செய்யாதவர்கள், நோற்றாரை-அத்தவஞ்செய்தோர்களை, பின்செல்லல்-பின்பற்றுதல், கற்புஅன்றே-சிறந்த அறிவுடைமையேயாகும் கல்லாமை-அறிவில்லாமை, அன்று-அல்ல.

(பொ-ரை) உலோபகுணம் உடையவராயிருத்தலைத் தெரிந்து வைத்தும், தனவந்தர்களை எல்லோரும் தமக்குவேண்டிய குறையாகியபொருளை வேண்டுமென்று யாசித்து, அவர் கட்டளையிட்ட இழிந்த தொழில்களையும் செய்துமுடிப்பார்கள். முன்காலத்தில் மிகவும் தவஞ்செய்யாதவர்கள், அத்தவஞ்செய்தோர்களைப் பின்பற்றுதல் சிறந்த அறிவுடைமையே யாகும். அறிவில்லாமை யல்ல.

(க-ரை) பொருளில்லாத வறியோர்கள் பொருளுள்ளவர்களுக்கு அடங்கி நடப்பது உலக வியற்கையேயாகும்.

(இ-குறிப்பு) இவறுதல் என்னும் தொழிற்பெயர் விகுதிகுன்றி அன்மை என்பதனொடு புணர்ந்தது. உடையார்-வினையாலணையும் பெயர். நோலாதார், நோற்றார்என்பவைகளுமது. யாரும் என்பது செய்ப என்னும் பயனிலைகொண்டது. தாம்-அசை.

13. கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் — முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார்.

(ப-ரை) கற்றோர்க்கு-படித்தறிந்தவர்க்கு, கல்வி நலனே-படிப்பால் எற்படும் அறிவே, கலன்-ஆபரணமாகும். அல்லால்-அது அல்லாமல், மற்று ஓர்-வேறு ஒரு, அணிகலன்-ஆபரணம், வேண்டா-வேண்டுவதில்லையாம். முழுமணி-சிறந்த இரத்தினங்களால் செய்யப்பட்ட, பூணுக்கு-ஆபரணங்களுக்கு, பூண்-வேறு ஒரு ஆபரணம், முற்ற-எக்காலத்திலும், வேண்டா - வேண்டியதில்லை. அழகுக்கு-(யாவரையும் கவரத்தக்க) அழகுக்கு, அழகு-அழகை, செய்வார்-உண்டு பண்ணிக்கொடுப்பவர், யாரே-எவர்? (ஒருவருமில்லை)

(பொ-ரை) படித்தறிந்தவர்க்குப் படிப்பால் எற்படும் அறிவே ஆபரணமாகும். அது அல்லாமல் வேறு ஓர் ஆபரணம் வேண்டுவதில்லையாம். சிறந்த இரத்தினங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களுக்கு வேறு ஓர் ஆபரணம் எக்காலத்திலும் வேண்டியதில்லை. யாவரையும் கவரத்தக்க அழகுக்கு அழகை உண்டுபண்ணிக் கொடுப்பவர் எவர்? (ஒருவருமில்லை)

(க-ரை) கற்றோர்க்கு அவர் அறிவே சிறந்த ஆபரணமாக விளங்குதலால், அவருக்குப் பிறஆபரணங்கள் வேண்டாம். ஆதலால் சிறந்த ஆபரணமாகிய கல்வியை நாமடையவேண்டும்.

(இ-குறிப்பு) கல்விநலன் -வேற்றுமைத் தொகை. அணிகலம்-வினைத்தொகை. அணிகலன் என்பது வேண்டா என்னும் பயனிலை கொண்டு முடிந்தது. செய்வார் என்பது யார் என்னும் பயனிலை கொண்டது.

14. முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க—சிற்றுளியால்
கல்லுந் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்.

(ப-ரை) கனங்குழாய்-கூட்டமான காதணியையுடைய பெண்ணே!, முற்றும் - சகல சாஸ்திரங்களையும், உணர்ந்தவர்-

வாசித்து அறிந்தவர், இல்லை-கிடையாது. (ஆகையினால்) முழுவதூஉம்-சகல சாஸ்திரங்களையும், கற்றனம் என்று-வாசித்து விட்டோம் என்று, களியற்க-கர்வம் கொள்ளாதே. கல்லும்-கருங்கற்பாறைகளும், சிறு-சிறிய, உளியால்-உளியினால், தகரும்-பிளவுபடும். கொல்-கொல்லனுடைய, உலை-உலைக்களத்திலிருக்கின்ற, கூடத்தினால்-சம்மட்டியினால், தகரா-பிளவுபடா.

(பொ-ரை) கூட்டமான காதணியை யுடைய பெண்ணே! சகல சாஸ்திரங்களையும் வாசித்தறிந்தவர்கிடையாது. (ஆகையினால்) சகல சாஸ்திரங்களையும் வாசித்து விட்டோமென்று கர்வம் கொள்ளாதே. கருங்கற்பாறைகளும் சிறிய உளியினால் பிளவுபடும். கொல்லனுடைய உலைக்களத்திலிருக்கின்ற சம்மட்டியினால் பிளவுபடா.

(க-ரை) வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு. ஆகையினால் கர்வம் கொள்ளலாகாது.

(இ-குறிப்பு) முற்றும் என்பதிலுள்ள உம்மை முற்றும்மை. உணர்ந்தவர்-வினையாலணையும்பெயர். முழுவதூஉம்-உயிரளபெடை. களியற்க - வியங்கோள்வினைமுற்று, சிற்றுளி-பண்புத் தொகை. நீ என்னும்தோன்றா எழுவாய்க்கு, களியற்கஎன்பது பயனிலையாக வந்தது. கல் என்பது தகரும் என்னும் பயனிலைகொண்டது.

15. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று.

(ப-ரை) தம்மின்-தங்களைக் காட்டிலும், மெலியாரை-எளியோர்களை, நோக்கி-பார்த்து, தமது-தம்முடைய, உடைமை-ஐசுவரியம், அம்மா-மிகவும், பெரிது என்று-மேலானதென்று, அகம் மகிழ்க-மனதினுள் சந்தோஷிக்க, தம்மினும்-தம்மைக் காட்டிலும்

கற்றுரை-படித்தவரை, நோக்கி-பார்த்து, நாம் கற்றது-நாம் படித்தறிந்தது, எல்லாம்-முழுதும், இவர்க்கு-இக்கற்றவரது கல்விக்கு, எற்று என்று-எவ்வளவினதாகும் என்று எண்ணி, கருத்து அழிக-மனம் வருந்துக.

(பொ-ரை) தங்களைக்காட்டிலும் எளியோர்களைப்பார்த்து, தம்முடைய ஐசுவரியம் மிகவும் மேலானதென்று மனதினுள் சந்தோஷிக்க. தம்மைக்காட்டிலும் படித்தவரைப்பார்த்து நாம் படித்தறிந்தது முழுதும் இக்கற்றவரது கல்விக்கு எவ்வளவினதாகுமென்றெண்ணி மனம் வருந்துக.

(க-ரை) செல்வத்தில் போதுமென்று திருப்தியடைதலும், கல்வியில், குறைவுஉடையோம் என்று கற்க அவாக்கொள்ளுதலும் தக்கதாம்.

(இ-குறிப்பு) தம்மின்-இன்னுருபு எல்லைப்பொருளது. அம்மா-வியப்புப்பொருள்தருமிடைச்சொல். கற்ற-வினையாலணையும்பெயர். நீ என்னும் தோன்று எழுவாய் மகிழ்க என்னும் பயனிலைகொண்டது.

16. கல்வி உடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வம் எனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றூமும்
தலைவணங்கித் தாழப் பெறின்.

(ப-ரை) இல்லார் - (கல்விப்பொருள் செல்வப்பொருள்) ஆகிய இரண்டும் இல்லாதவர்கள், குறை-தம்மிடத்து இல்லாத குறையை, இரந்து-கூறியாசித்து, தம்முன்னர்-தங்களுக்கெதிரில், நிற்பபோல்-(தலைவணக்கத்துடன்) நிற்பதைப்போல, தாமும் - (கல்விபொருட்செல்வங்கள்) உடையவரும், தலைவணங்கி-மரியாதையுடன், தாழப்பெறின்-பணிந்துநடத்தலைப் பெறுவார்களாயின், கல்விஉடைமை-

கல்விச்செல்வமுடையவராதலும், பொருள்உடைமை - பொருட்செல்வமுடையவராதலும், என்று-என்றுகூறப்படுகின்ற, இரண்டு செல்வமும்-இரண்டு செல்வங்களும், செல்வம்எனப்படும்-(உண்மையாகவே) சிறந்த ஐசுவரியங்கள் என்று மதிக்கப்படும்.

(பொ-ரை) கல்விப்பொருள் செல்வப்பொருள் ஆகிய இரண்டும் இல்லாதவர்கள், தம்மிடத்து இல்லாத குறையைச்சொல்லி யாசித்து, தங்களுக்கு எதிரில் தலைவணக்கத்துடன் நிற்பதைப்போல கல்வி பொருட்செல்வங்கள் உடையவர்களும் மரியாதையுடன் பணிந்து நடத்தலைப் பெறுவார்களாயின் கல்விச்செல்வமுடையவராதலும், பொருட்செல்வமுடையவராதலும் என்று கூறப்படுகின்ற இரண்டுசெல்வங்களும் உண்மையாகவே சிறந்த ஐசுவரியங்கள்என்று மதிக்கப்படும்.

(க-ரை) கல்வி பொருட்செல்வங்களுடையவர்கள் அடக்கமும் மரியாதையும் உடையவர்களாய் நடந்தால் அவர்கள் செல்வங்களுக்குப் பெருமை ஏற்படும்.

(இ-குறிப்பு) கல்வியுடைமை, பொருளுடைமை - உம்மைத்தொகை. இல்லார் - குறிப்புவினையாலணையும்பெயர். செல்வம் என்பது செல்வமெனப்படும் என்பதைப் பயனிலையாகக்கொண்டது.

17. ஆக்கம் பெரியார் சிறியார் இடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்க—தூக்கின்
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழும் துலைக்கு.

(ப-ரை) துலைக்கு - தராசினிடத்து, மெலியது - இலேசான பொருளிருக்கும் தட்டானது, மேன்மேன்-மிகவும் உயரமாக, எழ-எழும்படி, செல்லச்செல்ல-செல்லுமாறுவிட்டுவிட்டு, வலிது அன்றே-கனமான பொருளுள்ள தட்டல்லவா, தாழும் - தாழ்ந்துநிற்கும்.

(அதுபோல), ஆக்கம்பெரியார் - (கல்வி பொருட் செல்வங்களில்) ஒன்றை மிகவும் உடையவர், சிறியார்இடை-(அச்செல்வங்கள்) சிறிதாகஉடையவரிடத்து, பட்ட - காணப்படுகின்ற, மீச்செலவு- அக்கிரமச்செயல்களை, காணின் -கண்டால், நனி - மிகவும், தாழ்ப-பணிந்து நடப்பார்கள்.

(பொ-ரை) தராசினிடத்து இலேசான பொருளிருக்கும் தட்டானது மிகவும் உயரமாக எழும்படி செல்லுமாறு விட்டுவிட்டு கனமான பொருளுள்ள தட்டல்லவா? தாழ்ந்துநிற்கும். அது போல, கல்வி, பொருட் செல்வங்களில் ஒன்றை மிகவும் உடையவர், அச்செல்வங்கள் சிறிதாகவுடையவரிடத்துக் காணப்படுகின்ற அக்கிரமச்செயல்களைக்கண்டால் மிகவும் பணிந்து நடப்பார்கள்.

(க-ரை) பெரியோர் சிறியோருடைய அக்கிரமச்செயல்களைக் கண்டும் காணாததுபோலவேயிருப்பர்.

(இ-குறிப்பு)பெரியார், சிறியார் - வினையாலணையும் பெயர்கள். நனி - உரிச்சொல். மேன்மேல்-அடுக்குத்தொடர். செல்லச்செல்ல என்பதுமது. பெரியார் என்பது தாழ்ப என்னும் பயனிலைகொண்டது. வலிது என்பது தாழும் என்னும் பயனிலைகொண்டது.

18. விலக்கிய ஓம்பி விதித்தனவே செய்யும்
நலத்தகையார் நல்வினையும் தீதே—புலப்பகையை
வென்றனம் நல்லொழுக்கின் நின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின்.

(ப-ரை) விலக்கிய - வேதசாஸ்திரத்தில் விலக்கப்பட்ட காரியங்களை, ஓம்பி - செய்யாமற் காத்து, விதித்தன - அச்சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட காரியங்களை, செய்யும் - (எப்பொழுதும்) செய்கின்ற, நலத்தகையார் - சிறந்த ஒழுக்கமுடையார், புலம்பகையை -

(ஐந்து) புலன்களாகிய விரோதிகளை, வென்றனம் - (யாம்) அடக்கி வெற்றிகொண்டோம், நல்லொழுக்கின் - நல்லஒழுக்கத்திலே, நின்றேம் - தவறாது நடக்கிறேம், என்று - என்றுகூறிக்கொண்டு, தம் பாடு-தமது பெருமையை, தம்மில்-தமக்குள்ளேயே, கொளின்-மதித்துக்கொண்டால், நல்வினையும்-(அவர்) செய்கின்ற நற்காரியங்களும், தீதே-பயனற்றதேயாகும்.

(பொ-ரை) வேதசாத்திரத்தில் விலக்கப்பட்டகாரியங்களைச் செய்யாமற் காத்து, அச்சாத்திரத்தில் சொல்லப்பட்ட காரியங்களை யெப்பொழுதும் செய்கின்ற சிறந்த ஒழுக்கமுடையார், ஐந்துபுலன்களாகிய விரோதிகளை அடக்கி வெற்றிகொண்டோம்; நல்லொழுக்கத்திலே தவறாதுநடக்கின்றேம் என்று கூறிக்கொண்டு, தமது பெருமையைத் தமக்குள்ளேயே மதித்துக்கொண்டால், அவர் செய்கின்ற நற்காரியங்களும் பயனற்றதாக முடியும்.

(க-ரை) நல்ல ஒழுக்கமுடையாராக விருந்தபோதிலும், தன் பெருமையைப்புகழ்ந்து கர்வங்கொள்ளலாகாது.

(இ-குறிப்பு) செய்யும் தகையார் - பெயரெச்சம். நலத்தகை, புலப்பகை-பண்புத்தொகைகள். வென்றனம், நின்றேம் - தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள், நல்வினை என்னும் எழுவாய் தீது என்னும் பயனிலைகொண்டு முடிந்தது.

19. தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் — தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம்.

(ப-ரை) தன்னை - (ஒருவன்) தன்னை, வியப்பிப்பான்-பிறர் புகழும் பொருட்டு, தன் புகழ்தல்-தன்னைத்தானே (பிறரிடம்) புகழ்ந்து பேசுவது, நல் நீர்-குளிர்ந்த தண்ணீரை, சொரிந்து-வார்த்து

தீச்சுடர்-அக்னிச் சுவாலையை, வளர்த்தற்று-ஓங்கி யெரியச் செய்வ தற்கு ஒப்பாகும். (ஆதலால்) வியப்பாவது - புகழ்ச்சிஎன்றுகூறப்படு வது, தன்னை-தன்னை, வியவாமை-புகழ்ந்துகொள்ளாமை, அன்றே-அல்லவா? நலம்-சிறந்த இன்பம் எனப்படுவது, இன்பம் - எவ்வித மான சுகத்தையும், நயவாமை-விரும்பாதிருத்தல், அன்றே - அல் லவா?

(போ-ரை) ஒருவன் தன்னைப் பிறர் புகழும்பொருட்டுத் தன் னைத்தானே பிறரிடம் புகழ்ந்துபேசுவது குளிர்ந்த தண்ணீரை வார்த்து அக்னிச்சுவாலையை யெரிப்பதற்கு ஒப்பாகும். ஆதலால், புகழ்ச்சியென்று கூறப்படுவது தன்னைப் புகழ்ந்துகொள்ளாமையல் லவா? சிறந்தஇன்பம் எனப்படுவது எவ்விதமான சுகத்தையும்விரும் பாதிருத்தல் அல்லவா?

(க-ரை) தற்புகழ்ச்சி கொள்ளுதலும், எல்லாவற்றையும்வேண் டும் வேண்டும் என்று பேராசை கொள்ளுதலும் கூடாது.

(இ-குறிப்பு) தற்புகழ்தல் - இரண்டன் தொகை. தீச்சுடர்-மூன்றன்தொகை. வியப்பிப்பான் - வினையெச்சம். வியவாமை, நயவாமை - தொழிற்பெயர்கள். புகழ்தல் என்னும் எழுவாய் வளர்த்தற்று என்னும் பயனிலைகொண்டு முடிந்தது. வளர்த்தற்று என்பதை வளர்த்தது + அற்று எனப்பிரிக்க.

20. பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றி சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்.

(ப-ரை) பிறரால்-மற்றவர்களால், பெருஞ்சுட்டு-நன்கு புகழப் படுதலை, வேண்டுவான்-விரும்புகிறவன், யாண்டும்-எப்பொழுதும் மறவாமே-மறந்து விடாதபடி, நோற்பது-அநுஷ்டிக்க வேண்டியது,

ஒன்று உண்டு-ஒன்று இருக்கிறது. (அது யாதெனில்) பிறர்பிறர்-மற்றவர்களுடைய, சீர் எல்லாம்-பெருமைகளையெல்லாம், தூற்றி-யாவருமறியச்சொல்லி, சிறுமை-(அவர்களுடைய) குற்றங்களை, புறங்காத்து - வெளியிற்கூறுமல்அடக்கி, யார்யார்க்கும் - எத்தகையோரிடத்தும், தாழ்ச்சி-பணிவான வார்த்தைகளை, சொலல்-சொல்லுதலாம்.

(பொ-ரை) மற்றவர்களால் நன்கு புகழப்படுதலை விரும்புகிறவன், எப்பொழுதும் மறந்து விடாதபடி அனுஷ்டிக்க வேண்டியதொன்றிருக்கிறது. அது யாதெனில்? மற்றவர்களுடைய பெருமைகளையெல்லாம் யாவரும் அறியச்சொல்லி, அவர்களுடைய குற்றங்களை வெளியிற் கூறுமலடக்கி, எத்தகையோரிடத்தும் பணிவான வார்த்தைகளைச் சொல்லுதலாம்.

(க-ரை) பிறர் குணங்களை வெளிப்படுத்தியும், பணிவான வசனங்களைப் பேசியும் ஒருவன் நடந்தால், அவனுக்குப் பெருமை தானேயேற்படும்.

(இ-குறிப்பு) பெருஞ்சுட்டு-பண்புத்தொகை. வேண்டுவான்-வினையாலணையும்பெயர். பிறர்பிறர் - அடுக்குத்தொடர். தாழ்ச்சி, சிறுமை-ஆகுபெயர்கள். ஒன்று என்னும் எழுவாய் உண்டு என்னும் பயனிலைகொண்டது.

21. கற்றுப் பிறர்க்குரைத்துத் தாம் நில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக்கு முண்டோர் வலியுடைமை—சொற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல்.

(ப-ரை) கற்று - நீதிநூல்களைப்படித்து, பிறர்க்கு - மற்றவர்களுக்கு, உரைத்து - (ஒழுக்கங்களை) எடுத்துக்கூறி, தாம்நில்லார் -

அவ்வொழுக்கத்தில் நில்லாதவருடைய, வாய்-வாயிலிருந்து, படூஉம்-உண்டாகும்படியான, வெறுஉரைக்கும் - பயனற்றசொற்களுக்கும், ஓர்-ஒரு, வலியுடைமை-வலிமையுள்ள தன்மை, உண்டு - இருக்கிறது. (அது என்னவென்றால்), ஒருவன்-ஒருமனிதன், நேர்ந்து - தனக்கு எதிராகவந்து, சொற்ற - இவ்விதம்நல்லொழுக்கத்தைக்கூறிய, நீர்-தாங்கள், நில்லாதது - அவ்வொழுக்கத்தில் நடவாதது, என்என்று-யாதுகாரணம்? என்று, நாண்உறைப்ப - வெட்கம்தோன்றிவருத்தும்படி, சொல்லாமே - கூறாதவண்ணம், சூழ்ந்து - ஆராய்ச்சிசெய்து, சொலல்-சொல்லுதலாம்.

(போ-ரை) நீதிநூல்களைப்படித்து மற்றவர்களுக்கு ஒழுக்கங்களை யெடுத்துக்கூறி, அவ்வொழுக்கத்தில் நில்லாதவருடைய வாயிலிருந்துண்டாகும்படியான பயனற்றசொற்களுக்கும் ஒரு வலிமையுள்ள தன்மையிருக்கிறது. அது என்னவென்றால், ஒரு மனிதன் தனக்கு எதிராகவந்து, இவ்விதம் நல்லொழுக்கத்தைக்கூறிய தாங்கள், அவ்வொழுக்கத்தில் நடவாதது யாது காரணம் என்று வெட்கம் தோன்றி வருத்தும்படி கூறாதவண்ணம் ஆராய்ந்து சொல்லுதலாம்.

(க-ரை) நூல்களைக்கற்று, அவற்றிலுள்ள ஒழுக்கத்தைத் தன்நடக்கையில் காட்டவேண்டும்.

(இ-குறிப்பு) நில்லார்-வினையாலணையும்பெயர். படூஉம்உரை-பெயரெச்சம். வெற்றுரை-பண்புத்தொகை. சூழ்ந்துசொலல்-வினையெச்சம். வலியுடைமையென்பது உண்டு என்னும் பயனிலைகொண்டது.

22. பிறர்க்குப் பயன்பட தாங்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையார்—திறப்படூஉம்
தீவினை யஞ்சா விறல்கொண்டு தேன்புலத்தார்
கோவினை வேலை கோளல்.

(ப-ரை) தாம்கற்ற-தாம்படித்த சாஸ்திரப் பொருள்களை, பிறர்க்கு - மற்றவர்களுக்கு, பயன்பட - நன்மையுண்டாகும்படியாக, விற்பார்-விலைக்குவிற்பவர், தமக்கு-தங்களுக்கும், வேறுபயன் - மற்றொருநன்மையை, உடையார் - உடையவராயிருக்கின்றனர். (அது யாதென்றால்) திறப்படூஉம்-கள், களவு, சூது முதலாகப் பலவகைப் பட்ட, தீவினை-பாவகரமான செயல்களுக்கு, அஞ்சா - அஞ்சுதலில் லாத, விறல்கொண்டு - வல்லமையைக்கொண்டு, தென்புலத்தார்- தென்திசையிலுள்ள பிதிர்களுக்கு, கோவினை-தலைவணங்கிய எமனை, வேலைகொளல்-(தனக்குத் தண்டனையளிக்குமாறு) ஏவல்கொள்ளுத லாம்.

(பொ-ரை) தாம்படித்த சாத்திரப்பொருள்களை மற்றவர்க ளுக்கு நன்மையுண்டாகும்படியாக விலைக்குவிற்பவர் தங்களுக்கும் மற்றொரு நன்மையையுடையவராகவிருக்கின்றனர். அதுயாதெனில், கள், களவு, சூது முதலாகப் பலவகைப்பட்ட பாவகரமான செயல் களுக்கு அஞ்சுதலில்லாத வல்லமையைக்கொண்டு, தென்திசையி லுள்ள பிதிர்களுக்குத் தலைவணங்கிய எமனைத்தனக்குத் தண்டனை யளிக்குமாறு ஏவல்கொள்ளுதலாம்.

(க-ரை) பொருள் கருதாது சாஸ்திரப்பொருள்களைப் போதிப் பதே நன்மையைத் தரும்.

(இ-குறிப்பு) கற்ற - வினையாலணையும் பெயர். தென்புலம், தீவினை இவையிரண்டும் பண்புத்தொகைகள். அஞ்சாவிறல் - ஈறு கெட்ட வெதிர்மறைப்பெயரெச்சம். விற்பார் என்னும் எழுவாய் உடையார் என்னும் பயனிலைகொண்டது.

23. கற்பன ஊழற்றார் கல்விக் கழகத்தாங்
கோற்கமின் றூத்தைவாய் அங்காத்தல்—மற்றுத்தம்
வல்லுரு அஞ்சன்மின் என்பவே மாபறவை
புல்லுரு அஞ்சுவ போல்.

(ப-ரை) கற்பன-படிப்பதற்குக்காரணமான, ஊழ்-நல்விதி, அற்றார்-இல்லாதவர்கள், கல்விக்கழகத்து-வித்வான்களிருக்கும்சபையில், ஒற்கம்-வாய்அடக்கம், இன்று-இல்லாமல், ஊத்தை-அழுக்குப்படிந்த, வாய் - வாயை, அங்காத்தல் - திறந்துபேசுதல், மா - மிருகங்களும், பறவை-பறவைகளும், புல்உரு-புல்லினாற்செய்யப்பட்டவுருவத்தைப் பார்த்து, அஞ்சுவபோல் - பயந்து நடுங்குவதுபோல, வல்உரு - எமது வலிய உருவத்தைப்பார்த்து, அஞ்சன்மின்-பயப்படாதீர்கள். என்ப-என்று கூறுதற்கு ஒப்பாகும்.

(பொ-ரை) படிப்பதற்குக் காரணமான நல்விதியில்லாதவர்கள், வித்வான்களிருக்கும் சபையில் வாயடக்கம் இல்லாமல் அழுக்குப்படிந்த வாயைத்திறந்துபேசுதல், மிருகங்களும், பறவைகளும் புல்லினாற் செய்யப்பட்ட உருவத்தைப்பார்த்துப் பயந்து நடுங்குவது போல, எமது வலிய உருவத்தைப் பார்த்துப்பயப்படாதீர்கள் என்று கூறுதற்கு ஒப்பாகும்.

(க-ரை) கல்லாதவர் கற்றார் சபையிற்சென்று வாய்திறக்கலாகாது.

(இ-குறிப்பு) அற்றார் - வினையாலணையும் பெயர். அங்காத்தல்-தொழிற்பெயர். வல்லுரு - பண்புத்தொகை, புல்லுரு - மூன்றன் தொகை. அங்காத்தல் என்பது என்ப என்னும் பயனிலைகொண்டு முடிந்தது.

24. போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கோள் நகையினார் வாய்ச்சேரா—தாக்கணங்கும்
ஆணவாம் பெண்மை உடைத்தேனினும் பெண்ணலம்
பேடு கோளப்படுவ தில்.

(ப-ரை) போக்கு அறு - குற்றமில்லாத, கல்வி - வித்தைகள், புலம்-அறிவினால், மிக்கார்பாலன்றி - மேம்பட்டவரிடத்தல்லாமல்,

மீக்கொள்-மிகுதியாக, நகையினர்வாய் - சிரித்துப்பேசுபவரிடத்து, சேரா-வந்துஅடையா, தாக்குஅணங்கும் - நெருங்கித்துன்பமூட்டுகிற தெய்வமகளும், ஆண்-ஆடவர், அவாம்-விரும்பும்படியான, பெண்மை- பெண்தன்மைக்குரிய அழகை, உடைத்து எனினும் - பெற்றிருந்த போதிலும், பெண்நலம் - அம்மகளின் சுகத்தை, பேடு-அலியால், கொளப்படுவது இல்-அடையப்பெறுவதில்லை.

(பொ-ரை) குற்றமில்லாத வித்தைகள் அறிவினால் மேம்பட்ட வரிடத்தல்லாமல் மிகுதியாகச் சிரித்துப்பேசுபவரிடத்து வந்து அடையா. நெருங்கித் துன்பமூட்டுகிறதெய்வமகளும் ஆடவர் விரும் பும்படியான அழகைப் பெற்றிருந்தபோதிலும், அம்மகளின் சுகத்தை அலியால் அடையப்பெறுவதில்லை.

(க-ரை) நொடிபேசி காலத்தைக் கழிக்கும் கீழ்மக்களிடம் கல்வி யறிவு ஏற்படாது.

(இ-குறிப்பு) அறுகல்வி - வினைத்தொகை. பால், வாய்-இவை யிரண்டும் ஏழனுருபுகள். நகையினர் - குறிப்புவினையாலணையும் பெயர். தாக்கணங்கு - வினைத்தொகை. அவாம்பெண்மை - பெய ரெச்சம் - பேடுகொளப்படுவது - மூன்றன்தொகை. கல்வி என்பது சேரா என்னும் பயனிலைகொண்டது.

25. கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉம்
குற்றம் தமதே பிறிதன்று — முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன்.

(ப-ரை) கற்றன-தான் வாசித்தறிந்த நூற்பொருள்களை, கல் லார் - கல்லாதமூடருடைய, செவி - காதுகளில், மாட்டி - வலிய நுழைத்து, கையுறூஉம் - அதனால் அடைகின்ற, குற்றம் - குற்ற

மானது, தமதே-தம்முடையதேயாம்; பிறிதுஅன்று - பிறருடையது அல்ல. முற்றுஉணர்ந்தும் - எல்லாவற்றையும் அறிந்தும், அவர் தன்மை-அக்கல்லாதவருடைய தன்மையை, உணராதார்-அறியமுடியாதவர்கள், தம்உணரா-தமது பெருமையை யறியமாட்டாத, ஏதிலரை-மற்றவர்களை, நோவது-நொந்துகொள்வதில், எவன் - என்ன பிரயோஜனம்?

(பொ-ரை) தான் வாசித்தறிந்த நூற்பொருள்களை கல்லாத மூடர்களுடைய காதுகளில் வலிய நுழைத்து அதனாலடைகின்ற குற்றமானது தம்முடையதேயாம். பிறருடையதல்ல. எல்லாவற்றையும் அறிந்தும், அக்கல்லாதவருடைய தன்மையை யறியமுடியாதவர்கள் தமது பெருமையை யறியமாட்டாத மற்றவர்களை நொந்து கொள்வதில் என்ன பிரயோஜனம்?

(க-ரை) எவ்வளவு கற்றிருந்தாலும் பிறனை நிதானித்தறியக் கூடிய சக்தியில்லையானால், அக்கல்விக்குப் பெருமைகிடையாது.

(இ-குறிப்பு) கற்றன, உணராதார்-வினையாலணையும்பெயர்கள். உறும் குற்றம் - பெயரெச்சம். உணராஏதிலர் - ஈறுகெட்டவெதிர் மறைப் பெயரெச்சம். குற்றம்என்பது தமது என்னும் பயனிலை கொண்டது.

26. வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார் — மாத்தகைய
அந்தப் புரத்தது பூஞை புறங்கடைய
கந்துகோல் பூட்கைக் களிறு.

(ப-ரை)பூஞை-அற்பமானபூனையானது, மாத்தகைய-வளப்பம் பொருந்திய, அந்தப்புரத்தது - அரண்மனைக்கு உள்ளிடத்தில் இருக்கிறது. (என்றாலும் பெருமையடையாது) கந்து - கட்டுத்தறியை, கோல்-முறிக்கின்ற, பூட்கை-வலிமையுடைய, களிறு - மதயானையானது, புறங்கடைய - அரண்மனைக்கு வெளியிடத்தில் உள்ளது.

(என்றாலும் அதுபெருமை யடையும்) (அதுபோல) மிகல்மக்கள்-அறிவிற்சிறந்த பெரியோர். வேந்துஅவை - அரசனுடையசபையை, காவார்-காவல்காத்து இரார் (என்றாலும் பெருமையடைவர்) வேறு சிலர்-மற்றையோர், காத்ததுகொண்டு - காவல்காத்துஇருந்ததனால், உவப்பு-மகிழ்ச்சியுடன் கூடிய (பெருமையை), எய்தார்-அடையமாட்டார்கள்.

(பொ-ரை) அற்பமான பூனையானது, வளப்பம்பொருந்திய அரண்மனைக்கு உள்ளிடத்திலிருக்கிறது என்றாலும் பெருமையடையாது. கட்டுத்தறியை முறிக்கின்ற மதயானையானது, அரண்மனைக்கு வெளியிடத்துஉள்ளது என்றாலும் பெருமையடையும். அதுபோல, அறிவிற்சிறந்த பெரியோர் அரசனுடையசபையை காவல்காத்துக் கொண்டிரார் என்றாலும் பெருமையடைவர். மற்றையோர் காவல் காத்து இருந்ததனால் மகிழ்ச்சியுடன்கூடிய பெருமையை யடைய மாட்டார்கள்.

(க-ரை) அறிவுமிக்க பெரியோர் எவ்விடத்திலிருக்கினும், பெருமையடைவர். கீழ்மக்கள் எவ்விடத்திலிருக்கினும் பெருமை யடையார்.

(இ-குறிப்பு) வேந்து + அவை = வேந்தவை எனற்பாலது வேத்தவை எனத்திரிந்தது. ஆங்கு-அசை. கொல்களிறு-வினைத்தொகை.

27. குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்—அறவோர்க்
கடிகளே தெய்வம் அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை.

(ப-ரை) குலமகட்கு-நற்குலத்திற்பிறந்த மகளிர்க்கு, கொழுநனே-தம்நாயகனே, தெய்வம்-கடவுளாம். புதல்வர்க்கு-சற்புத்திரர்களுக்கு, தந்தையும்தாயும்-தந்தையும்தாயுமே, தெய்வம்-கடவுளாம். அறவோர்க்கு - ஒழுக்கத்தை மேற்கொண்டவர்களுக்கு, அடிகளே -

(ஒழுக்கத்தை உபதேசித்த) குருவே, தெய்வம்-கடவுளாம். அனை வோர்க்கும்-எல்லோர்க்கும், இலைமுகம் - பசியஇலைமுகத்தைப்போற் செய்யப்பட்ட, பைம்பூண்-பசியபொன்னலாகிய ஆ ப ர ண ங் க ளை யணிந்த, இறை-அரசனே, தெய்வம்-கடவுளாம்.

(பொ-ரை) நற்குலத்திற் பிறந்த மகளிர்க்குத் தம் நாயகனே கடவுளாம். சற்புத்திரர்களுக்குப் பெற்றோரே கடவுளாம். ஒழுக் கத்தை மேற்கொண்டவர்களுக்கு அவ்வொழுக்கத்தை யுபதேசித்த குருவேகடவுளாம். எல்லோர்க்கும் பசியஇலைமுகம்போற் செய்யப் பட்ட பொன்னலாகிய ஆபரணங்களையணிந்த அரசனே கடவுளாம்.

(க-ரை) குலமகள், தன்கணவனையும்; புத்திரர்கள் பெற்றோர் களையும்; ஒழுக்கத்தில் நடப்பவர் குருவையும்; உலகத்தினர் அரசனை யும் கடவுளாக மதித்து வணங்கவேண்டும்.

(இ-குறிப்பு) கொழுநனே, அடிகளே-இவற்றில்உள்ள ஏகாரங் கள் தேற்றப்பொருளன. மன்ற-இடைச்சொல். தந்தையும்தாயும்- இவற்றிலுள்ள உம்மைகளிரண்டும் எண்ணுப்பொருளன. பைம்பூண்- பண்புத்தொகை.

28. கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினும்—தண்ணளியால்
மன்பதை ஓம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு.

(ப தை) கண்ணில் - கண்களினல், சொலி - வேலையாட்களை ஏவி, செவியின்-காதுகளினல், நோக்கும் - மற்றவர்களுடைய தன் மையைத் தெரிந்துகொள்ளும்படியான, இறைமாட்சி-அரசச்செல்வ மானது, புண்ணியத்தின் - பூர்வஜன்மத்திற்செய்த புண்ணியவசத் தால் (கிடைக்கக்கூடிய), பாலது-தன்மையுடையது. ஆயினும் - ஆக இருந்தபோதிலும், தண் அளியால்-குளிர்ந்த கிருபையால், மன்பதை- குடிகளை, ஓம்பாதார்க்கு-ஆளாத அரசர்களுக்கு, என் ஆம்-(அச்செல்வம்)

யாது பயனைக்கொடுக்கும். வயம் - வெற்றியைக்கொடுக்கின்ற, படை-வில், வாள், வேல் முதலிய ஆயுதங்கள், ஆண்அல்லவர்க்கு - ஆண்தன்மையற்ற பேடிகளிடத்து, என்பயக்கும் - யாதுபயனையளிக்கும்.

(பொ-ரை) கண்களினால் வேலையாட்களை ஏவி, காதுகளினால் மற்றவர்களுடைய தன்மையைத் தெரிந்துகொள்ளும்படியான அரசச்செல்வமானது, பூர்வஜன்மத்திற் செய்த புண்ணியவசத்தால் கிடைக்கக்கூடிய பெருமையையுடையதுஆகஇருந்தபோதிலும், குளிர்ந்த கிருபையால் குடிகளை ஆளாத அரசர்களுக்கு அச்செல்வம் யாதுபயனைக்கொடுக்கும்? வெற்றியையளிக்கும் வில், வாள் முதலிய ஆயுதங்கள் ஆண் தன்மையற்ற பேடிகளிடத்து யாது பலனையளிக்கும்.

(க-ரை) குடிகளை கிருபையுடன் ஆளாத அரசன் எவ்வளவு செல்வத்தைப் பெற்றிருந்தாலும், அதனால் அவன் பயனடையமாட்டான்.

(இ-குறிப்பு) இறைமாட்சி-ஆறன்தொகை. தண்அளி-இரண்டன்தொகை. ஓம்பாதார்க்கு-வினையாலணையும்பெயர். இறைமாட்சி என்பது என்னும் என்னும் பயனிலைகொண்டது.

29. குடிகொன் றிறைகொள்ளும் கோமகற்குக் கற்ற
மடிகொன்று பால்கொளலும் மாண்பே—குடியோம்பி
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

(ப-ரை)குடி-குடிகளை, கொன்று-பலவிதமாகத் துன்பப்படுத்தி, இறைகொள்ளும்-பகுதியைவசூலிக்கின்ற,கோமகற்கு-ஒரு அரசனைக் காட்டிலும், கன்றுஆ-கன்றையுடையபசுவினது, மடி - பால்மடியை, கொன்று-கிழித்து, பால்கொளலும்-பாலைக்கொள்ளுதலும், மாண்பு-நல்லது. குடி-குடிகளை, ஓம்பி-நானாவிதத்திலும் பாதுகாத்து,

கொள்ளுமா - வசூலிக்கவேண்டிய முறையில், கொள்வோர்க்கு - வசூலிக்கின்ற அரசர்க்கு, வெள்ளத்தின்மேலும் - வெள்ளம்என்னும் ஒருபெருந்தொகையைக்காட்டிலும், பல - பலவிதமான, மாநிதியம் - மிகுந்த ஐசுவரியம், காண்டும்-உண்டாகும்.

DR. J. S. VICTOR ... MADURAI

(பொ-ரை) குடிகளைப் பலவிதமாகத் துன்பப்படுத்திப் பகுதியை வசூலிக்கின்ற ஒரு அரசனைக்காட்டிலும் கன்றையுடைய பசுவினது பால்மடியைக் கிழித்துப் பாலைக்கொள்ளுதலும் நல்லது. குடிகளை நானாவிதத்திலும் பாதுகாத்து வசூலிக்கவேண்டிய முறையில் வசூலிக்கின்ற அரசர்க்கு வெள்ளம் என்னும் ஒரு பெருந்தொகையைக்காட்டிலும் பலவிதமான மிகுந்த ஐசுவரியம் உண்டாகும்.

(க-ரை) நீதிமுறையில் நடக்கின்ற செங்கோலரசர்க்கு மிகுந்த ஐசுவரியம் உண்டாகும். இதுபோல் நன்னெறியில் நடக்கின்ற மக்களுக்கும் மிகுந்த ஐசுவரியம் ஏற்படும்.

(இ-குறிப்பு) கொள்ளும்மகன்-பெயரெச்சம். கோமகன்-பண்புத்தொகை. கொன்று-வினையெச்சம். கன்று + ஆ = கற்றா. வெள்ளம் என்பது கணிதத்தில் ஒரு பெருந்தொகையாகும். நிதியம் என்பது காண்டும் என்னும் பயனிலைகொண்டது.

30. இன்று கோளற்பால நாளைக் கோளப்போறான்
நின்று குறையிரப்ப நேர்படான் —சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேடலன் வேந்து மலன்.

(ப-ரை) இன்று - இன்றையதினம், கொளற்பால - கொள்ள வேண்டிய வரியை, நாளை - மறுதினம், கொளப்பொறான் - பெற்றுக் கொள்வதற்குச்சம்மதியான், நின்று - (ஒருவன் தனக்கு)எதிரில் நின்றுகொண்டு, குறை-வேண்டியவற்றை, இரப்ப - சொல்லியாசிக்க, நேர்படான்-அதற்கும் மனம் இணங்கான். ஒருவன்சென்று-ஒருவன்

போய், ஆவன-இராஜாங்கத்தில் நடக்கவேண்டியவற்றை, கூறின் - எடுத்துச்சொன்னால், எயிறுஅலைப்பான் - பல்லை நெறுநெறு என்று கடித்துபயமுறுத்துவான். (இத்தகைய அரசன்) ஆறு-காட்டுமார்க்கத்தில் செல்வோரை, அலைக்கும்-கொள்ளையிட்டுவருத்துகின்ற, வேடும் அலன்-வேடுவனுமாகான், வேந்தும்அலன்-அரசனும்ஆகான்.

(போ-ரை) இன்றையதினம் கொள்ளவேண்டியவரியைமறுதினம் பெற்றுக்கொள்வதற்கும் சம்மதியான்; ஒருவன் எதிரில்நின்றுகொண்டு வேண்டியவற்றைச் சொல்லியாசிக்க அதற்கும் மனம் இணங்கான்; ஒருவன்போய் இராஜாங்கத்தில் நடக்கவேண்டியவற்றை எடுத்துச்சொன்னால் பல்லைக்கடித்துப் பயமுறுத்துவான். இத்தகைய அரசன், காட்டுமார்க்கத்தில் செல்வோரைக் கொள்ளையிட்டுவருத்துகின்ற வேடுவனுமாகான் அரசனுமாகான்.

(க-ரை) பலவிதத்திலும் குடிகளை வருத்துகின்ற அரசன் பலராலும் இகழப்படுவான்.

(இ-குறிப்பு) கொளற்பால, ஆவன-வினையாலணையும்பெயர்கள். அலைக்கும்வேடு-பெயரெச்சம். வேடு, வேந்து-இவையிரண்டும் ஆகுபெயர்களாய் அத்தன்மையுடையாரை யுணர்த்தின. அரசன் என்னும்தோன்றா எழுவாய்க்கு அலன் இரண்டும் பயனிலைகளாகவந்தன.

31. முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப உடுத்துண்ப உண்ணு—இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிக்கொள்ளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்.

(ப-ரை) முடிப்ப-முடிப்பதற்குரிய புஷ்பங்களை, முடித்து-சூடியும், பின்-பிறகு, பூசுவ-பூசத்தகுந்த வாசனைத்திரவியங்களை, பூசி-பூசியும், உடுப்ப - உடுக்கத்தகுந்தபட்டாடைகளை, உடுத்து - உடுத்தியும், உண்ப - உண்ணத்தகுந்த ஆகாராதிகளை, உண்ணு - உண்டும் (இருக்கின்றவனிடம்) இடித்துஇடித்து-மிகவும்நெருங்கி, கட்டுரை-

பயனளிக்கும் விஷயங்களை, கூறின்-ஒருவர் சென்றுகூறினால், செவிக்கொளா-(அவன்) காதுகொடுத்துக்கேளான், கண்விழியா-கண்விழித்துப்பாரான், (அத்தகையான்) நெடு - நீண்ட, உயிர்ப்போடு - பெருமூச்சு எறிதலுடன், உற்ற-கூடிய, பிணம்-பிணத்திற்கு ஒப்பாவான்.

(பொ-ரை) முடிப்பதற்குரிய புஷ்பங்களைச் சூடியும், பிறகு பூசத்தகுந்த வாசனைத்திரவியங்களைப் பூசியும், உடுக்கத்தகுந்த பட்டாடைகளை உடுத்தியும், உண்ணத்தகுந்த ஆகாராதிகளை உண்டும் இருக்கின்றவனிடம் மிகவும் நெருங்கி பயனளிக்கும் விஷயங்களை ஒருவர் சென்று கூறினால் அவன் காதுகொடுத்துக்கேளான்; கண் விழித்தும் பாரான். அத்தகையான் நீண்ட பெருமூச்செறிதலுடன் கூடிய பிணத்திற்கு ஒப்பாவான்.

(க-ரை) பிறர்கூறும் உறுதிப்பொருள்களைக் கேளாதவனைப் பிணத்திற்கு ஒப்பாகக் கூறலாம்.

(இ-குறிப்பு) முடிப்ப, பூசுவ, உடுப்ப, உண்ப இவைகள் வினையாலணையும் பெயர்கள். உண்ணு-செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஒருவன் என்னும் தோன்றா எழுவாய் பிணம் என்னும் பயனிலைகொண்டது.

32. ஒற்றில் தேரியா சிறைப்புறத் தோர்துமெனப்
போற்றேள் துணையாத் தெரிதந்தும்—குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினும் கேளாமை யன்று.

(ப-ரை) ஒற்றில்-தூதுவர்களால், தெரியா-உண்மைதெரியாது; சிறைப்புறத்து-மறைவிடங்களிற்சென்று, ஓர்தும்என-தெரிந்துவருவோம்என்று, பொன்தோள்-அழகமைந்த தன் தோள்களை, துணையா-உதவியாகக்கொண்டு, தெரிதந்தும்-தானேநேரில் பார்த்தும், குற்றம்-ஒருவரிடமுள்ள குற்றங்களை, அறிவு அரிதென்று-தெரிந்துகொள்வது கஷ்டமானதென்று, அஞ்சுவதே - பயப்படுவதே, செங்கோன்மை-

செங்கோலரசாட்சியாம். சென்று-ஒருவன்நேரிற்போய், முறையிடினும்-தன்குறைகளை முறையிட்டவிடத்தும், கேளாமை - காதினால் கேளாதிருப்பது, அன்று-செங்கோன்மையல்ல.

(பொ-ரை) தூதுவர்களால் உண்மைதெரியாது, மறைவிடங்களிற்சென்று தெரிந்துவருவோமென்று, அழகமைந்த தன்தோள்களே உதவியாகக்கொண்டு தானே நேரில் பார்த்தும் ஒருவரிடமுள்ள குற்றங்களைத் தெரிந்துகொள்வது கஷ்டமானதென்று பயப்படுவதே செங்கோலரசாட்சியாம். ஒருவன் நேரிற்போய்த் தன் குறைகளை முறையிட்டவிடத்தும் காதினால் கேளாதிருப்பது செங்கோன்மையல்ல.

(க-ரை) எவ்வளவு ஆராய்ந்தாலும் ஒருவன் செய்தகாரியத்தின் உண்மையை யுள்ளவாறு அறிவது சிரமமாகும்.

(இ-குறிப்பு) தெரியா-வினைமுற்று. ஓர்தும் - தன்மை வினைமுற்று. பொன்தோள், செங்கோல்-பண்புத்தொகைகள். கேளாமை-தொழிற்பெயர். அஞ்சுவது என்பது செங்கோன்மை என்பதைக் கொண்டு முடிந்தது.

33. ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோதோரீஇக் கொள்கை முதிக்குறைவு—நேர்நின்று
காக்கை வெளிதென்பார் என்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு.

(ப-ரை) நேர்நின்று-நேரே பார்த்துக்கொண்டிருந்து, காக்கை-காகத்தை, வெளிது என்பார்-வெண்ணிறம் உடையதுஎன்று கூறுபவர். என்சொலார் - வேறுயாதுசொல்லார், தாய் - பெற்றதாயை, கொலை-உயிர்வாங்குதல், சால்புடைத்து-மிகவும் நல்லது, என்பாரும்-என்று சொல்லுபவரும், உண்டு-உலகத்தில் சிலரிருக்கின்றனர். (அதனால்) ஏதிலார்-மற்றவர்கள், யாதும்-மெய்ம்மைபொய்ம்மையாகிய எல்லாம், புகல-சொல்ல, இறைமகன்-உலகையாளும் அரசனானவன்,

கோது-அவற்றிலுள்ள குற்றங்களை, ஒரீஇ-நீக்கி, கொள்கை-குணத்தை மட்டும் கொள்ளுதல், முதுக்குறைவு-சிறந்த அறிவாகும்.

(பொ-ரை) நேரே பார்த்துக்கொண்டிருந்து காகத்தைவெண்ணிறமுடையது என்று கூறுபவர் வேறுயாதுசொல்லார். பெற்ற தாயை உயிர்வாங்குதல் மிகவும்நல்லது என்று சொல்லுபவரும் உலகத்திற் சிலரிருக்கின்றனர். அதனால் மற்றவர்கள், மெய்மைபொய்மையாகிய எல்லாம்சொல்ல, உலகையாளும் அரசனானவன் அவற்றிலுள்ள குற்றங்களைநீக்கிக் குணத்தைமட்டும் கொள்ளுதல் சிறந்த அறிவாகும்.

(க-ரை) யார் எதைச் சொன்னாலும் அவற்றிலுள்ள குணகுற்றங்களை யாராய்ந்தறிவதே அரசனுக்குப்பேரறிவாம்.

(இ-குறிப்பு) ஒரீக-அளபெடை. என்பார்இரண்டும் வினையாலணையும் பெயர்கள். கொள்கை என்பது முதுக்குறைவு என்னும் பயனிலைகொண்டு முடிந்தது; அதற்குமேல் ஆம் என்பது சேர்த்து முதுக்குறைவாம் எனக்கொள்க.

34. கண்கூடாப் பட்டது கேடெனினும் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகும்—மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து.

(ப-ரை) மண்டு-மிகுந்த, எரிவாய் - அக்கினியினிடத்து, மடுப்பினும்-இருந்தபோதிலும், மாசுணம் - மலைப்பாம்புகளானவை, பெருமூச்சு-பெரியமூச்சு, எறிந்து - விட்டுக்கொண்டு, பேரா - அதை விட்டு நீங்காமல், கண்துயில்வ - நித்திரைசெய்வனவாம். (அது போல) கண்கூடாப்பட்டது - கண்ணாரக்கண்டது, கேடுஎனினும் - துன்பந்தரும் காரியமானாலும், கீழ்மக்கட்கு-தாழ்ந்த அறிவினர்க்கு,

உணர்ச்சி-(அதினின்றும்விலகும்) நல்லறிவு, உண்டோ-ஏற்படுமோ, இல்ஆகும்-ஏற்படாதாகும்.

(பொ-ரை) மிகுந்த அக்கினியினிடத்து இருந்தபோதிலும் மலைப்பாம்புகளானவை பெரிய மூச்சுவிட்டுக்கொண்டு அதை விட்டு நீங்காமல் நித்திரை செய்வனவாம். அதுபோல கண்ணாரக் கண்டது துன்பந்தரும் காரியமானாலும் தாழ்ந்த அறிவினர்க்கு அதினின்றும் விலகும் நல்லறிவு ஏற்படுமோ ஏற்படாதாகும்.

(க-ரை) செய்யும் காரியம் குற்றம் என்று தெரிந்தாலும் கீழ் மக்கள் அதனையே செய்வர்.

(இ-குறிப்பு) மற்று இடைச்சொல். உம்மைகளிரண்டும் உயர்வு சிறப்புப் பொருள்களைக் கொடுத்தன. உணர்ச்சி என்பது இல்லாகும் என்னும் பயனிலைகொண்டது. மாசுணம் என்பது துயில்வ என்னும் பயனிலைகொண்டது.

35. நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிரி தாதல்
கேடுவது காட்டும் குறி.

(ப-ரை) நட்பு-சிநேகமாயுள்ளவர்களை, பிரித்தல்-விரோதித்துக் கொள்ளுதலும், பகை-விரோதமாயிருப்பவரை, நட்டல்-சிநேகஞ் செய்துகொள்ளுதலும், ஒற்று-தூதுவரை, இகழ்தல்-இகழ்ச்சியாய்ப் பேசுதலும், பக்கத்தார்யாரையும்-தன்பக்கத்தில் உள்ள எல்லோரை யும், ஐயுறுதல்-சந்தேகித்தலும், தக்கார் - பெரியோருடைய, நெடு மொழி-உறுதிச்சொற்களை, கோறல்-கேளாது அமைதித்தலும், குணம் பிறிதுஆதல்-நல்லகுணத்தினின்றுமாறுபடுதலும், (ஆகியவை) கெடு வது-(ஒருவன்பின்னால்) கெட்டுப்போவதை, காட்டும் - (முன்னால்) தெரிவிக்கின்ற, குறி-அடையாளங்களாம்.

(பொ-ரை) சினேகமாயுள்ளவர்களை விரோதித்துக்கொள்ளுதலும் விரோதமாயிருப்பவரை சினேகஞ்செய்துகொள்ளுதலும், தூதுவரை இகழ்ச்சியாய்ப்பேசுதலும், தன் பக்கத்தில் உள்ள எல்லோரையும் சந்தேகித்தலும், பெரியோருடைய உறுதிச்சொற்களைக்கேளாது அவமதித்தலும், நல்லகுணத்தினின்று மாறுபடுதலும் ஆகியவை ஒருவன்பின்னால் கெட்டுப்போவதை முன்னால்தெரிவிக்கின்ற அடையாளங்களாம்.

(க-ரை) சினேகனை விரோதித்தல் முதலிய கெட்டகுணங்களை விட்டொழிக்கவேண்டும்.

(இ-குறிப்பு) பிரித்தல், நட்டல், இகழ்தல், கோறல், ஆதல் என்பவற்றினீற்றிலுள்ள உம்மைகள் தொக்கன. இவையனைத்தும் தொழிற்பெயர்கள். காட்டும்குறி - பெயரெச்சம். இவை என்னும் தோன்றாஎழுவாய் குறிஎன்னும் பயனிலைகொண்டது.

36. கண்ணேக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா — வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு.

(ப-ரை) கண்நோக்கு - கண்ணின் பார்வையே, அரும்பு ஆ - மொட்டாகவும், முகம் நகையே-முகத்தில்தோன்றும் புன்சிரிப்பே, நாள் - அன்றலர்ந்த, மலர்ஆ - புஷ்பமாகவும், இன்மொழியின் - இனிமைபொருந்திய சொற்களின், வாய்மையே - உண்மைத்தன்மையே, தீம்காய்ஆ - மதுரம்பொருந்திய காயாகவும், வண்மை-யாசகர்க்குக் கொடுக்கும் கொடையே, பலமா - சிறந்த பழமாகவும் (கொண்டு), நலம்கனிந்த-இத்தகைய நன்மைகள் நிறைந்த, பண்பு உடையார்-நல்ல குணங்களையுடைய பெரியோர், அன்றே-அல்லவா, சலியாத-மனந்தளராத, கற்பதரு-கற்பகவிருக்ஷமாவார்.

(பொ-ரை) கண்ணின் பார்வையே மொட்டாகவும், முகத்திற் ரேன்றும் புன்சிரிப்பே அன்றலர்ந்த புஷ்பமாகவும், இனிமை பொருந்திய சொற்களின் உண்மைத்தன்மையே மதுரம்பொருந்திய காயாகவும், யாசகர்க்குக் கொடுக்கும் கொடையே சிறந்த பழமாகவும் கொண்டு இத்தகைய நன்மைகள் நிறைந்த நல்ல குணங்களையுடைய பெரியோர் அல்லவா மனந்தளராத கற்பகவிருக்ஷமாவார்.

(க-ரை) நற்குணங்களமைந்த பெரியோர் எல்லோராலும் சிறப்பெய்துவர்.

(இ-குறிப்பு) இன்மொழி-பண்புத்தொகை. கனிந்த, சலியாத-பெயரெச்சங்கள். பண்புடையார் என்பது கற்பதரு என்னும் பயனிலைகொண்டது. கற்பகதரு எனற்பாலது கற்பதரு என்ருயிற்று; இது வடசொல். இச்செய்யுளில், கள், நகை, வாய்மை, வண்மை முதலியன அரும்பு, மலர், காய், பழம் முதலியனவாக உருவகஞ் செய்யப் பெற்றிருத்தலின் இது உருவகவணியாம்.

37. வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருரு—ஆங்கதுகோண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று.

(ப-ரை) வாங்கும்-தான் எடுத்துக்கொள்ளும், கவளத்து - ஒரு பிடியரிசியில், ஒருசிறிது -மிகவும் கொஞ்சமானது, வாய் தப்பின்-வாயிலிருந்து தவறிவிழுந்தால், தூங்கும்-அசைந்துகொண்டு நிற்கின்ற, களிறோ-யானையோ, துயர்உரு -(அதனல்) துன்பமடையாது. அதுகொண்டு - அச்சிந்திய அரிசியைக்கொண்டு, ஊரும் - நகர்ந்துசெல்லுகின்ற, எறும்பு-எறும்புகளானவை, இங்கு - இவ்வுலகத்தில், ஆரும் - பொருந்திய, கிளையோடு - தம்சுற்றத்துடன், அயின்று-சாப்பிட்டு, ஒருகோடி-ஒருகோடிக்கணக்காக, உய்யும்-ஜீவிக்கும்.

(பொ-ரை) தான் எடுத்துக்கொள்ளும் ஒருபிடியரிசியில் மிகவும் கொஞ்சமானது வாயிலிருந்து தவறிவிழுந்தால், அசைந்து கொண்டிருக்கின்ற யானையோ அதனால் துன்பமடையாது. அச்சிந்திய அரிசியைக்கொண்டு நகர்ந்துசெல்லுகின்ற எறும்புகளானவை இவ்வுலகத்தில் பொருந்திய தம் சுற்றத்துடன் சாப்பிட்டு ஒரு கோடிக்கணக்காக ஜீவிக்கும்.

(க-ரை) உலகத்தில் ஒவ்வொருவனும் கஷ்டமில்லாமல் தருமஞ் செய்யலாம்.

(இ-குறிப்பு) வாங்கும் கவளம், தூங்கும்களிறு, ஆரும்கிளை இவை பெயரெச்சங்கள். ஒருசிறிது, ஒருகோடி-பண்புத்தொகைகள். ஆங்கு-அசை. களிறு என்பது உரு என்னும் பயனிலைகொண்டது. எறும்புஎன்பது உய்யும்என்னும் பயனிலைகொண்டது.

38. மாகஞ் சிறுகக் குவித்து நிதிக்குவை
ஈகையி னெக்கழுத்த மிக்குடைய—மாகோல்
பகைமுகத்த வோள்வேலான் பார்வையில் தீட்டு
நகைமுகத்த நன்கு மதிப்பு.

(ப-ரை) மாகம்-ஆகாயமானது, சிறுக-மிகவும் சிறியது என்று கூறும்படியாக, நிதிக்குவை - திரவியக்குவியல்களை, குவித்து - சேகரித்துவைத்துக்கொண்டு, ஈகையின் - வேண்டியவர்க்குக்கொடுத்துப் புகழ்பெறுதலினும், மா-மதயானைகளை, கொல்-கொல்லும்படியான, பகைமுகத்த-கோபத்தன்மைமிக்குடைய, ஒள்-பிரகாசம்பொருந்திய, வேலான்-வேற்படையையுடைய அரசனது, பார்வையில் - கண்பார்வையால், தீட்டும்-எழுதும்படியான, நகைமுகத்த - சிரித்த முகத்திலுள்ள, நன்குமதிப்பு-நன்மதிப்பானது, எக்கழுத்தம்-பெருமையுடன் விளங்குவதை, மிக்குஉடைய-மிகவும் உடையதாம்.

(பொ-ரை) ஆகாயமானது, மிகவும் சிறியது என்று கூறும்படியகாத் திரவியக் குவியல்களைச் சேகரித்துவைத்துக்கொண்டு வேண

டியவர்க்குக் கொடுத்துப் புகழ்பெறுதலினும், மதயானைகளைக்கொல் லும்படியான கோபத்தன்மைமிக்குடைய பிரகாசம்பொருந்திய வேற் படையையுடைய அரசனது கண்பார்வையால் எழுதும்படியான சிரித்தமுகத்திலுள்ள நன்மதிப்பானது பெருமையுடன் விளங்குவதை மிகவும் உடையதாம்.

(க-ரை) செயற்கரிய செயலைச் செய்து அரசரது நன்மதிப்பைப் பெறுதல் சிறந்ததாம்.

(இ-குறிப்பு) நிதிக்குவை - மூன்றன்தொகை. மிக்குடையது எனற்பாலது கடைக்குறைந்து மிக்குடைய என நின்றது. முகத்த- பெயரெச்சம். மதிப்புஎன்பது மிக்குடையது என்னும் பயனிலை கொண்டது.

39. களைகணுத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்—தளர்நடைய
தூனுடம் பென்று புகழுடம் போம்புதற்கே
தானுடம் பட்டார்க டாம்.

(ப-ரை) ஊன்-மாமிசபிண்டத்தாலாகிய, உடம்பு-சரீரமானது, தளர்நடையது-நாளடைவில் தளர்ச்சியடைந்து அழியும் தன்மையது, என்று-என்றுநினைத்து, புகழ் - என்றும் நிலைத்துநிற்கும் புகழாகிய, உடம்பு-உடம்பை, ஓம்புதற்கு-பேணிக்காப்பதின்பொருட்டு, உடம் பட்டார்கள்-மனமுடையவர்கள், தம்-தம்மையே, களைகணா-பற்றுக் கோடாக, அடைந்தார்க்கு-அண்டினவர்களுக்கு, உற்றுழியும்-துன்ப மேற்பட்டவிடத்தும், மற்றோர்-வேறொரு, விளைவு-சுகத்தை,உன்னி- அனுபவிக்கவிரும்பியும், வெறுஉடம்பு-வீணானசரீரத்தை, தாங்கார்- வைத்துக்கொண்டிரார்.

(பொ-ரை) மாமிசபிண்டத்தாலாகிய சரீரமானது, நாளடை வில் தளர்ச்சியடைந்து அழியுந்தன்மையது என்றுநினைத்து, என் றும் நிலைத்துநிற்கும் புகழாகிய உடம்பைப் பேணிக்காப்பதின்

பொருட்டு மனமுடையவர்கள், தம்மையே பற்றுக்கோடாக அண்டினவர்களுக்குத் துன்பமேற்பட்டவிடத்தும், வேறொரு சுகத்தையனுபவிக்க விரும்பியும் வீணான சரீரத்தை வைத்துக்கொண்டிரார்.

(க-ரை) பெரியோர் புகழுடம்பை நிலைநாட்டுவதற்குத் தம் சரீரத்தையும் கொடுப்பர். (அழிப்பர்)

(இ-குறிப்பு) உற்றஉழி எனற்பாலது உற்றுழிஎன்றாயிற்று. வெற்றுடம்பு, புகழுடம்பு-பண்புத்தொகைகள். உடம்பட்டார்-வினையாலணையும்பெயர். உடம்பட்டார் என்பது தாங்கார் என்னும் பயனிலைகொண்டது.

40. தம்முடை யாற்றலும் மானமுந் தோற்றுத்தம்
இன்னுயி ரோம்பினு மோம்புக — பின்னர்ச்
சிறுவரை யாயினு மன்ற தமக்காங்
கிறுவரை யில்லை யெனின்.

(ப-ரை) பின்னர்-பிற்பாடு, சிறுவரை ஆயினும்-சிறிய குற்றமேனும், தமக்கு - கேவலமான தொழில்செய்பவருக்கு, இறுவரை-அவர் இறக்கும் வரையிலும், இல்லைஎனின் - ஏற்படாதென்றால், தம்முடை-தம்முடைய, ஆற்றலும்-வல்லமையும், மானமும் - பெருமையும், தோற்று-இழந்து, தம்-தம்முடைய, இன்னுயிர் - இனிமையான உயிரை, ஓம்பினும்-பாதுகாக்கவேண்டுமென்றாலும், ஓம்புக - பாதுகாக்கக் கடவர்.

(பொ-ரை) பிற்பாடு சிறிய குற்றமேனும் கேவலமானதொழில் செய்பவருக்கு அவர் இறக்கும் வரையிலும் ஏற்படாதென்றால், தம்முடைய வல்லமையும், பெருமையும் இழந்து தம்முடைய இனிமையான உயிரை பாதுகாக்கவேண்டுமென்றாலும் பாதுகாக்கக்கடவர்.

(க-ரை) ஒருவன் தனது வல்லமையும் பெருமையுமிழந்து உயிர் வைத்துக்கொண்டிருப்பதிலும் இறப்பதே மேல்.

(இ-குறிப்பு) ஆற்றலும் மானமும் என்பவற்றிலுள்ள உம்மைகள் எண்ணுப்பொருளன. இன்னுயிர்-பண்புத்தொகை. ஓம்பினும் என்பதிலுள்ள உம்மையிழிவு சிறப்பு. ஓம்பினும் என்றதனால் ஓம்பாமையே நன்று என்பது பெறப்பட்டது. மன்ற என்பதிடைச்சொல். தாம் என்னும் தோன்றா எழுவாய் ஓம்புக என்னும் பயனிலைகொண்டது.

41. கலனழிந்த கற்புடைப் பெண்டிரு மைந்து
புலனொருங்கப் பொய்யொழிந் தாரும் – கொலைஞாட்பில்
மொய்ம்புடை வீரரு மஞ்சார் முரண்மறலி
தும்பை முடிசூடி னும்.

(ப-ரை) கலன் அழிந்த - திருமாங்கல்யத்தை யிழந்த, கற்பு உடை-கற்புத்தன்மைபொருந்திய, பெண்டிரும்-பெண்களும், ஐந்து புலன்-ஐவகைப்பட்ட புலன்களையும், ஒருங்க-நாசமடையும்படியாக, பொய்-பொய்மையோடுகூடிய உலகவின்பத்தை, ஒழிந்தாரும்-வெறுத்துநின்றவரும், கொலைஞாட்பில்-கொலைசெய்யும்போர்க்களத்தில், மொய்ம்பு உடை - வல்லமையுடைய, வீரரும்-சுத்தவீரரும், முரண்-மிகுந்த வல்லமையுடைய, மறலி-இயமனானவன், தும்பை-வெற்றிக்கடையாளமான தும்பைப்பூமாலையை, முடிசூடினும்-சிரசின்கண்ணே தரித்துவந்தாலும், அஞ்சார் - தன் ஒழுக்கத்தினின்றும் மனந்தளரார்.

(பொ-ரை) திருமாங்கல்யத்தையிழந்த கற்புத்தன்மைபொருந்திய பெண்களும், ஐவகைப்பட்ட புலன்களையும் நாசமடையும்படியாக பொய்மையோடு கூடிய உலகவின்பத்தை வெறுத்து நின்றவரும், கொலைசெய்யும் போர்க்களத்தில் வல்லமையுடைய சுத்தவீரரும், மிகுந்த வல்லமையுடைய இயமனானவன் வெற்றிக்கடையாளமான தும்பைப்பூமாலையைச் சிரசின்கண்ணே தரித்துவந்தாலும் தன் ஒழுக்கத்தினின்றும் மனந்தளரார்.

(க-ரை) உயிரினும் சிறந்த மானத்தைக் காப்பதன்பொருட்டு, கற்புடைப் பெண்டிர் முதலியோர் உயிரையும் கொடுப்பர்.

(இ-குறிப்பு) அழிந்தபெண்டிர்-பெயரெச்சம். ஐந்துபுலன்-பண்புத்தொகை. ஒழிந்தார்-வினையாலணையும்பெயர். மறலி - வல்லமையுடையவன். புலன்பொறிகளால் அறியப்படும் விஷயம். பெண்டிர், ஒழிந்தார் முதலியன அஞ்சார் என்னும் பயனிலைகொண்டன.

42. புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறும்
கழிமுடை நாற்றத்த வேனும்—விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோ டுதற்கு.

(ப-ரை) புழு-புழுக்களானவை, நெளிந்து-நெளிந்துகொண்டு, புண் அழுகி- (உடம்பில்) புண்கள்அழுகி, யோசனை-யோசனைதூரம், நாறும்-துர்நாற்றம் வீசும்படியான, கழிமுடைநாற்றத்தவேனும்-மிகுதியான கெட்டநாற்றமுடையதாயிருந்தபோதிலும், விழலர் - மூடர்கள், விளிவு-இறத்தலை, உன்னி-நினைத்து, வெய்துயிர்ப்பர் - பெருமூச்செறிந்து வருந்துவர்; மெய்ப்பயன்-சரீரம்கிடைத்ததனால் செய்ய வேண்டிய நற்பயனை, கொண்டார் - முன்னாலேயேசெய்துகொண்டவர், சுமை-சரீரமாகிய பெருஞ்சுமையை, போடுதற்கு-(கேவலமானதென்று) தொலைப்பதற்கு, சுளியார்-சிறிதும் வருந்தார்.

(பொ-ரை) புழுக்களானவை நெளிந்துகொண்டு உடம்பில் புண்கள்அழுகி யோசனைதூரம் துர்நாற்றம் வீசும்படியான மிகுதியான கெட்டநாற்றமுடையதாயிருந்தபோதிலும் மூடர்கள் இறத்தலை நினைத்துப் பெருமூச்செறிந்து வருந்துவர். சரீரம் கிடைத்ததனால், செய்யவேண்டிய நற்பயனை முன்னாலேயே செய்துகொண்டவர் சரீரமாகிய பெருஞ் சுமையைக் கேவலமானதென்று தொலைப்பதற்குச் சிறிதும் வருந்தார்.

(க-ரை) பெரியோர் இறப்பிற்கு வருந்தார். மூடர்கள் இறப்பைக் குறித்து மிகவும் வருந்துவர்.

(இ-குறிப்பு) நெளிந்து-வினையெச்சம். நாறும் - பெயரெச்சம். கழி-மிகுதிப்பொருள்தரும் உரிச்சொல். மெய்ப்பயன்-மூன்றனுருபும் பயனுமுடன்றொக்கதொகை. விழலர் என்பது வெய்துயிர்ப்பர் என்னும் பயனிலைகொண்டது. கொண்டார் என்பது சுளியார் என்னும் பயனிலைகொண்டது.

43. இகழின் இகழ்ந்தாங் கிறைமக னொன்று
புகழினும் ஒக்கப் புகழ்ப — இகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
நீர்வழிப் பட்ட புணை.

(ப-ரை) இறைமகன்-உலகையாளும்அரசன், இகழின்- ஒன்றைப்பற்றி இழிவாகப் பேசுமிடத்து, இகழ்ந்து - (அமைச்சர்முதலியோர்) தாமும்கூட இகழ்ந்துபேசி, ஆங்கு - அவ்விடத்திலேயே, ஒன்று-இகழ்ந்துபேசிய ஒன்றை, புகழினும்-(அரசன்) புகழ்ந்து பேசுமிடத்தும், ஒக்கப்புகழ்ப-தாமும்கூடப் புகழ்வார்கள். (ஏனென்றால்) நீர்வழிப்பட்ட-நீரின்வழியிலே செல்லுகின்ற, புணை-தெப்பமானது, என்செய்யும்-நீரின்வழிசெல்லாது வேறு எவ்வழிசெல்லும். (அது போல) மன்பதை - அமைச்சர்முதலானமக்கள், இகல் - வெற்றித் தன்மைவாய்ந்த, மன்னன்-அரசனுடைய, சீர்வழிப்பட்டது - எண்ணத்தின்படியே செல்வர்.

(பொ-ரை) உலகையாளும் அரசனானவன் ஒன்றைப்பற்றி இழிவாகப் பேசுமிடத்து அமைச்சர் முதலியோர் தாமும் கூட இகழ்ந்துபேசி, அவ்விடத்திலேயே இகழ்ந்துபேசிய ஒன்றை அரசன் புகழ்ந்துபேசுமிடத்தும் தாமும் கூடப்புகழ்வார்கள். ஏனென்றால், நீரின்வழியிலே செல்லுகின்ற தெப்பமானது நீரின்வழிச்செல்லாது

வேறு எவ்வழிச்செல்லும்? அதுபோல அமைச்சர் முதலான மக்கள் வெற்றித் தன்மைவாய்ந்த அரசனுடைய எண்ணத்தின்படியே செல்வர்.

(க-ரை) அரசன் மனம்போனவாறெல்லாம் கூறும் அமைச்சர் முதலாயினோர் குடிகளுக்கு இயமனுவார்.

(இ-குறிப்பு) இகழ்ந்து-வினையெச்சம். இறைமகன் - வேற்றுமைத்தொகை. புகழினும் - இதிலுள்ள உம்மை எச்சப்பொருளது. பட்டது இரண்டும் வினைமுற்றுக்கள். மன்பதை, சீர்வழிப்பட்டது என்பதையும், புணை நீர்வழிப்பட்டதென்பதையும் பயனிலையாகக் கொண்டன.

44. செவிசுடச் சென்றுங் கிடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வேரீஇப் பேரா—கவிழ்மதத்த
கைம்மா வயத்தவே யாகுமற் றெத்திறத்து
மம்மாண் பினவே யமைச்சு.

(ப-ரை) செவிசுட-காதுசுடும்படியாக, சென்றுஇடித்து-சென்று நெருங்கி, அறிவுமூட்டி - (மந்திரிகள்) நல்லறிவு உண்டுபண்ணி, வெகுளினும்-(அரசன்) கோபித்தவிடத்தும், வாய்வெரீஇ-வாயினுற் கூறுதற்குப்பயந்து, பேரா-அவனைவிட்டு நீங்கார்கள். கவிழ்மதத்த-மிகுந்த மதஜலத்தையுடைய கைம்மா - தும்பிக்கையோடு கூடிய யானையை, தன்வயத்ததுஏ-தனதுவசத்திலுடையனே, பாகு-பாகனுவான். (அதுபோல) எத்திறத்தும்-எப்பேர்ப்பட்டசமயத்திலும், அமாண்பினவே-அதுபோலும் தன்மையுடையவர்களே, அமைச்சு-மந்திரிகளாவார்.

(பொ-ரை) காது சுடும்படியாகச் சென்று நெருங்கி, நல்லறிவு மந்திரிகள் உண்டுபண்ணி அரசன் கோபித்தாலும் வாயினுற்கூறுதற்குப் பயந்து அவனைவிட்டு நீங்கார்கள். மிகுந்தமதஜலத்தையுடைய

துதிக்கையோடுகூடிய யானையை தனது வசத்திலுடையவனேபாகுவான். அதுபோல எப்பேர்ப்பட்ட சமயத்திலும் அதுபோலும் தன்மையுடையவர்களே மந்திரிகளாவார்.

(க-ரை) அரசனைவிட்டு நீங்காது அவனுக்கு உறுதியானவற்றைக் கூறுவது மந்திரிகளுக்கு அழகாகும்.

(இ-குறிப்பு) சென்று - வினையெச்சம். கவிழ்மதம் - வினைத்தொகை. கைமா - வேற்றுமைத்தொகை. அமைச்சு என்பது அம்மாண்பின என்னும் பயனிலைகொண்டது.

45. கைவரும் வேந்தன் நமக்கென்று காதலித்த
சேவ்வி தேரியா துரையற்க — ஒவ்வோருகால்
எண்மையன் ஏனும் அரியன் பேரிதம்மா
கண்ணிலன் உள்வெயர்ப்பி னன்.

(ப-ரை) நமக்கு-நம்மிடத்து, வேந்தன்-அரசனானவன், கைவரும்என்று-அன்புள்ளவன் என்று, காதலித்த-தான் விரும்பியவற்றை எல்லாம், செவ்வி-அவனிடம் சொல்லவேண்டியகாலத்தை, தெரியாது-உணராமல், உரையற்க-சொல்லவேண்டாம். ஒவ்வொருகால்-ஒவ்வொருசமயத்தில், எண்மையன்ஏனும்-காட்சியளிப்பதில் எளியவனாயிருந்தபோதிலும், கண்இலன் - தாக்ஷண்யமற்றவனாயும், உள்வெயர்ப்பினன் - கோபமுடையவனாயும் இருக்கிறபடியால், பெரிது அரியன்-வேறொருசமயம் மிகவும் அரியவனாகவுமிருப்பான்.

(போ-ரை) நம்மிடத்து அரசனானவன் அன்புள்ளவனென்று தான் விரும்பியவற்றையெல்லாம் அவனிடம் சொல்லவேண்டிய காலத்தை அறியாமல் சொல்லவேண்டாம். ஒவ்வொரு சமயத்தில் காட்சியளிப்பதில் எளியவனாகவிருந்தபோதிலும், தாக்ஷண்யமற்றவனாயும், கோபமுடையவனாயு மிருக்கிறபடியால் வேறொரு சமயம் மிகவும் அரியவனாகவுமிருப்பான்.

(க-ரை) அரசன் தன்னிடத்து எவ்வளவு அபிமானமுள்ளவனாக விருந்தபோதிலும், எதையும் சமயமறிந்தே சொல்லவேண்டும்.

(இ-குறிப்பு) காதலித்த-வினையாலணையும்பெயர். உரையற்க-வியங்கோள்வினைமுற்று. நீ என்னும் தோன்றா எழுவாய் உரையற்க என்னும் பயனிலைகொண்டது.

46. பழைமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றுங் கொள்ளார்—வெகுளின்மன்
காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரு
மார்வலரு மில்லை யவர்க்கு.

(ப-ரை) பழைமை-சிநேகனுடன் பழகிவந்த தன்மையையும், கடைப்பிடியார்-கவனியார், கேண்மையும் - சிநேகத்தன்மையையும், பாரார்-கவனிக்கமாட்டார், பிறிதுகிழமை - வேறொரு சம்பந்தத்தையும், ஒன்றும்கொள்ளார்- சிறிதும் கவனியார், (ஆதலின்) இறைமாண்டார்க்கு-அரசனைப்போலும் சம்பத்துடையவர்க்கு, காதன்மை-அன்புடைமையானது, உண்டோ?-உண்டோ? (இல்லை), அவர்க்கு-அத்தகையார்க்கு, வெகுளின்-கோபம்ஏற்பட்டவிடத்து, ஏதிலரும்-அன்னியரென்றும், ஆர்வலரும்-சுற்றத்தாரென்றும், இல்லை-கிடையாது.

(பொ-ரை) சிநேகனுடன் பழகிவந்த தன்மையையும் கவனியார்; சிநேகத்தன்மையையும் கவனிக்கமாட்டார்; வேறொரு சம்பந்தத்தையும் சிறிதும் கவனியார். ஆதலின், அரசனைப்போலும் சம்பத்துடையவர்க்கு அன்புடைமையானது உண்டோ? (இல்லை) அத்தகையார்க்குக் கோபம் ஏற்பட்டவிடத்து அன்னியரென்றும் சுற்றத்தாரென்றும் கிடையாது.

(க-ரை) செல்வர்கள் தமது செல்வச்செருக்கால் ஒன்றையும் கவனிக்கமாட்டார்கள்.

(இ-குறிப்பு) பழைமை, கேண்மை, கிழமை ஆகிய பண்புகள் அப்பண்புகளுடையார்மேல் நின்றனவாக வைத்துக் கூறலுமாம். இறைமாண்டார் என்பது கடைப்பிடியார், பாரார், கொள்ளார் என்னும் பயனிலைகளைக்கொண்டது

47. மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்
எந்நலம் காண்டுமென் றெள்ளற்க—பன்னெடுநாள்
காத்தவை எல்லாம் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும்.

(ப-ரை) மன்னர் - அரசருடைய, புறங்கடை - தலைவாயிலை, வறிதுகாத்து - வீணாகக் காவல்காத்துக்கொண்டிருந்து, யாம் - நாம், எந்நலம் - எத்தகைய நன்மையை, காண்டும்என்று - அடைந்தோம் என்று, எள்ளற்க - இகழவேண்டாம். பல்நெடுநாள் - பலநீண்டகாலமாக, காத்தவைஎல்லாம் - காவல்காத்தவைஎல்லாம், கடைமுறை- முடிவில், போய்-ஒன்றாய்ச்சேர்ந்து, கைகொடுத்து-உதவியாயிருந்து (தனக்கு), வேந்துஅவையில் - அவ்வரசனுடைய சபையிலே, மிக்கு செய்யும்-மிகுந்த பெருமையை உண்டாக்கும்.

(பொ-ரை) அரசருடைய தலைவாயிலை வீணாகக் காவல்காத்துக்கொண்டிருந்து நாம் எத்தகைய நன்மையையடைந்தோமென்று இகழவேண்டாம். பல நீண்டகாலமாக காவல்காத்தவையெல்லாம் முடிவில் ஒன்றாய்ச்சேர்ந்து உதவியாயிருந்து தனக்கு அவ்வரசனுடைய சபையிலே மிகுந்த பெருமையையுண்டாக்கும்.

(க-ரை) அரண்மனையிலிருந்து சேவகத்தொழில் செய்தாலும் ஒருகாலத்தில் மிகுந்த பெருமையைக் கொடுக்கும்.

(இ-குறிப்பு) புறங்கடை-இலக்கணப்போலி. பன்னெடுநாள்-பண்புத்தொகைகள். வேந்துஅவை என்பது எதுகைநோக்கி வன்

ருடாயிற்று. காத்தவை என்பது செயும் என்னும் பயனிலை கொண்டது.

48. உறுதி பயப்ப கடைபோகா வேனும்
இறுவரை காறும் முயல்ப—இறுமுயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால் அல்லனபோல்
ஆவனவு முண்டு சில.

(ப-ரை) இறும்உயிர்க்கும் - சாகுந்தருவாயிலுள்ள உயிர்களுக்கும், ஆயுள் - ஆயுளைவிருத்திசெய்யக்கூடிய, மருந்து - மருந்தை, ஒழுக்கல் - வாயில் ஊற்றுதல், தீதுஅன்று - குற்றமில்லை. அல்லன போல் - முடிவடையாததுபோலிருந்து, ஆவனவும் - முடிவடையும் காரியங்களும், சிலஉண்டு-சில இருக்கின்றன. (அதனால்) உறுதி- சிறந்த நன்மைகளை, பயப்ப-தரக்கூடிய காரியங்கள், கடைபோகா வேனும் - (முதலில்) முடிவடையாததுபோற்றோன்றினும், இறும் வரைகாறும் - (பின்னர்) அது முற்றுப்பெறும் வரையிலும், முயல்ப- முயற்சிசெய்யவேண்டும்.

(பொ-ரை) சாகுந்தருவாயிலுள்ள உயிர்களுக்கும், ஆயுளை விருத்திசெய்யக்கூடிய மருந்தை வாயில் ஊற்றுதல் குற்றமில்லை. முடிவடையாததுபோலிருந்து முடிவடையும்காரியங்களும் சில இருக்கின்றன. அதனால், சிறந்த நன்மைகளைத் தரக்கூடிய காரியங்கள் முதலில் முடிவடையாததுபோல் தோன்றினும் பின்னர் அது முற்றுப்பெறும்வரையிலும் முயற்சி செய்யவேண்டும்.

(க-ரை) தொடங்கினவுடன் காரியம் முடிவடையவில்லையென்று முயற்சியைக் கைவிட்டு விடலாகாது.

(இ-குறிப்பு) பயப்ப-வினையாலணையும் பெயர் - இறும்வரை, இறு முயிர்-பெயரெச்சங்கள். ஆயுள்மருந்து வேற்றுமைத்தொகை. நீ என்னும் தோன்றா எழுவாய் முயல்ப என்னும் பயனிலை கொண்டது. சில என்பது உண்டு என்னும் பயனிலை கொண்டது.

49. முயலாது வைத்து முயற்றின்மை யாலே
உயலாகா ஊழ்த்திறத்த என்ஞர்—மயலாயும்
ஊற்றம் இறுவிளக்க முழுண்மை காண்டுமேன்
றேற்ரு ரேறிகான் முகத்து.

(ப-ரை) *முயலாது-சிறிதும் முயன்றுபாராது, வைத்து-எடுத்துக்கொண்ட காரியத்தை நிறுத்தி, ஊழ்த்திறத்த - விதியின்பிரகாரம் நடக்கின்ற இக்காரியங்கள், முயற்றின்மையாலே-நாம் முயற்சி செய்யாததிஞல், உயலாகா-நடவாமற்போகா, என்ஞர்-என்றுநினைத்துக்கொண்டிரார். ஊழ்உண்மை - விதியின்பிரகாரம் நடப்பதை, காண்டும் என்று-நாம் அறிந்துள்ளோமென்று, மயலாயும்-மயங்கியும், ஊற்றம்இறு - மறைவில்லாத, விளக்கம் - தீபத்தை, எறி - வீசும் படியான, கால்முகத்து- காற்றுக்கெதிரில், ஏற்ருர்-கொளுத்தார்.*

(போ-ரை) *சிறிதும் முயன்றுபாராது எடுத்துக்கொண்ட காரியத்தை நிறுத்தி விதியின்பிரகாரம் நடக்கின்ற இக்காரியங்கள் நாம் முயற்சிசெய்யாததிஞல் நடவாமற்போகா என்று நினைத்துக் கொண்டிரார். விதியின் பிரகாரம்நடப்பதை நாம் அறிந்துள்ளோம் என்று மறைவில்லாத தீபத்தைக் காற்றுக்கெதிரில் கொளுத்தார்.*

(க-ரை) *விதியின்படி நடக்குமென்று நினைத்து முயற்சியைக் கைவிட்டுவிடலாகாது.*

(இ-குறிப்பு) *திறத்த-வினையாலணையும்பெயர். இருவிளக்கம்-வினைத்தொகை. விளக்கம் என்பது ஏற்ருர் என்னும் பயனிலை கொண்டுமுடிந்தது.*

50. உலையா முயற்சி களைகணு வூழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலும் கரி.

(ப-ரை) உலையா-குறைவில்லாத, முயற்சி-முயற்சியை, களை கணு-ஆதாரமாகக்கொண்டு, ஊழின் - விதியினுடைய, வலி - வல்ல மையை, சிந்தும்-கெடும்படிசெய்கின்ற, வன்மையும் - தைரியமும், உண்டு-இருக்கிறது. (அதற்கு) உலகுஅறிய-உலகத்தார் அறியும்படி யாக, பால்முளை-ஊழினதுமுளையை, தின்று-நாசப்படுத்தி, மறலி-இயமனுடைய, உயிர் - உயிரை, குடித்த-போம்படிசெய்த, கால் முளையே-குழந்தையாகிய மார்க்கண்டேயரே, கரி-சாக்ஷியாவர்.

(பொ-ரை) குறைவில்லாத முயற்சியை ஆதாரமாகக்கொண்டு விதியினுடைய வல்லமையைக் கெடும்படிசெய்கின்ற தைரியமுமிருக்கிறது. அதற்கு உலகத்தாரறியும்படியாக ஊழினது முளையை நாசப் படுத்தி இயமனுடைய உயிரைப் போம்படிசெய்த குழந்தையாகிய மார்க்கண்டேயரே சாக்ஷியாவர்.

(க-ரை) மதியின் வலியால் விதியையும் வெல்லலாம்.

(இ-குறிப்பு) உலையாமுயற்சி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். ஊழின்வழி-ஆறன்தொகை. அறிய-வினையெச்சம். குடித்த கான்முளை-பெயரெச்சம். கால்முளைஎன்பது சந்ததியில் தோன்றுபவன் என்னும் பொருளையுடையது. வன்மை என்பது உண்டு என்னும் பயனிலைகொண்டது.

51. கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து — மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
ஆள்வினை யாளப் படும்.

(ப-ரை) தாம்- (ஒரு காரியத்தைத் தொடங்குமுன்) தாம், காலம் அறிந்து-அதுசெய்யவேண்டிய காலத்தை யாராய்ந்து, இடம் அறிந்து - செய்யவேண்டிய இடத்தைத்தெரிந்து, செய்வினையின் -

செய்யும் காரியத்தின், மூலம்அறிந்து - மூலகாரணத்தையும் உணர்ந்து, மேலும்-இன்னும், சூழ்வன-ஆராயவேண்டியவற்றை, சூழ்ந்து-ஆராய்ந்து, துணைமைவலி - தமக்கு உதவியா யிருப்பவரது வல்லமையை, தெரிந்து-ஆராய்ந்து, ஆள்வினை - எடுத்துக்கொண்டகாரியத்தை, ஆளப்படும்-செய்யவேண்டும்.

(பொ-ரை) ஒரு காரியத்தைத் தொடங்குமுன் அது செய்யவேண்டியகாலத்தை யாராய்ந்து, செய்யவேண்டியவிடத்தைத் தெரிந்து, செய்யும் காரியத்தின் மூலகாரணத்தையுமுணர்ந்து இன்னும் ஆராயவேண்டியவற்றை யாராய்ந்து தமக்கு உதவியாயிருப்பவரது வல்லமையையாராய்ந்து எடுத்துக்கொண்ட காரியத்தைச் செய்ய வேண்டும்.

(க-ரை) ஒரு காரியத்தைத் தொடங்குமுன் அதைப்பற்றியவைகளையெல்லாம் விடாது ஆராய்ந்துகொள்ளல் வேண்டும்.

(இ-குறிப்பு) அறிந்து நான்கும், சூழ்ந்து, தெரிந்து என்பவைகளும் வினையெச்சங்கள். ஆள்வினை-வினைத்தொகை. விளைவு - ஆகுபெயர். ஆள்வினையென்பது, ஆளப்படும் என்னும் பயனிலைகொண்டது.

52. மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் – செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

(ப-ரை) கருமமே-தாம் எடுத்துக்கொண்ட காரியத்திலேயே, கண் ஆயினார்-(முடிக்கவேண்டுமென்ற) கருத்துடையவர், மெய்-சரீரத்தினது, வருத்தம்- துன்பத்தை, பாரார்-கவனிக்கமாட்டார்; பசி-உடற்பசிநோயையும், நோக்கார்-கவனியார், கண் துஞ்சார்-உறக்கங்கொள்ளார், எவ்வெவர்-எப்பேர்ப்பட்டவரும் செய்யும்படியான, தீமையும்-

துன்பத்தையும், மேற்கொள்ளார்-பொருட்படுத்தார்; செவ்வி-காலத்தினுடைய, அருமையும்-கஷ்டத்தையும், பாரார்-கவனியார்; அவமதிப்பும்-அதனால் தமக்கு அவமானம் ஏற்பட்டபொழுதும், கொள்ளார்-அதைப் பொருட்படுத்தார்.

(பொ-ரை) தாம் எடுத்துக்கொண்டகாரியத்திலேயே முடிக்க வேண்டுமென்ற கருத்துடையவர், சரீரத்தினது துன்பத்தைக்கவனியார்; உடற்பசிநோயையும் கவனியார்; உறக்கங்கொள்ளார்; எப்பேர்ப்பட்டவரும் செய்யும்படியான துன்பத்தையும் பொருட்படுத்தார்; காலத்தினுடைய கஷ்டத்தையும்கவனியார்; அதனால்தமக்கு அவமானம் ஏற்பட்டபொழுதும் அதைப் பொருட்படுத்தார்.

TAMIL

(க-ரை) காரியத்தில் கண்ணுயிருப்பவர் எதையும் கவனிக்க மாட்டார்கள். அதனால், நாம் தொடங்கும் காரியம் முடிவடையும் வரையிலும் எதையும் கவனிக்கலாகாது.

(இ-குறிப்பு) மெய்வருத்தம்-ஆறன்தொகை. எவர்எவர் எனற்பாலது எவ்வெவர் என்றாயிற்று. கண்ணுயினுர் என்பது பாரார், நோக்கார், துஞ்சார், கொள்ளார், பாரார், கொள்ளார் என்னும் பயனிலைகளைக்கொண்டன.

53. சிறிய பகையெனினும் ஓம்புதல் தேற்றுர்
பெரிதும் பிழைபா டுடையர்—நிறைகயத்து
ஆழ்நீர் மடுவில் தவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது.

(ப-ரை) நிறை-(நீர்) நிறைந்த, கயத்து-இருள்மிகுந்த, ஆழ்-ஆழமான, நீர்மடுவில்-ஜலத்தையுடைய பள்ளத்தில், தவளை-சிறியதவளையானது, குதிப்பினும்-குதித்தபோதிலும், யானை-பெரியயானையினது, நிழல்-நிழலை, காண்பரிது - (ஜலத்தில்) காணமுடியாது. (அதனால்)

பகை - தன்விரோதியானவன், சிறியஎனினும் - மிகவும் சிறியவனு யினும், ஓம்புதல்-(அப்பகைவனிலிருந்து தன்னை) காத்துக்கொள்ளு தலை, தேற்றூர்-தெரிந்துகொள்ளாதவர், பெரிதும்-மிகவும், பிழை பாடுஉடையர்-குற்றமுடையவராவர்.

(பொ-ரை) நீர்நிறைந்த இருள்மிகுந்த ஆழமான ஜலத்தை யுடையபள்ளத்தில் சிறிய தவளையானது குதித்தபோதிலும் பெரிய யானையினது நிழலை ஜலத்தில்காணமுடியாது. அதனுல் தன்விரோதி யானவன் மிகவும் சிறியவனுயினும், அப்பகைவனிலிருந்து தன் னைக்காத்துக்கொள்ளுதலைத் தெரிந்துகொள்ளாதவர் மிகவும் குற்ற முடையவராவர்.

(க-ரை) தன்னிலும் பகைவன் அற்பன்என்று கருதி வாளா விருத்தலாகாது.

(இ-குறிப்பு) ஓம்புதல் - தொழிற்பெயர். நிறைமடு, ஆழ்நீர்- இவை யிரண்டும் வினைத்தொகைகள். யானைநிழல் வேற்றுமைத் தொகை. தேற்றூர் என்பது உடையர் என்னும் பயனிலை கொண் டது.

54. புறப்பகை கோடியின் மிக்குறினும் அஞ்சார்
அகப்பகை யொன்றஞ்சிக் காப்ப — அனைத்துலகும்
சொல்லொன்றின் யார்ப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலும் காமப் பகை.

(ப-ரை) உலகுஅனைத்தும்-எல்லாஉலகங்களையும், சொல்ஒன் றின்-ஒரு சொல்லிலுலேயே, யார்ப்பார்-தன்வசப்படுத்திக்கொள்ளும் தவத்தினரும், பரிந்து-வருந்தி, காமப்பகை-காமமாகிய விரோதியை, பல்காலும்-பலவழியாலும், ஓம்பிக்காப்ப-மிகவும் கவனத்துடன் பாது காப்பர். (அதுபோல) புறப்பகை -(அரசர்க்கு) வெளிப்பகைவர்கள், கோடியின்-கோடிஎன்னும் தொகைக்கு, மிக்குஉறினும் - மிகுதியாக

விருந்தபோதிலும், அஞ்சார்-மனந்தளராதவராய், அகப்பகை - உட்பகைவன், ஒன்றுஅஞ்சி-ஒருவனுக்குப்பயந்து, காப்ப-தம்மைப்பாது காப்பர்.

(பேர்-ரை) எல்லாவுலகங்களையும் ஒரு சொல்லினாலேயே தன்வசப்படுத்திக்கொள்ளும் தவத்தினரும்வருந்தி காமமாகிய விரோதியை பல வழியாலும் மிகவும் கவனத்துடன் பாதுகாப்பர். அது போல அரசர்க்கு வெளிப்பகைவர்கள் கோடிஎன்னும் தொகைக்கு மிகுதியாகவிருந்தபோதிலும், மனந்தளராதவராய் உட்பகைவன் ஒருவனுக்குப் பயந்து தம்மைப் பாதுகாப்பர்.

(க-ரை) புறப்பகையினும் அகப்பகை மிகவும் கொடிது.

(இ-குறிப்பு) புறப்பகை-வேற்றுமைத்தொகை. கோடியின்-இன்னுருபு எல்லைப்பொருளில்வந்தது. யார்ப்பார் என்பது காப்ப என்னும் பயனிலைகொண்டது.

55. புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும்—கழிபெரும்
கண்ணோட்டஞ் செய்யார் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் போதிந்து.

(ப-ரை) கழிபெரும்-மிகவும்பெரிய, கண்ணோட்டம்-கிருபையை செய்யார்-(வைத்தியர்கள்) காட்டாமல், கருவியிட்டு - ஆயுதங்களைக் கொண்டு, ஆற்றுவார்-(புண்களைக்) குணப்படுத்துவார்கள். பொதிந்து-மறைத்துவைத்து, மூடார் - மூடிவைக்கமாட்டார்கள். (அதுபோல) புறம்நட்டு-வெளிக்கு சினேகமாயிருந்து, அகம்-மனதிற்குள், வேர்ப்பார்-பகைமையுடையவரது, நச்சு-நஞ்சுபோலும் (வெறுக்கத்தக்க) பகைமை-விரோதத்தை, வெளியிட்டு - அவருக்கு வெளிப்படுத்தி, வேறுஆதல்வேண்டும்-அவரைவிட்டு நீங்கவேண்டும்.

(பொ-ரை) மிகவும் பெரியகிருபையை, வைத்தியர்கள் காட்டாமல் ஆயுதங்களைக்கொண்டு புண்களைக் குணப்படுத்துவார்கள். மறைத்துவைத்து மூடிவைக்கமாட்டார்கள். அதுபோல, வெளிக்குச் சினேகமாயிருந்து மனதிற்குள் பகைமையுடையவராது நஞ்சுபோலும் வெறுக்கத்தக்க விரோதத்தை அவருக்குவெளிப்படுத்தி அவரை விட்டுநீங்கவேண்டும்.

(க-ரை) புறப்பகைகொண்டவரினும் அகப்பகைகொண்டவர் கொடியவராவர். ஆதலின் அவரைவிட்டு உடனே விலகவேண்டும்.

(இ-குறிப்பு) நட்டு-வினையெச்சம். வேர்ப்பார்-வினையாலணையும் பெயர். நச்சுப்பகை-உவமைத்தொகை. வைத்தியர் என்னும் தோன்றா எழுவாய் ஆற்றுவார், மூடார் என்னும் பயனிலைகளைக்கொண்டன.

56. நட்பிடைக் குய்யம்வைத் தெய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத்—திட்பமாம்
நாளுலந்த தன்றே நடுவன் நடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து.

(ப-ரை) நட்பிடை-சினேகனிடத்தில், குய்யம்வைத்து - வஞ்சனையோடுகூடிய மனதுடன், எய்ய-தகுதியில்லாத, வினை-காரியங்களை, சூழ்ந்து-சினேகனுக்குச்செய்து, வட்கார்-பகைமையில்லாதவர் போலும், திறத்தர்ஆய்-தன்மையுடையவராய், நின்றார்க்கு-நடக்கின்றவர்களுக்கு, திட்பம்ஆம்-வலிமையுள்ளதான, நாள்-ஆயுட்காலமானது, அன்றே - அன்றையதினத்தோடு, உலந்தது - முடிவடைந்ததாகும்; (இதுஅறியாமல்) நடுவன்-இயமனானவன், நடுவின்மை-(தான் நடந்துகொள்ளவேண்டிய) நடுவுநிலை தவறிப்போவதை, மறந்து - மறந்துவிட்டு, வாளாகிடப்பன்-ஒன்றுஞ்செய்யாதிருப்பான்.

(பொ-ரை) சினேகனிடத்தில் வஞ்சனையோடுகூடிய மனதுடன் தகுதியில்லாதகாரியங்களைச் சினேகனுக்குச்செய்து பகைமை

யில்லாதவர்போலும் தன்மையுடையவராய் நடக்கின்றவர்களுக்கு வலிமையுள்ளதான ஆயுட்காலமானது அன்றையதினத்தோடு முடிவடைந்ததாகும். இது அறியாமல் இயமனுனவன் தான் நடந்து கொள்ளவேண்டிய நடுவுநிலை தவறிப்போவதை மறந்துவிட்டு ஒன்றுஞ் செய்யாதிருப்பான்.

(க-ரை) சிநேகனிடத்தில் வஞ்சனையுடையவராய் நடக்கின்றவர்கள் மிகுந்த கெடுதியையடைவார்கள்.

(இ-குறிப்பு) சூழ்ந்து-வினையெச்சம். நின்றூர்க்கு - வினையாலணையும்பெயர். ஆம் என்னும் பெயரெச்சம். நாள் என்பதனெடு இயையும். நடுவன் என்பது கிடப்பன் என்னும் பயனிலைகொண்டது.

57. மனத்த கறுப்பெனின் நல்ல செயினும்
அனைத்தேவையும் தீயவே யாகும்—எனைத்துணையும்
தீயவே செய்யினும் நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர்.

(ப-ரை) கறுப்பு - ஒருவரிடத்துப் பகைமையானது, மனத்த எனின் - மனதினிடத்திருக்குமாயின், நல்ல - (அவர்) நல்லகாரியங்களையே, செய்யினும்-செய்தபோதிலும், அனைத்து எவையும்-அவைகள் எல்லாம், தீயவே ஆகும் - கெட்டகாரியங்களாகவே எண்ணப்படும். மாசு இல்-(எவரிடமும்பகைமையாகிய) குற்றமில்லாத, மனத்தினவர்-மனதையுடையபெரியோர், எனைத்துணையும் - எவ்வளவு ஆனபோதிலும், தீயவே-கெட்டகாரியங்களையே, செய்யினும் - ஒருவன் செய்தபோதிலும், நல்லவா-அவற்றை நல்லகாரியங்களாகவே, காண்ப-எண்ணுவார்கள்.

(பொ-ரை) ஒருவரிடத்து பகைமையானது மனதினிடத்திருக்குமாயின், அவர் நல்லகாரியங்களையே செய்தபோதிலும், அவைகளையெல்லாம் கெட்டகாரியங்களாகவே எண்ணப்படும். எவரிடமும்

பகைமையில்லாத மனதுடைய பெரியோர் எவ்வளவானபோதிலும் கெட்டகாரியங்களையே ஒருவன்செய்தபோதிலும் அவற்றை நல்ல காரியங்களாகவே எண்ணுவார்கள்.

(க-ரை) நடுவுநிலையுடன் வெறுப்புவிருப்பில்லாமல் பிறருடைய செயலையுணர்வதே சிறந்த அறிவாகும்.

(இ-குறிப்பு) மனத்த·மனத்ததுஎனற்பாலது கடைக்குறைந்தது. நல்ல - வினையாலணையும் பெயர். அனைத்துளவை - பண்புத்தொகை. மனத்தினவர் என்பது காண்ப என்னும் பயனிலைகொண்டது.

58. இனியவர் என்சொலினும் இன்சொல்லே யின்னார்
கனியு மொழியும் கடுவே — அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தேனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்
சிங்கி குளிர்ந்துங் கொலும். [பச்

(ப-ரை) அனல்-நெருப்பைப்போல், கொளுந்தும் - சுடுகின்ற, வெங்காரம்-காரத்துணியானது, வெய்து எனினும்-கொடியதாயிருப்பினும், நோய் - வியாதியாளரது வியாதியை, தீர்க்கும் - போக்கும். சிங்கி-விஷமானது, மெய்-சரீரம், பொடிப்ப-மயிர்க்குச்செடுக்கும்படியாக, குளிர்ந்தும்-குளிர்ச்சியாயிருந்தும், கொலும் - கொன்றுவிடும்; (அதுபோல) இனியவர்-அன்புமிக்கவர், என்சொலினும்-எத்தகைய சொல்லைச் சொன்னபோதிலும், இன்சொல்லே-அச்சொல் இனிமை பொருந்திய சொல்லாம். இன்னார் - அன்பில்லாதவரது, கனியும் மொழியும்-இனிமைபொருந்திய சொற்களும், கடுவே - விஷத்திற்கு ஒப்பானதாம்.

(பொ-ரை) நெருப்பைப்போல் சுடுகின்ற காரத்துணியானது கொடியதாயிருப்பினும் வியாதியாளரது வியாதியைக் குணப்படுத்தும். விஷமானது சரீரம் மயிர்க்குச்செடுக்கும்படியாகக் குளிர்ச்சியா

யிருந்தும் கொன்றுவிடும். அதுபோல, அன்புமிக்கவர் எத்தகைய சொல்லைச் சொன்னபோதிலும் அது இனிமைபொருந்திய சொல்லாம். அன்பில்லாதவரது இனிமைபொருந்திய சொற்கள் விஷத்திற்கு ஒப்பானதாம்.

(க-ரை) அன்புடையவரது சொற்கள் பின்பு நன்மையைத் தருதலால், அவர்கள் சொற்களுக்கெல்லாம் அடங்கி நடக்கவேண்டும். அன்பில்லாரது இனிய சொற்களைக்கண்டு மயங்கிவிடலாகாது.

(இ-குறிப்பு) இனியவர், இன்னர்-குறிப்பு வினையாலணையும் பெயர்கள். கொளுந்தும் வெங்காரம்-பெயரெச்சம். இன்சொல்-பண்புத்தொகை. வெங்காரம் என்பது தீர்க்கும் என்பதையும், சிங்கி என்பது கொலும் என்பதையும் பயனிலைகளாகக்கொண்டன.

59. பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காது—மெய்யில்
புலமைந்துங் காத்து மனமா சகற்றும்
நலமன்றே நல்லா றெனல்.

(ப-ரை) பொய்-பொய்யும், குறளை-பிறரை தூஷிப்பதும், வன்சொல்-கடுமையான சொற்களும், பயன்இல - பிரயோஜனமில்லாத சொற்களும், என்று-என்றுகூறப்பட்ட, இந்நான்கும்-இந்த நான்கு சொற்குற்றங்களும், சொல்லின்-தன் வாயிலிருந்து வருஞ் சொற்களில், எய்தாமை-வராதபடியும், மெய்யில்-சரீரத்திலுள்ள, புலம் ஐந்தும்-மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்பட்ட ஐம்பொறிகளும், வழுக்காது - தவறுனவழியில் செல்லவிடாதபடி, காத்து - அடக்கி, மனம்-மனதினிடத்துள்ள, மாசு-காமம், வெகுளி, மயக்கம் ஆகிய குற்றங்களையும், அகற்றும்-போக்கிக்கொள்ளும்படியான, நலம் அன்றே-நன்மையே, நல்ஆறு-சிறந்த மார்க்கம், எனல்-என்பர்.

(பொ-ரை) பொய்யும், பிறரைத்தூஷிப்பதும், கடுமையான சொற்களும், பிரயோஜனமில்லாத சொற்களும் என்று கூறப்பட்ட இந்த நான்கு சொற்குற்றங்களும் தன் வாயிலிருந்து வருஞ்சொற்களில் வராதபடியும் சரீரத்திலுள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்பட்ட ஐம்பொறிகளும் தவறானவழியில் செல்லவிடாதபடி யடக்கி மனதினிடத்துள்ள காமம், வெகுளி, மயக்கம் ஆகிய குற்றங்களைப் போக்கிக்கொள்ளும்படியான நன்மையே சிறந்த மார்க்கம் என்பர்.

(க-ரை) சொற் குற்றங்களையும், ஐம்பொறிக் குற்றங்களையும், மனக் குற்றங்களையும் நீக்கி வாழவேண்டும்.

(இ-குறிப்பு) பொய் குறளை, வன்சொல் - உம்மைத்தொகைகள். காத்து-வினையெச்சம். எனல் - வியங்கோள் வினைமுற்று. நல்லாறு என்பது எனல் எனும் பயனிலைகொண்டது.

60. நல்லா றொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார் — பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கட் புனத்த பைங்கூழ்.

(ப ரை) பல்-பலவிதமான, பொறிய - புள்ளிகளோடு கூடிய, செங்கண் - சிவந்தகண்களையுடைய, புலி ஏறு - ஆண் புலியானது, அறப்பசித்தும்-மிகவும் பசியோடுகூடியிருந்தபொழுதும், பைங்கண்-குளிர்ச்சி பொருந்திய இடத்தையுடைய, புனத்த-காட்டிலுள்ள, பைங்கூழ்-பயிர்களை, தின்னா ஆம்-தின்னமாட்டாதாம்; (அதுபோல) நல் ஆறு-சன்மார்க்கத்தின், ஒழுக்கின் தலை-நடப்பதில், நின்றார்-நிலைபெற்றவர், நல்கூர்ந்தும்-தரித்திரமடைந்தகாலத்தும், அல்லன-தீய காரியங்களை, செய்தற்கு-செய்வதற்கு, ஒருப்படார்-மனமிணங்கார்.

(பொ-ரை) பலவிதமான புள்ளிகளோடு கூடிய சிவந்தகண்களையுடைய ஆண்புலியானது, மிகவும் பசியோடு கூடியிருந்த போதிலும் குளிர்ச்சிபொருந்திய இடத்தையுடைய காட்டிலுள்ள பயிர்களை தின்னமாட்டாதாம். (அதுபோல) சன்மார்க்கத்தில் நடப்பதில் நிலைபெற்றவர் தரித்திரமடைந்த காலத்தும் தீயகாரியங்களைச் செய்வதற்கு மனமிணங்கார்.

(க-ரை) பெரியோர் எக்காலத்தும் ஒழுக்கத்தைக் கைவிடார்.

(இ-குறிப்பு) நல்லாறு - பண்புத்தொகை, நின்றார்-வினையாலணையும் பெயர். பல்பொறி-பண்புத்தொகை. செங்கண்-பண்புத்தொகை. புலியேறு என்பது தின்னுவாம் என்பதைப்பயனிலையாகக் கொண்டது. நின்றார் என்பது ஒருப்படார் என்பதைப் பயனிலையாகக்கொண்டது.

61. குலம்விற்றுக் கோள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கோள்ளும் திருவும்—தவம்விற்றுங்
கூனோம்பும் வாழ்வும் உரிமைவிற் றுண்பதூஉம்
தானோம்பிக் காத்தல் தலை.

(ப-ரை) குலம்-தான் பிறந்த குலத்தை, விற்று - விட்டுவிட்டு, கொள்ளும்-அடைகின்ற, வெறுக்கையும்-ஐசுவரியமும், வாய்மை நலம்-உண்மையின் பெருமையை, விற்று-கெடுத்து, கொள்ளும்-பெறுகின்ற, திருவும்-செல்வமும், தவம் - அருமையாய்ச்செய்ததவவொழுக்கத்தை, விற்று-கைவிட்டு, ஊன்-சரீரத்தை, ஓம்பும்-பாதுகாக்கும்படியான, வாழ்வும் வாழ்க்கையும், உரிமை-தனக்குச் சம்பந்தமுடைய பொருள்களை, விற்று-விலைக்குக் கொடுத்து, உண்பதூஉம்-ஜீவனஞ்செய்வதும், தான்-ஒருவன், ஓம்பிக்காத்தல் - தன்னிடம் சிறிதும் வாராமல் காத்துக்கொள்ளுதலே; தலை-சிறந்த தருமமாம்.

(போ-ரை) தான் பிறந்த குலத்தை விட்டுவிட்டு அடைகின்ற ஐசுவரியமும், உண்மையின் பெருமையைக் கெடுத்துப் பெறுகின்ற செல்வமும், அருமையாய்ச் செய்த தவவொழுக்கத்தைக் கைவிட்டுச் சரீரத்தைப் பாதுகாக்கும்படியான வாழ்க்கையும், தனக்குச் சம்பந்தமுடைய பொருள்களை விலைக்குக் கொடுத்து சீவனஞ்செய்வதும் ஒருவன் தன்னிடத்து வராதபடி காத்துக்கொள்ளுதலே சிறந்த தருமமாம்.

(க-ரை) எக்காலத்தும் குலம், வாய்மை, தவம்முதலியவற்றைக் கைவிடலாகாது.

(இ-குறிப்பு) கொள்ளும் வெறுக்கை, கொள்ளும்திரு, ஓம்பும் வாழ்வு-பெயரெச்சங்கள். உண்பதூஉம்-அளபெடை. ஆங்கு-அசை. காத்தல் என்பது தலை என்னும் பயனிலைகொண்டது.

62. இடைதெரிந் தஞ்சுறுத்து வஞ்சித் தெளியார்
உடைமைகோண் டேமாப்பார் செல்வம் — மடநல்லார்
போம்மன் புயம்போற் பருத்திடினும் மற்றவர்
நுண்ணிடைபோற் றேய்ந்து விடும்.

(ப-ரை) இடைதெரிந்து-சமயம் பார்த்து, அஞ்சு உறுத்து-பயத்தையுண்டுபண்ணி, வஞ்சித்து-மோசம் செய்து, எளியார்-எளியவர்களுடைய, உடைமை-பொருளை, கொண்டு-அபகரித்துக்கொண்டு, ஏமாப்பார்-உளங்களிப்பவரது, செல்வம்-ஐசுவரியமானது, மடம்-இளமைப்பருவத்தையுடைய,நல்லார்-பெண்களது, பொம்மல்-அழகு பொருந்திய, புயம்போல்-மார்பைப்போல, பருத்திடினும்-மிகுதியாக விருத்தியடைந்தாலும் (பிறகு) அவர்-அப்பெண்களது, நுண்-நுட்பமான, இடைபோல் - இடுப்பைப்போல, தேய்ந்துவிடும் - குறைந்துபோகும்.

(போ-ரை) சமயம் பார்த்துப் பயத்தை யுண்டுபண்ணி மோசம் செய்து எளியவர்களுடைய பொருளை யபகரித்துக் கொண்டு உளங் களிப்பவரது ஐசுவரியமானது, இளமைப் பருவத்தையுடைய பெண் களது அழகுபொருந்திய மார்பைப் போல் பருத்திடினும் பிறகு அப் பெண்களது நுட்பமான இடுப்பைப்போலக் குறைந்து விடும்.

(க-ரை) பிறரை ஏமாற்றி மோசம் செய்து அடையும் செல் வம் நிலைத்து நிற்காது.

(இ-குறிப்பு) தெரிந்து, அஞ்சுறுத்து, வஞ்சித்து, கொண்டு - வினையெச்சங்கள். நுண்ணிடை-பண்புத்தொகை. செல்வம் என்பது தேய்ந்துவிடும் என்னும் பயனிலை கொண்டது.

63. பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளும்
சிற்றுயிர்க் காக்கம் அரிதம்மா—முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழல் மாயா திரா.

(ப-ரை) வல்விராய்-வலிய விறகுகள், வரவர-தன்னிடம்வந்து கொண்டிருக்க, முற்றும்-அவைகளையெல்லாம், வாய்மடுத்து - தன் வாயால் எரித்து, மாய - அவ்விறகுக்கட்டைகள் அழிய, எரி - எரி கின்ற, தழல்-நெருப்பானது, மாயாது-அழியாமல், இரா-இருக்காது. (அதுபோல) பெற்ற - தான் பெற்ற பொருள்கள், சிறுக - சிறிதாக இருக்க, பெறாத-தான் அடையாத பொருள்களை, பெரிது - மிகவும், உள்ளும்-விரும்புகின்ற, சிறுஉயிர்க்கு-அற்ப வாழ்நாளையுடைய உயிர் களுக்கு, ஆக்கம்-திரவியம், அரிது-இல்லாமற்போம்.

(போ-ரை) வலிய விறகுகள் தன்னிடம் வந்துகொண்டிருக்க அவைகளையெல்லாம் தன் வாயால் எரித்து அவ்விறகுக்கட்டைகள் அழிய, எரிகின்ற நெருப்பானது அழியாமலிருக்காது. அதுபோல, தான் பெற்ற பொருள்கள் சிறிதாகவிருக்க, தான் அடையாத

பொருள்களை மிகவும் விரும்புகின்ற அற்ப வாழ்நாளையுடைய உயிர்களுக்குத் திரவியம் இல்லாமற்போம்.

(க-ரை) அடைந்ததைக்கொண்டு திருப்தியடையாதவனது வாழ்க்கை பிரயோஜனப்படாது.

(இ-குறிப்பு) பெற்ற, பெறாத - வினையாலணையும் பெயர்கள். சிற்றுயிர் - பண்புத்தொகை. வரவர - அடுக்குத்தொடர். எரிதழல் - வினைத்தொகை. தழல் என்பது இரா என்னும் பயனிலைகொண்டது.

64. தத்தம் நிலைக்கும் குடிமைக்கும் தப்பாமே
ஒத்த கடப்பாட்டிற் றாளூன்றி—எய்த்தும்
அறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள்.

(ப-ரை) தத்தம்-தங்கள் தங்களுடைய, நிலைக்கும்-தகுதிக்கும், குடிமைக்கும் - குலத்திற்கும், தப்பாமே - தவறாதபடியாக, ஒத்த - பொருத்தமான, கடப்பாட்டில்-நடக்கையில், தாள்ஊன்றி-முயன்று, எய்த்தும்-கஷ்டப்பட்டும், அறங்கடையில்-பாபமான மார்க்கத்தில், செல்லார்-நடவாதவராய், பிறன்-அன்னியனுடைய, பொருளும்-திரவியத்தையும், வெஃகார்-விரும்பாதவரது, புறங்கடையது-தலைவாசலிடத்ததாக, பொருள்-ஐசுவரியம், ஆகும்-இருக்கும்.

(பொ-ரை) தங்கள் தங்களுடைய தகுதிக்கும் குலத்திற்கும் தவறாதபடியாக பொருத்தமான நடக்கையில் முயன்று கஷ்டப்பட்டும் பாபமான மார்க்கத்தில் நடவாதவராய் அன்னியனுடைய திரவியத்தையும் விரும்பாதவரது தலைவாசலிடத்ததாக ஐசுவரியமிருக்கும்.

(க-ரை) நன்மார்க்கங்களைக் கடைப்பிடித்தவரது இருப்பிடத்தைத் தேடிக்கொண்டு செல்வம் வரும்.

(இ-குறிப்பு) தப்பாமே, ஊன்றி-வினையெச்சங்கள். செல்லார் - முற்றெச்சம். பிறன்பொருள்-வேற்றுமைத்தொகை. பொருள் என்பது புறங்கடையதாகும் என்னும் பயனிலைகொண்டது.

65. போதுமகளே போல்வ தலையாயார் செல்வம்
குலமகளே ஏனையோர் செல்வம்—கலனழிந்த
கைமையார் பெண்மை நலம்போற் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில்.

(ப-ரை) தலையாயார்-பெரியோருடைய, செல்வம் - ஐசுவரியங்கள், போதுமகள் - (எல்லோருக்கும் உதவிசெய்தலால்) வேசைக்கு, போல்வ-ஒப்பாவனவாம். ஏனையோர்-இடையாளரது, செல்வம்-ஐசுவரியங்கள், குலமகள் - (உடையவர்க்குப் பயன்படுதலால்) குலப்பெண்ணிற்கு, ஒப்பன-ஒப்பாவனவாம். கடையாயார் - கீழ்மக்களது, செல்வம்-ஐசுவரியம், கலன்அழிந்த - மங்கள ஆபரணத்தையிழந்த, கைமையார் - விதவைகளது, பெண்மைநலம்போல் - பெண் தன்மையைப்போல, பயன்படுவது - உதவியாவது, இல்-இல்லையாம்.

(பொ-ரை) பெரியோருடைய ஐசுவரியங்கள் எல்லோருக்கும் உதவி செய்தலால் வேசைக்கு ஒப்பாவனவாம். இடையாளரது ஐசுவரியங்கள் உடையவர்களுக்குப் பயன் படுதலால் குலப்பெண்ணிற்கு ஒப்பாவனவாம். கீழ்மக்களது ஐசுவரியம் மங்கள ஆபரணத்தை யிழந்த விதவைகளது பெண் தன்மையைப்போல உதவியாவது இல்லையாம்.

(க-ரை) செல்வமுடையவன் பலருக்கும் உபகாரியாயிருக்க வேண்டும்.

(இ-குறிப்பு) அழிந்த கைமையார்-பெயரெச்சம். பெண்மை நலம்-பண்புத்தொகை. முதலிலுள்ள செல்வம் என்பது போல்வ என்னும் பயனிலை கொண்டது. இரண்டாவது செல்வம் என்பதும்

போல்வ என்னும் பயனிலை கொண்டது. மூன்றாவது செல்வம் என்பது பயன்படுவதில் என்னும் பயனிலை கொண்டது.

66. வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலும் நனிநல்ல—கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப் படான்.

(ப-ரை) வள்ளன்மை-ஈகைக்குணம், இல்லாதான் - இல்லாத வனுடைய,செல்வத்தின்-ஐசுவரியத்தைக்காட்டிலும், மற்றையோன்-ஈகைக்குணமுள்ளவனுடைய, நல்குரவே-தரித்திரமே, நனி-மிகவும், நல்லபோலும்-சிறந்ததுபோலும். (ஏனென்றால்) கொன்னே-காரணமில்லாமல், அருள்இலன் - கிருபை இல்லாதவனென்றும், அன்பு இலன்-அன்புஇல்லாதவனென்றும், கண்அறையன் என்று-தாக்ஷண்யமில்லாதவனென்றும், பலரால் - பல ஜனங்களால், இகழப்படான்-இகழ்ச்சியைப்பெறான்.

(பொ-ரை) ஈகைக்குணமில்லாதவனுடைய ஐசுவரியத்தைக் காட்டிலும், ஈகைக்குணமுள்ளவனுடைய தரித்திரமே மிகவும் சிறந்ததுபோலும். ஏனென்றால், காரணமில்லாமல் கிருபை யில்லாதவனென்றும், அன்பில்லாதவனென்றும், தாக்ஷண்யமில்லாதவனென்றும் பல ஜனங்களால் இகழ்ச்சியைப் பெறான்.

(க-ரை) ஈகைக்குணமில்லாதான் செல்வத்தினும், அக்குணமுள்ளான் தரித்திரமே சிறந்தது.

(இ-குறிப்பு) இல்லாதான்-வினையாலணையும் பெயர். செல்வத்தின் - இன்னுருபு எல்லைப்பொருளது. நனி-உரிச்சொல். ஏ-அசை. நல்குரவே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலையில் வந்தது. நல்குரவு என்பது நனிநல்ல என்னும் பயனிலைகொண்டது.

67. ஈகை யரிதெனினும் இன்சொலினும் நல்கூர்தல்
ஓகோ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்மியனால் வாய்பூட் டிடப்படின்மற்
றுவா விவரென்செய் வார்.

(ப-ரை) ஈகை-கொடுக்கும் குணம், அரிது என்னும் - இல்லாமற்போனாலும், இன்சொலினும்-இனிமையான சொற்பேசுவதிலும், நல்கூர்தல்-முடியாதவனாயிருத்தல், ஓகோ-ஐயோ, கொடிதுகொடிது-மிகவும் கொடியதேயாம். தீவினை - பாபமென்கிற, கம்மியனால் - கம்மாளனால், நாகொன்று - நாவையடக்கி, வாய்-வாயை, பூட்டுஇடப்படின் - பூட்டுஇடப்பட்டால், இவர்கள் - இத்தன்மையோர், ஆஆ-ஆஹா, என்செய்வார்-யாதுசெய்வார்கள்.

(போ-ரை) கொடுக்கும் குணமில்லாமற்போனாலும் இனிமையான சொற்பேசுவதிலும் முடியாதவனாயிருத்தல் ஐயோ மிகவும் கொடியதேயாம். பாபமென்கின்ற கம்மாளனால் நாவையடக்கி வாயைப் பூட்டிடப்பெற்றால் இத்தன்மையோர் ஆஹா யாதுசெய்வார்கள்.

(க-ரை) இன்சொற் பேசி நன்மையடையாமல் வன்சொற்பேசுவது கஷ்டத்தைக்கொடுக்கும்.

(இ-குறிப்பு) இன்சொல்-பண்புத்தொகை. கொடிது கொடிது-அடுக்குத்தொடர். அம்மா-வியப்பிடைச்சொல். நல்கூர்தல் என்பது கொடிது என்னும் பயனிலைகொண்டது.

68. சொல்வன்மை உண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல—வல்லைத்தம்
ஆக்கங் கெடுவ துளதெனினும் அஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர்.

(ப-ரை) சொல்வன்மை-பேசுந்திறமை, உண்டெனில்-ஏற்பட்டிருந்தால், கொன்னே-வீணாக, விடுத்தொழிதல்-அதனை உபயோகிக்காதிருத்தல், நல்வினை-அதனால் ஏற்படும் நன்மையை, கோறலின்-கொல்லுதலினின்றும், வேறு அல்ல - வேறாகமாட்டாது. வாக்கின்-சொல்வன்மையினாலாகிய, பயன்-நற்பயனை, கொள்பவர் - அடைய விரும்புகிறவர்கள், வல்லை-சீக்கிரத்தில், தம் - தம்முடைய, ஆக்கம்-ஐசுவரியங்கள், கெடுவதுஉளதெனினும்-கெடுவதாக இருந்தபோதிலும், அஞ்சுபவோ-அஞ்சுவார்களோ (அஞ்சார்)

(பொ-ரை) பேசுந்திறமை ஏற்பட்டிருந்தால் வீணாக அதனையுபயோகிக்காதிருத்தல் அதனால் ஏற்படும் நன்மையைக்கொல்லுதலினின்றும் வேறாகமாட்டாது. சொல்வன்மையினாலாகிய நற்பயனை அடையவிரும்புகிறவர்கள் சீக்கிரத்தில் தம்முடைய ஐசுவரியங்கள் கெடுவதாக விருந்தபோதிலும் அஞ்சுவார்களோ? அஞ்சார்.

(க-ரை) செல்வாக்குடையவர் எக்காலத்தும் பிறர்க்கு நலம் புரிதலிலேயே கண்ணும் கருத்துமுடையவராயிருப்பர்.

(இ-குறிப்பு) சொல்வன்மை-வேற்றுமைத்தொகை. நல்வினை-பண்புத்தொகை. பயன்கொள்பவர் என்பது அஞ்சுபவோ என்னும் பயனிலைகொண்டது.

69. சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனின் தாழ்வரோ தாழார்—அறனல்ல
எண்மைய வாயினும் கைவிட் டரிதெனினும்
ஒண்மையில் தீர்ந்தொழுக லார்.

(ப-ரை) அறன்அல்ல-தருமமார்க்கத்தில் கிடைக்காதபொருள்கள், எண்மைய-(அதர்மமார்க்கத்தில்) எளிதில் கிடைக்கக்கூடியதாக, ஆயினும்-இருந்தபோதிலும், கைவிட்டு-அவற்றைவிட்டுவிட்டு, அரிது

எனினும்-கிடைப்பது அரிதாகவிருப்பினும், ஒண்மையில் - நீதிமார்க் கத்தினின்றும், தீர்ந்து-நீங்கி, ஒழுகலார்-நடவாதவர்கள், சிறுமுயற்சி-சிறியமுயற்சியை, செய்து-செய்து, ஆங்கு - அம்முயற்சியால், உறு பயன்-மிகுதியானநன்மையை, கொள்ளப்பெறுமெனின் - அடையக் கூடுமென்றால், தாழ்வரோ-அதற்குத் தாமதிப்பரோ?, தாழார்-தாமதியார்.

(பொ-ரை) தருமமார்க்கத்தில் கிடைக்காத பொருள்கள் அதர்ம மார்க்கத்தில் எளிதில் கிடைக்கக்கூடியதாகவிருந்தபோதிலும் அவற்றை விட்டுவிட்டு கிடைப்பது அரிதாகவிருப்பினும் நீதி மார்க்கத்தினின்றும் நீங்கி நடவாதவர்கள் சிறிய முயற்சியைச்செய்து அம்முயற்சியால் மிகுதியான நன்மையை அடையக்கூடுமென்றால் அதற்குத் தாமதிப்பரோ? தாமதியார்.

(க-ரை) அதர்ம மார்க்கத்தில் நடவாதவர்கள் சிறு முயற்சியால் பெரும்பயனடையப் பின்வாங்கார்.

(இ-குறிப்பு) சிறுமுயற்சி-பண்புத்தொகை. அல்ல, எண்மைய, ஒழுகலார்-வினையாலணையும் பெயர்கள். ஒழுகலார் என்பது தாழ்வரோ என்னும் பயனிலை கொண்டது.

70. செயக்கடவ அல்லனவுஞ் செய்துமன் என்பார்
நயத்தகு நாகரிக மென்னும்—செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோ மென்று தலைதுமிப்பான் தண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று.

(ப-ரை) செயக்கடவ-தம்மால் செய்யக்கூடியன, அல்லனவும்-அல்லாதவற்றையும், செய்துமன் - செய்துமுடிப்போம், என்பார் - என்று சொல்லுபவரது, நயத்தகு-விரும்பும்படியான, நாகரிகம்-தாக்ஷண்யம், என்னும்-யாதுபிரயோஜனம்?, செயிர்த்து-(நாம்) கோபித்து,

உரைப்பின் - சொன்னால், நெஞ்சுநோம் - (கேட்பவருடைய) மனம் வருந்தும், என்று-என்றுநினைத்து, தலைதுமிப்பான்-தலையைத்துண்டிப்பவனுடைய, தண்அளிபோல்-கொடுமையான கிருபையைப்போலில்லாமல், எஞ்சாது-குறையாது, எடுத்துஉரைக்கல்-எல்லோரிடத்தும் எடுத்துச்சொல்லுதல், பாற்று-நல்லது.

(பொ-ரை) தம்மால் செய்யக்கூடியன அல்லாதவற்றையும் செய்துமுடிப்போம் என்று சொல்லுபவரது விரும்பும்படியான தாக்ஷண்யம் யாதுபிரயோஜனம்? நாம் கோபித்துச்சொன்னால் கேட்பவருடைய மனம் வருந்துமென்று நினைத்து தலையைத்துண்டிப்பவனுடைய கொடுமையான கிருபையைப்போலில்லாமல், குறையாது எல்லோரிடத்தும் எடுத்துச்சொல்லுதல் நல்லது.

(க-ரை) தன்னால் முடியாததை முடிப்பேன் என்று ஆசை வார்த்தைகூறி பிறரை அலையவிடலாகாது.

(இ-குறிப்பு) அல்லன, வினையாலணையும்பெயர். நாகரிகம் என்பது என்னும் என்னும் பயனிலைகொண்டது.

71. அல்லன செய்யினு மாகுலங் கூழாக்கோண்
டோல்காதார் வாய்விட் டுலம்புப—அல்லால்
பிறர்பிறர் செய்பபோல் செய்தக்க செய்தாங்
கறிமடம் பூண்டுநிற்பா ரார்.

(ப-ரை) ஒல்காதார்-அடக்கமில்லாதவர்கள், அல்லன-நன்மார்க்கத்திற்குப் புறம்பானகாரியங்களை, செய்யினும் - செய்வாராயினும், ஆகுலம்-ஆரவாரத்தோடுகூடிய கீர்த்தியை, கூழாக்கொண்டு-பலனாகக்கொண்டு, வாய்விட்டு-வாயார, உலம்புப அல்லால் - உளறுவார்களேயல்லாமல், பிறர்பிறர்-மற்றையோர், செய்தக்க-செய்யத்தகுந்த நற்காரியங்களை, செய்பபோல்-செய்வதைப்போல, செய்து - தாங்களும்

செய்துமுடித்து, அறிமடம்-அறிந்தும்அறியார்போலிருத்தலை, பூண்டு-மேற்கொண்டு, நிற்பார்யார்-இருப்பவர்யாவர்.

(பொ-ரை) அடக்கமில்லாதவர்கள் நன்மார்க்கத்திற்குப் புறம்பான காரியங்களைச்செய்வாராயினும் ஆரவாரத்தோடுகூடிய கீர்த்தியைப் பலனாகக்கொண்டு வாயார உளறுவார்களேயல்லாமல் மற்றையோர் செய்யத்தகுந்த நற்காரியங்களைச் செய்வதைப்போலத் தாங்களும் செய்துமுடித்து அறிந்தும் அறியார்போலிருத்தலை மேற்கொண்டு இருப்பவர் யாவர். (ஒருவருமில்லை).

(க-ரை) அகம்பாவிகள் அக்கிரமகாரியங்களைச் செய்து செயற்கரிய செய்து முடித்ததாகப் புகழ்ந்து கொள்வர்.

(இ-குறிப்பு) அல்லன-குறிப்பு வினையாலணையும் பெயர். ஒல்காதார்-வினையாலணையும் பெயர். பிறர்பிறர் - அடுக்குத்தொடர். அறிமடம்-பண்புத்தொகை, ஒல்காதார் என்பது உலம்புப என்னும் பயனிலைகொண்டது.

72. பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனுக் கோள்வான்—பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கோடிறுடைத்துக் கோல்வான் போற்
கைவிதிர்த் தஞ்சப் படும்.

(ப-ரை) பகைஇன்று-விரோதமில்லாமலே, பல்லார் - பலருடைய, பழி-குற்றங்களை, எடுத்து ஓதி- யாவரும் அறியச்சொல்லி, நகை ஒன்றே-(அதனாலேற்படும்) சந்தோஷத்தையே, நன்பயன் ஆ-சிறந்த பயனாக, கொள்வான்-கொண்டு களிப்பவன், பயம் இன்று-(தனக்கு) பலனில்லாமலே, மெய்விதிர்ப்பு - (ஒருவனுடைய) உடல் நடுக்கத்தை, காண்பான்-பார்க்கும் பொருட்டு, கொடிறு-கன்னக் கோலை, உடைத்து-உடையச்செய்து, கொல்வான்போல்-பயமுண்டு

பண்ணுகிறவனுக்கு அஞ்சுதல் போல, கைவிதிர்த்து - (அவன் வருகையை)க்கையினுலே தடுத்து, அஞ்சப்படும்-எல்லோராலும் அஞ்சப்படுவான்.

(போ-ரை) விரோதமில்லாமலே பலருடைய குற்றங்களை யாவருமறியச் சொல்லி, அதனுலேற்படும் சந்தோஷத்தையே சிறந்த பயனுகக்கொண்டு களிப்பவன் தனக்குப் பலனில்லாமலே ஒருவனுடைய உடல்நடுக்கத்தைப் பார்க்கும்பொருட்டுக் கன்னக்கோலை உடையச்செய்து பயமுண்டுபண்ணுகிறவனுக்கு அஞ்சுதல்போல, அவன் வருகையைக் கையினுலே தடுத்து எல்லோராலும் அஞ்சப்படுவான்.

(க-ரை) பிறர் குற்றங்களைக் கூறிக்களிப்பவன் கொலைஞனுக்கு ஒப்பாகக் கருதப்படுவான்.

(இ-குறிப்பு) ஒதி-வினையெச்சம். கொள்வான் - வினையாலணையும் பெயர். காண்பான்-வினையெச்சம். கொல்வான் என்பது அஞ்சப்படும் என்னும் பயனிலைகொண்டது.

73. தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றறுக்கும் — தெய்வம்
இலதென்பார்க் கில்லைதம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலும் சொல்வார் பயன்.

(ப-ரை) தம்- தம்முடைய, இன்புதல்வர்க்கு - இனிமையான புத்திரர்களுக்கு, அன்றே - அல்லவா, பலகாலும் - பலமுறையும், பயன் - நற்பலனளிக்கும் சொற்களை, சொல்வார் - எடுத்துரைப்பார்கள். (அதுபோல) தெய்வம்-கடவுள், உளதுஎன்பார் - உண்டு என்ற நம்பிக்கையுடையவர், தீய-அக்கிரமமான காரியங்களை, செயப்புகின்- செய்ய ஆரம்பித்தால், தெய்வமே-கடவுளே, கண்இன்று-தாக்ஷண்ய

மில்லாமல், நின்று-எதிர்த்து நின்று, ஒறுக்கும் - தண்டிக்கும். தெய்வம்-கடவுள், இலது என்பார்க்கு - இல்லையென்று நினைப்பவருக்கு, இல்லை-அத்தண்டனை கிடையாது.

(பொ-ரை) தம்முடைய இனிமையான புத்திரர்களுக்கு அல்லவா பலமுறையும் நற்பலனளிக்கும் சொற்களை எடுத்துரைப்பார்கள். அதுபோல, கடவுள் உண்டு என்ற நம்பிக்கையுடையவர் அக்கிரமமான காரியங்களைச் செய்ய ஆரம்பித்தால் கடவுளே தாக்ஷண்யமில்லாமல் எதிர்த்துநின்று தண்டிக்கும். கடவுள் இல்லையென்று நினைப்பவருக்கு அத்தண்டனை கிடையாது.

(க-ரை) தெய்வ நம்பிக்கையுடையவர்கள் அக்கிரமமான காரியங்கள் செய்ய ஆரம்பிக்கின் கடவுள் தண்டிப்பார்.

(இ-குறிப்பு) என்பார், தீய-வினையாலணையும் பெயர்கள். நின்று-வினையெச்சம். இன்புதல்வர் - பண்புத்தொகை. தெய்வம் என்பது ஒறுக்கும் என்னும் பயனிலைகொண்டது. பெரியோர் என்னும் தோன்றா எழுவாய்க்கு சொல்வார் என்னும் பயனிலைவந்தது.

74. தீயசெயல் செய்வா ராக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன வாகாவாம் நாவின் புறநக்கிக்
கோல்லும் கவயமாப் போல்.

(பரை) தீயசெயல்-பாபமான காரியங்களை, செய்வார் - செய்கின்றவர்களுக்கு, ஆக்கம் - ஐசுவரியமானது, பெருகினும் - விருத்தியடைந்தாலும், தீயன - பாவமான மார்க்கத்தில் வந்தபொருள்கள், தீயனவே-தீமையை உண்டுபண்ணுபவைகளாம். வேறுஅல்ல - நன்மையை உண்டுபண்ணுவனவாகா. நா - நாவினாலே, இன்புஉற - சுகமுண்டாகும்படியாக, நக்கி-தடவி, கொல்லும் - (பின்னால்) உயிரை

வாங்கும்படியான, கவயமா-காட்டுப்பசுவை, போல்-போல, தீயன-பாபமானவை, நல்லனஆகா-நல்லனவாகமாட்டா.

(பொ-ரை) பாபமான காரியங்களைச் செய்கின்றவர்களுக்கு ஐசுவரியமானது விருத்தியடைந்தாலும், பாபமான மார்க்கத்தில் வந்த பொருள்கள் தீமையை யுண்டுபண்ணுபவைகளாம். நன்மையை யுண்டுபண்ணுபவைகளாகா. நாவினாலே சுகமுண்டாகும்படியாகத் தடவி, பின்னால் உயிரை வாங்கும்படியான காட்டுப்பசுவைப்போல பாபமானவை நல்லனவாகமாட்டா.

(க-ரை) துன்மார்க்கத்தில் பொருள் தேடுபவருக்கு அப்பொருள் துன்பத்தையே கொடுக்கும்.

(இ-குறிப்பு) செய்வார், தீயன, தீயன, நல்லன - இவைகள் வினையாலணையும் பெயர்கள். ஆக்கம்-காரணப்பெயர். கொல்லும்-பெயரெச்சம். தீயன என்பது ஆகாவாம் என்னும் பயனிலைகொண்டது.

75. நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயும்
செந்நெறிச் செல்வாரிற் கீழல்லர்—முன்னைத்தம்
ஊழ்வலி யுன்னிப் பழிநாணி யுள்ளுடைவார்
தீய செயினுஞ் சில.

(ப-ரை) தம்-தம்முடைய, முன்னை - பழமையான, ஊழ்வலி-விதியின்வலிமையை, உன்னி-நினைத்து, பழிநாணி - ஏற்பட்ட பழிப்பிற்கு வெட்கி, உள்உடைவார் - மனம் வருந்துகின்றவர்கள், தீய - கொடியகாரியங்களில், சிலசெயினும்-அறியாமற் சிலவற்றைச்செய்து விட்டாலும் (அத்தகையோர்) நன்மக்கள்-உயர்குடிப்பிறந்தவர்களது, செந்நா-பொய்பேசாத நாவினாலே, தழும்புஇருக்க - (பலகாற்சொல்வதனால்) தழும்பிருக்கும்படியாக, நாள்வாய்-தினந்தோறும், செந்

நெறி-நேரானமார்க்கத்தில், செல்வாரில்-நடப்பவர்களுக்கு, கீழ்அல்லர்-கீழாகமதிக்கப்படார்.

(போ-ரை) தம்முடைய பழமையான விதியின் வலியை நினைத்து, ஏற்பட்ட பழிக்கு வெட்கி மனம்வருந்துகின்றவர்கள் கொடியகாரியங்களில் அறியாமற் சிலவற்றைச் செய்துவிட்டாலும், அத்தகையோர் உயர்குடிப்பிறந்தவர்களது பொய்பேசாத நாவினாலே பலகாற்சொல்லுதலினும் தழும்பிருக்கும்படியாக தினந்தோறும் நேரானமார்க்கத்தில் நடப்பவர்களுக்குக் கீழாகமதிக்கப்படார்.

(க-ரை) பழிக்கு நாணுபவர் அறியாமல் தீயகாரியஞ்செய்தாலும், பிறரால் பழிக்கப்படார்.

(இ-குறிப்பு) செந்நெறி-பண்புத்தொகை. உடைவார்-வினையாலணையும்பெயர். தீய-வினையாலணையும்பெயர். உள்ளுடைவார் என்பது அல்லர் என்னும் பயனிலைகொண்டது.

76. பிறன்வரை நின்றாள் கடைத்தலைச் சேறல்
அறனன்றே ஆயினும் ஆக — சிறுவரையும்
நன்னலத்த தாயினும் கொள்க நலமன்றே
மெய்ந்நடுங்க வுண்ணடுங்கும் நோய்.

(ப-ரை) பிறன்வரை-ஒருவனிடத்து, நின்றாள்-உரியவளாயிருப்பவளுடைய, கடைத்தலை-தலைவாசற்படியை, சேறல்-சென்றுஅடைதல், அறன்அன்று-தர்மமாகாது. ஆயினும்ஆக-(ஒரோவிடத்து) தருமமாகவிருப்பினு மிருக்கட்டும்; சிறுவரையும்-ஒருநிமிடமாகிலும், நல்-சிறந்த, நலத்துஆயினும் - இன்பத்தைத் தருவதாகவிருந்தாலும், கொள்-அவ்வின்பத்தைப்பெறுக. மெய்நடுங்க - (இன்பமனுபவிக்குங்கால் பயத்தினால்) சரீரம் நடுங்கும்படியாக, உள்நடுங்கும்-மனந்துடிக்கும், நோய்-கவலையானது, நலம்அன்றே-சுகமாகாதல்லவா?

(பொ-ரை) ஒருவனிடத்து உரியவளாயிருப்பவளுடைய தலைவாசற்படியைச் சென்று அடைதல் தருமமாகாது. ஒரோவிடத்துத் தருமமாகவிருப்பினு மிருக்கட்டும். ஒருநிமிடமாகிலும் சிறந்தவின்பத்தைத் தருவதாக விருந்தாலும் அவ்வின்பத்தைப்பெறுக. இன்பமனுபவிக்குங்கால் பயத்தினல் சரீரம் நடுங்கும்படியாக மனந்துடிக்கும் கவலையானது சுகமானதல்லவா?

(க-ரை) பரதாரத்தைக்கண்டு விரும்பலாகாது. அது மிகுந்த கேட்டையே விளைக்கும்.

(இ-குறிப்பு) நின்றூர்-வினையாலணையும்பெயர். நடுங்கும்நோய்-பெயரெச்சம். சேறல் என்பது அறனன்று என்னும் பயனிலைகொண்டது.

77. கருமம் சிதையாமே கல்வி கெடாமே
தருமமும் தாழ்வு படாமே—பெரிதுந்தம்
இன்னலமுங் குன்றுமே ஏரிளங் கோம்பன்னர்
நன்னலந் துய்த்தல் நலம்.

(ப-ரை) தம்-தம்முடைய, கருமம்-காரியம், சிதையாமே-கெட்டுவிடாமலும், கல்வி-தான்படித்தபடிப்பானது, கெடாமே-கெட்டுவிடாமலும், தருமமும்-குலதருமங்களும், தாழ்வுபடாமே-கெட்டுவிடாமலும், பெரிதும்-மிகவும், இன்நலமும்-தமது இளமை, அழகு முதலியவைகளும், குன்றுமே-கெட்டுப்போகாமலும், எர்-அழகுபொருந்திய, கொம்புஅன்னர்-பூங்கொம்பிற்கு ஒப்பான தம்மனைவியது, நல்நலம்-சிறந்தஇன்பத்தை, துய்த்தல்-அனுபவித்தலே, நலம்-நல்லதாம்.

(பொ-ரை) தம்முடைய காரியம் கெட்டுவிடாமலும், தான் படித்தபடிப்பானது கெட்டுவிடாமலும், குலதருமங்களும்கெட்டுவிடாமலும், மிகவும் தமது இளமை, அழகு முதலியவைகளும் கெட்டுப்போகாமலும் அழகுபொருந்திய பூங்கொம்பிற்கு ஒப்பான தம்மனைவியது சிறந்தவின்பத்தை அனுபவித்தலே நல்லதாம்.

(க-ரை) கல்வி, ஒழுக்கம் முதலானவைகள் கெட்டுவிடாதபடி இல்லறவின்பத்தை யனுபவிக்கவேண்டும்.

(இ-குறிப்பு) சிதையாமே, கெடாமே, படாமே, குன்றாமே என்பவை வினையெச்சங்கள். இன்னலம்-பண்புத்தொகை. இளம்கொம்பு என்பதுமது. துய்த்தல் என்பது நலம் என்னும் பயனிலைகொண்டது.

78. கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமும் ஓம்பார்
களவொன்றோ ஏனையவும் செய்வார்—பழியோடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமம் கதுவப்பட் டார்.

(ப-ரை) காமம்-சிற்றின்பத்தால், கதுவப்பட்டார் - பற்றப்பட்டவர்கள், கொலைஅஞ்சார்-கொலைசெய்வதற்குப் பயப்படமாட்டார்; பொய்-பொய்கூறுதற்கு, நாணார் - வெட்கமடையமாட்டார்; மானமும் - பெருமையையும், ஓம்பார் - பாதுகாக்கமாட்டார்கள்; களவு ஒன்றோ-களவுமாத்திரமோ, ஏனையவும் - மற்றைத் தீயகாரியங்களையும், செய்வார்-துணிந்து செய்வார்கள். இஃது - இவ்வின்பமானது, பழியொடு - பழிப்புடனே, பாபம் - பாபமான செயல் என்று, என்னார்-நினைக்கமாட்டார்கள். (இவர்கள்) பிறிது-ஏனைய தீயகாரியங்களில், என்செய்யார்-எதைத்தான் செய்யமாட்டார்கள்.

(பொ-ரை) சிற்றின்பத்தால் பற்றப்பட்டவர்கள் கொலைசெய்தற்குப் பயப்படமாட்டார்கள். பொய்கூறுதற்கு வெட்கமடையமாட்டார்கள். பெருமையையும் பாதுகாக்க மாட்டார்கள். களவு மாத்திரமோ மற்றைய தீய காரியங்களையும் துணிந்து செய்வார்கள். இவ்வின்பமானது பழிப்புடனே பாபமான செயல் என்று நினைக்க மாட்டார்கள். இவர்கள் ஏனைய தீயகாரியங்களில் எதைத்தான் செய்யமாட்டார்கள்.

(க-ரை) காமநோய் கொண்டவர் எதையும் அஞ்சாது செய்வர்.

(இ-குறிப்பு) பழியொடு-ஒடு உருபு உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது. கதுவப்பட்டார் என்பது அஞ்சார், நாணர், ஓம்பார் என்னும் பயனிலைகளைக்கொண்டது.

79. திருவினும் நல்லாள் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பார்—நறுவிய
வாயின வேனும் உமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர்.

(ப-ரை) நறுவின - இனிய பதார்த்தங்கள், வாயினவேனும் - வாயினிடத்திருந்தபோதிலும், உமிழ்ந்து - கக்கிவிட்டு, கடுதின்னும்- கசப்புள்ள பதார்த்தங்களைத் தின்னும்படியான, தீய-கொடிய, விலங்கின் - மிருகங்களைப்போல, சிலர் - சிலமனிதர், மனைக்கிழத்தி - தன் மனைவியானவள், திருவினும் - இலக்குமியைக்காட்டிலும், நல்லாள் எனும் - அழகுமிக்கவளாக இருப்பினும், பிறர் - மற்றவருடைய, மனைக்கே-மனைவியரிடத்தே, பீடுஅழிந்து - தம் பெருமை கெடும்படியாக, நிற்பர்-விருப்பங்கொண்டிருப்பர்.

(பொ-ரை) இனியபதார்த்தங்கள் வாயினிடத்திருந்தபோதிலும் கக்கிவிட்டுக் கசப்புள்ள பதார்த்தங்களைத் தின்னும்படியான கொடிய மிருகங்களைப்போலச் சிலமனிதர், தன்மனைவியானவள் இலக்குமியைக் காட்டிலும் அழகுமிக்கவளாகவிருப்பினும் மற்றவருடைய மனைவியரிடத்தே தம் பெருமைகெடும்படியாக விருப்பங்கொண்டிருப்பர்.

(க-ரை) அன்னியஸ்திரிகளை விரும்புவது தன் ஆக்கத்திற்கு அழிவைக் கொடுக்கும்.

(இ-குறிப்பு) கிழத்தி-கிழமையென்றதனடியாகப் பிறந்தபெயர். கிழமை-உரிமை. உமிழ்ந்து-வினையெச்சம். தின்னும்விலங்கு-பெயரெச்சம். சிலர்என்னும் எழுவாய் அழிந்துநிற்பார் என்னும் பயனிலை கொண்டது.

80. கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு – மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயின் இல்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு.

(ப-ரை) கற்புஉடுத்து-கற்பென்னும் உடையைஉடுத்தி, அன்பு முடித்து - அன்பென்னும் மலரைத்தரித்து, நாண் - நாணம் என்று சொல்லும்படியான சந்தனத்தை, மெய்ப்பூசி - சரீரத்தில்பூசி, நற்குணம்-நல்லகுணங்களும், நற்செய்கை-நன்னடக்கையுமாகிய ஆபரணங்களை, பூண்டாட்கு-அணிந்துள்ள மனைவிக்கு, மக்கட்பேறு - புத்திரபாக்கியம், என்பதுஓர்-என்று சொல்லும்படியான ஒரு, செல்வமும்-ஐசுவரியமும், உண்டாயின் - ஏற்படுமானல், கொண்டாற்கு-அவளை மனைவியாகக்கொண்டவனுக்கு,செய்தவம்-(ஒன்றைநினைத்து) செய்யவேண்டிய தவம், வேறுஇல்-ஒன்றுமில்லை.

(பொ-ரை) கற்பென்னும் உடையையுடுத்தி, அன்பென்னும் மலரைத்தரித்து நாணம் என்று சொல்லும்படியான சந்தனத்தை சரீரத்தில்பூசி நல்லகுணங்களும் நன்னடக்கையுமாகிய ஆபரணங்களையணிந்துள்ள மனைவிக்குப் புத்திரபாக்கியம் என்று சொல்லும்படியான ஒரு ஐசுவரியமும் ஏற்படுமானல் அவளை மனைவியாகக் கொண்டவனுக்கு ஒன்றைநினைத்துச் செய்யவேண்டிய தவம் ஒன்றுமில்லை.

(க-ரை) நற்குண நல்லொழுக்கங்களிற் சிறந்த மனைவியைப் பெற்றவர், எல்லாமடைதலால், அவர் செய்யவேண்டிய தவம் ஒன்றுமில்லை.

(இ-குறிப்பு) உடுத்து, முடித்து, பூசி-வினையெச்சங்கள். பூண்டாட்கு-வினையாலணையும்பெயர். ஓர்செல்வம்-பண்புத்தொகை. செய்தவம்-வினைத்தொகை. வேறு என்னும் எழுவாய்க்கு இல் என்பது பயனிலையாக வந்தது.

81. கற்பில் மகளின் நலம்விற் றுணவுகோளும்
பொற்றேடி நல்லார் நனிநல்லர்—மற்றுத்தம்
கேள்வற்கும் ஏதிலர்க்கும் தங்கட்கும் தங்கிளேஞர்
யாவர்க்கும் கேடுசூ ழார்.

(ப-ரை) கற்புஇல்-கற்பென்னும் குணமில்லாத, மகளின்-ஒரு பெண்ணைப்பார்க்கிலும், நலம்விற்று-இன்பத்தை (பிறரிடம்) விலைக்குக்கொடுத்து, உணவுகொளும் - (அதனல் கிடைக்கும்பொருளைக் கொண்டு) உணவைக்கொள்ளுகின்ற, பொன்தொடி-பொன்னுலாகிய வளையலையணிந்த, நல்லார்-பெண்கள் (தாசிகள்) நனி-மிகவும், நல்லர்-நல்லவராவர். (ஏனென்றல்) தம்கேள்வற்கும்-தமது நாயகனுக்கும், ஏதிலற்கும்-அன்னியர்க்கும், தங்கட்கும்-தங்களுக்கும், தம் - தமது, கிளைஞர்யாவர்க்கும்-சுற்றத்தார் எல்லோர்க்கும், கேடு-துன்பத்தை, சூழார்-செய்யமாட்டார்கள்.

(பொ-ரை) கற்பென்னும் குணமில்லாத ஒருபெண்ணைப்பார்க்கிலும், இன்பத்தை பிறரிடம் விலைக்குக்கொடுத்து அதனல் கிடைக்கும் பொருளைக்கொண்டு உணவைக்கொள்ளுகின்ற பொன்னுலாகிய வளையலையணிந்தபெண்கள் (தாசிகள்) மிகவும்நல்லவராவர். ஏனென்றல் தமது நாயகனுக்கும் அன்னியர்க்கும் தங்களுக்கும் தமதுசுற்றத்தார் எல்லோர்க்கும் துன்பத்தைச் செய்யமாட்டார்கள்.

(க-ரை) இல்வாழ்க்கையிலிருந்துகொண்டு கூடாவொழுக்கத்தை அனுசரிக்கின்ற பெண்களால் அக்குடும்பமே கேட்டையடையும்.

(இ-குறிப்பு) விற்று-வினையெச்சம். கொளும்நல்லார்-பெயரெச்சம். கேள்வற்கும் ஏதிலர்க்கும் என்பவற்றிலுள்ள உம்மைகள் எண்ணுப் பொருளன. நல்லார்என்பது சூழார் என்னும் பயனிலைகொண்டது.

82. முறையுங் குடிமையும் பான்மையும் நோக்கார்
நிறையும் நெடுநாணும் பேணார்—பிறிதுமொரு
பெற்றிமை பேதைமைக் குண்டே பெரும்பாவம்
கற்பின் மகளிர் பிறப்பு.

(ப-ரை) முறையும் - (பிறர் தமக்காகும்) முறைமையையும், குடிமையும்-பிறந்த குலப்பெருமையையும், பான்மையும்- தன் தன்மையையும், நோக்கார் - கவனிக்கமாட்டார்; நிறையையும் - தம்மிடத்திருக்கவேண்டிய நிறை என்னும் குணத்தையும், நெடுநாணும் - சிறந்த நாணம் என்னும் குணத்தையும், பேணார் - பாதுகாவார். பிறிதும் ஒரு-வேறு ஒரு, பெற்றிமை - நல்லகுணமாயினும், பேதைமைக்கு- பேதைமைக்குணத்தையுடைய அம்மகளிர்க்கு, உண்டே-உண்டோ? (கிடையாது) (ஆதலால்) கற்புஇல் - கற்புக்குணமில்லாத, மகளிர் பிறப்பு - பெண்களது பிறப்பானது, பெரும்பாவம் - மிகுந்த பாபத்துடன் கூடியதேயாம்.

(பொ-ரை) பிறர் தமக்காகும் முறைமையையும், பிறந்த குலப் பெருமையையும், தன் தன்மையையும், கவனிக்கமாட்டார்; தம் மிடத்திருக்கவேண்டிய நிறை என்னும் குணத்தையும், சிறந்த நாணம் என்னும் குணத்தையும் பாதுகாவார்; வேறொரு நல்ல குண மாயினும் பேதைமைக்குணத்தையுடைய அம்மகளிர்க்கு உண்டோ? (கிடையாது) ஆதலால் கற்புக்குணமில்லாத பெண்களது பிறப்பானது மிகுந்த பாபத்துடன் கூடியதேயாம்.

(க-ரை) கூடா ஒழுக்கத்தொடு கூடிய பெண்களது பிறப்பு பயனற்றதேயாம்.

(இ-குறிப்பு) முறையும், குடிமையும், பான்மையும், நிறையும் நாணும் என்பவற்றிலுள்ள உம்மைகள் எண்ணுப்பொருளன. நெடு நாண் - பண்புத்தொகை. பெரும்பாவம் என்பதுமது. நிறை என் பது மனதை வேறுவழியிற் செல்லவிடாது நிறுத்துதல் என்னும்

பொருளையுடையது. பிறப்பு என்பது பெரும்பாவம் என்னும் பயனிலைகொண்டது.

83. பெண்மை வியவார் பெயரும் எடுத்தோதார்
கண்ணோடு நெஞ்சுறைப்ப நோக்குறார்—பண்ணோடு
பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டார்
வீடில் புலப்பகையி னோர்.

(ப-ரை) வீடுஇல் - விட்டொழிக்கமுடியாத, புலம் - (சப்த, ஸ்பரிச, இரச, ரூப, கந்தம்) என்னும் விஷயங்களில், பகையினோர்-விரோதத்தன்மையுடைய துறவிகள், பெண்மை - பெண்களது குணத்தை, வியவார்-எடுத்துப்புகழார்; பெயரும்-அவரது பெயரையும், எடுத்து ஓதார்-நாவினுற் கூறார்; கண்ணோடு-கண்களும், நெஞ்சொடு-மனமும், உறைப்ப-ஒன்றுபடும்படியாக, நோக்குஉறார்-பார்க்கமாட்டார்; பண்ணொடு-இராகத்துடன்கூடிய, பாடல்-அவரது பாடல்களை, செவிமடார் - காதுகொடுத்துக் கேளார்; பண்பு அல்ல - நன்மையல்லாத காரியங்களை, பாராட்டார்-புகழமாட்டார்.

(பொ-ரை) விட்டொழிக்கமுடியாத சப்த, ஸ்பரிச, இரச, ரூப, கந்தம் என்னும் விஷயங்களில் விரோதத் தன்மையுடைய துறவிகள், பெண்களது குணத்தை எடுத்துப் புகழார்; அவரது பெயரையும் நாவினுற் கூறார்; கண்களும் மனமும் ஒன்றுபடும்படியாக பார்க்கமாட்டார்; இராகத்துடன்கூடிய அவரது பாடல்களை காதுகொடுத்துக்கேளார்; நன்மையல்லாத காரியங்களைப் புகழமாட்டார்.

(க-ரை) துறவிகள் பெண்கள் நலம் யாதொன்றையும் விரும்பவாவது புகழவாவது செய்யமாட்டார்கள்.

(இ-குறிப்பு) பண்ணொடுபாடல்-ஒடு, உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது. அல்ல-குறிப்புவினையாலணையும் பெயர். பகையினோர், என்பது வியவார், ஓதார், நோக்குறார், செவிமடார், பாராட்டார் என்னும் பயனிலைகளைக்கொண்டது.

84. துயிற்சுவையுந் தூநல்லார் தோட்சுவையு மெல்லாம்
அயிற்சுவையி னாகுகவேன் றெண்ணி—அயிற்சுவையும்
பித்துணுக் கொள்பபோற் கொள்ப பிறர்சிலர்போல்
மொத்துணு மொய்ம்பி னவர்.

(ப-ரை) பிறர்சிலர்போல் - மற்றவர்களைப்போல, மொத்து உணு - (பொறியின்பத்தால்) உதைபடாத, மொய்ம்பினவர் - துறவொழுக்கத்தோடுகூடிய வலிமையுடையவர், துயில்சுவையும்-தூக்கத்தின் இன்பமும், தூநல்லார் - பரிசுத்தமான பெண்களது, தோள் சுவையும்-தோல்களையணைக்கும் இன்பமும், எல்லாம் - ஆகியவைகள் எல்லாம், அயில்சுவையின் - உணவுகொள்ளுமின்பத்தால், ஆகுக என்று - உண்டாகின்றனவென்று, எண்ணி - நினைத்து, அயிற்சுவையும்-உணவு உட்கொள்வதையும், பித்து - பித்தர்கள், உணுகொள்ப போல் - உணவையுட்கொள்வதைப்போல, கொள்ப - தாமும்கொள்வார்கள்.

(பொ-ரை) மற்றவர்களைப்போல பொறியின்பத்தால் உதைபடாத துறவொழுக்கத்தோடுகூடிய வலிமையுடையவர் தூக்கத்தின் இன்பமும், பரிசுத்தமான பெண்களது தோல்களை யணைக்கும் இன்பமும் ஆகியவைகள் எல்லாம் உணவுகொள்ளுமின்பத்தாலுண்டாகின்றனவென்று எண்ணி உணவுஉட்கொள்வதையும் பித்தர்கள் உணவையுட்கொள்வதைப்போலத் தாமும் கொள்வார்கள்.

(க-ரை) மிகுந்தஉணவு துன்மார்க்கத்திற் பிரவேசிக்கச் செய்கிறபடியால், துறவிகள் உயிர் உடலிற்றங்குதற்குவேண்டிய உணவை மட்டும்கொள்வர்.

(இ-குறிப்பு) துயிற்சுவையும் தோட்சுவையும் என்பவற்றிலுள்ள உம்மைகள் எண்ணுப்பொருளன. மொய்ம்பினவர் - வினையாலணையும்பெயர். அது கொள்பஎன்னும் பயனிலைகொண்டது.

85. அன்போ டருளுடைய ரேனு முயிர்நிலைமற்
றென்பியக்கங் கண்டும் புறந்தரார்—புன்புலால்
பொய்க்குடி லோம்புவரோ போதத்தாற் றும்வேய்ந்த
புக்கில் குடிபுகுது வார்.

(ப-ரை) அன்பொடு-குளிர்ந்த அன்புடனே, அருள்உடையர் எனும்-கிருபையையும் உடையவராகவிருந்தபோதிலும், உயிர்நிலை-உயிர்தங்குவதற்கிடமாகிய சரீரத்தில், என்பு-எலும்புகள், இயக்கங் கண்டும் - தோன்றுவதைக்கண்டும், புறந்தரார் - அதைப் பாதுகாக்க விரும்பார். போதத்தால்-ஞானத்தினால், வேய்ந்த - மூடப்பட்டிருக்கின்ற, புக்கில்-மோக்ஷமாகியவீட்டில், குடிபுகுதுவார்-செல்லவேண்டுமென்று நினைப்பவர்கள், புன்புலால் - அற்பமானமாமிசத்தாலாகிய; பொய்-அழியும்படியான, குடில்-குடிசையாகிய இச்சரீரத்தை, ஓம்புவரோ-பாதுகாப்பரோ? (பாதுகாவார்)

(பொ-ரை) குளிர்ந்தஅன்புடனே கிருபையையும் உடையவராகவிருந்தபோதிலும் உயிர்தங்குவதற்கிடமாகிய சரீரத்தில் எலும்புகள் தோன்றுவதைக் கண்டும் அதைப் பாதுகாக்கவிரும்பார். ஞானத்தினால் மூடப்பட்டிருக்கின்ற மோக்ஷமாகிய வீட்டில் செல்லவேண்டுமென்று நினைப்பவர்கள் அற்பமான மாமிசத்தாலாகிய அழியும்படியான குடிசையாகிய சரீரத்தைப் பாதுகாப்பரோ? (பாதுகாவார்)

(க-ரை) வீட்டின்பத்தைப் பெறக் கருதுகிறவர்கள் உடற்சுகத்தைக் கவனிக்கமாட்டார்கள்.

(இ-குறிப்பு) புன்புலான்-பண்புத்தொகை. பொய்க்குடில் என்பதுமது. வேய்ந்தபுக்கில்-பெயரெச்சம். புகுதுவார் என்பது ஓம்புவரோ என்னும் பயனிலைகொண்டது.

86. சிற்றின்பம் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையும் கைவிடுப — முற்றுந்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும்பி யில்.

(ப-ரை) சிற்றின்பம்-(பெரியோரால் வெறுக்கப்படும்) சிறிய இன்பமானது, சின்னீரது-அற்பமானது, ஆயினும்-ஆகவிருந்தபோதிலும், அஃதுஉற்ருர்-அதையுடையவர்கள், மற்றுஇன்பம் யாவையும்-மற்றைய இன்பங்கள் எல்லாவற்றையும், கைவிடுப-விட்டுவிடுவார்கள்; பேரின்பம்-பெரிய இன்பமாகிய, மாகடல்-சிறந்தசமுத்திரத்தில், ஆடுவார்-படிந்துகளிப்பவர், பார்இன்பம்- இவ்வுலகஇன்பமாகிய, பாழ்ங்கும்பியில்-பாழானநரகில், வீழ்பவோ - விழுவார்களோ? (வீழார்.)

(பேர்-ரை)பெரியோரால் வெறுக்கப்படும் சிறிய இன்பமானது அற்பமானதாக விருந்தபோதிலும் அதையுடையவர்கள் மற்றைய இன்பங்கள் எல்லாவற்றையும் விட்டுவிடுவார்கள். பெரிய இன்பமாகிய சிறந்தசமுத்திரத்தில் படிந்துகளிப்பவர் இவ்வுலக இன்பமாகிய பாழானநரகில் விழுவார்களோ (வீழார்.)

(க-ரை) சிற்றின்பத்தைப் பெரிதாக்கொண்டவர் எல்லாசுகத்தையுமிழந்து வருந்துவர்.

(இ-குறிப்பு) சிற்றின்பம், பேரின்பம் - பண்புத்தொகைகள். உற்ருர்ஆடுவார் - வினையாலணையும் பெயர்கள். உற்ருர்என்பது கைவிடுப என்னும் பயனிலைகொண்டது. ஆடுவார் என்பது வீழ்பவோ என்னும் பயனிலை கொண்டது.

87. எவ்வினைய ரேனும் இணைவிழைச்சோன் றில்லெனின்
தேவ்வும் திசைநோக்கிக் கைதொழுஉம்—அவ்வினை
காத்த லிலரே லேத்துணைய ராயினும்
தூர்த்தரும் தூர்ப்பா ரலர்.

(ப-ரை) எவ்வினையரேனும்—(அறவொழுக்க முடையவர்) எத்தகைய தொழிலைச் செய்வாராயினும், இணை-பெண்டிரது, விழைச்சு-புணர்ச்சியின்பமாகிய, ஒன்று-ஒருகுற்றமானதுமட்டும், இல்எனின்-

இல்லாவிட்டால் (அவரை) தெவ்வும்-விரோதியும், திசைநோக்கி-அவரிருக்கும் திசையைப்பார்த்து, கைதொழூஉம் - கை குவித்து வணங்குவான்; அவ்வினை-அத்தீய ஒழுக்கத்தை, காத்தல் இலரேல்-தடுக்கமுடியாதவரா யிருப்பாராயின், எத்துணையர் ஆயினும் - எப்பேர்ப்பட்டவராயினும், தூர்த்தரும்-அயோக்கியர்களும், அலர் - பழிச்சொற்களை, தூர்ப்பர் - அவர்மீது சொல்லுவார்கள்.

(பொ-ரை) அறவொழுக்க முடையவர் எத்தகையதொழிலைச் செய்வாராயினும், பெண்டிரது புணர்ச்சியின்பமாகிய ஒரு குற்றமானது மட்டும் இல்லாவிட்டால் அவரை விரோதியும் அவரிருக்கும் திசையைப்பார்த்து கைகுவித்து வனங்குவான். அத்தீயவொழுக்கத்தைத் தடுக்கமுடியாதவராக விருப்பாராயின், எப்பேர்ப்பட்டவராயினும் அயோக்கியர்களும் பழிச்சொற்களை யவர்மீது சொல்லுவார்கள்.

(க-ரை) எத்தகைய தொழிலைச் செய்யினும் கொடியதாகிய புணர்ச்சியின்பத்தை விட்டொழிக்க வேண்டும்.

(இ-குறிப்பு) இணைவிழைச்சு-வினைத்தொகை. தொழூஉம்-உயிரளபெடை. தூர்த்தர்என்பது தூர்ப்பார் என்னும் பயனிலை கொண்டது. தெவ்என்பது சாரியை பெற்று தெவ்வு எனலாயிற்று.

88. பரபரப்பி னோடே பலபல செய்தாங்
கிரவுபகல் பாழுக் கிறைப்ப — ஒருவாற்றால்
நல்லாற்றி னூக்கிற் பதறிக் குலைகுலைப
எவ்வாற்றா னுய்வா ரிவர்.

(ப-ரை) பலபல-(அறிவிலார்) பலவிதமான வேலைகளை, பரபரப்பினோடு - உற்சாகத்துடனே, செய்து - செய்துமுடித்து, இரவு பகல் - இராப்பொழுதையும் பகற்பொழுதையும், பாழுக்கு - வீணுக, இறைப்ப-கழிப்பார்கள். ஒருவாற்றால்- (அறிவுடையவர்) ஒருவிதத்

தால், நல்ஆற்றில்-சன்மார்க்கத்தில், நூக்கில் - நடக்கும்படிகூறினல், பதறி-துடிதுடித்து, குலைகுலைப-உடல் நடுங்குவார்கள்; இவர் - இத்தன்மையுடையோர், எவ்வாற்ருன் - எவ்வழியில், உய்வார் - தப்பிப்பிழைப்பர்.

(பொ-ரை) அறிவிலார் பலவிதமான வேலைகளை உற்சாகத்துடனே செய்துமுடித்து இராப்பொழுதையும் பகற்பொழுதையும் வீணாகக் கழிப்பார்கள். அறிவுடையவர் ஒரு விதத்தால் சன்மார்க்கத்தில் நடக்கும்படி கூறினல் துடிதுடித்து உடல்நடுங்குவார்கள். இத்தன்மையுடையோர் எவ்வழியில் தப்பிப்பிழைப்பர்.

(க-ரை) கெட்ட காரியங்களில் உற்சாகமிருப்பதுபோல் அறிவிலிகளுக்கு நற்காரியங்களில் உற்சாகம் வராது.

(இ-குறிப்பு) பல பல, குலை குலைப-அடுக்குத்தொடர். இரவு பகல் - உம்மைத்தொகை. நல்லாறு - பண்புத்தொகை. அறிவிலார் என்பது இறைப்ப என்னும் பயனிலைகொண்டது.

89. இளைய முதுதவ மாற்றுது நோற்றேன்
றளைவின்று கண்பாடு மூழே—விளிவின்று
வாழ்நாள் வரம்புடைமை காண்பரேற் காண்பாரும்
தாழாமே நோற்பார் தவம்.

(ப-ரை) காண்பாரும்-(தமது ஆயுட்கால எல்லையை) அறியவல்லமுனிவரும், தவம் - அரியதவங்களை, தாழாமே - தாமதியாமல், நோற்பார்-அனுஷ்டிப்பார்கள், விளிவுஇன்று-சாதலில்லாமல், வாழ்நாள் - ஆயுட்காலத்தின், வரம்புஉடைமை - முடிவு உடையராயிருப்பதை, காண்பரேல்-காணவல்லவராயின், இளையம்-நாம் இளமைப் பருவத்தனுயிருக்கிறோம், முது-முதுமைப் பருவத்தில், நோற்று-விரதங்கிடந்து, தவம்ஆற்றுதும்-தவம் செய்வோம், என்று-என்று

நினைத்து, உளைவு இன்று-பயமில்லாமல், கண்பாடும்-உறக்கத்திலிருப்பதும், ஊழே-முன்செய்த தீவினையேயாம்.

(பொ-ரை) தமது ஆயுட்கால எல்லையை அறியவல்ல முனிவரும் அரியதவங்களைத் தாமதியாமல் அனுஷ்டிப்பார்கள். சாதலில்லாமல் ஆயுட்காலத்தின் முடிவு உடையவரா யிருப்பதைக் காணவல்லவராயின், நாம் இளமைப் பருவத்தனாயிருக்கிறோம் முதுமைப் பருவத்தில் விரதங்கிடந்து தவஞ்செய்வோம் என்று நினைத்து பயமில்லாமல் உறக்கத்திலிருப்பதும் முன்செய்த தீவினையேயாம்.

(க-ரை) அற்ப வாழ்நாளையுடைய நாம் சீக்கிரத்தில் விரதமிருந்து தவஞ்செய்து நன்மையை யடையவேண்டும்.

(இ-குறிப்பு) முதுதவம் - எழுவாய்த்தொகை. வாழ்நாள் - வினைத்தொகை. காண்பார்-வினையாலணையும் பெயர். காண்பார் என்பது நோற்பார் என்னும பயனிலைகொண்டது.

90\. நல்லவை செய்யத் தொடங்கினும் நோனுமே
அல்லன வல்லவற்றிற் கொண்டுய்க்கும்—எல்லி
வியனெறிச் செல்வாரை யாறலைத் துண்பார்
செலவு பிழைத்துய்ப்ப போல்.

(ப-ரை) ஆறு-வழியில் செல்வாரை, அலைத்து - துன்புறுத்தி, உண்பார்-உண்ணும் திருடர், எல்லி-இரவில், வியன்-பெரிய, நெறி-வழியில், செல்வாரை - செல்லுகின்ற வழிப்போக்கர்களை, செலவு-(தாம்) செல்லும் வழியை, பிழைத்து - தப்பும்படிசெய்து, உய்ப்ப போல்-மற்றொரு மார்க்கத்தில் செலுத்துவதைப் போல, நல்லவை-(ஒருவன்) நல்ல காரியங்களையே, செய்யத்தொடங்கினும் - செய்வதற்கு ஆரம்பித்தானாயினும், அல்லன-(நல்லவை அல்லாத) தீய ஊழ்கள், நோனுமே-மனம் சகியாமல், அல்லவற்றில்-(நல்லவை அல்லாத) தீயகாரியங்களில், கொண்டு உய்க்கும்-கொண்டுபோய்ச் செலுத்தும்.

(பொ-ரை) வழியில் செல்லுவாரைத் துன்புறுத்தி அவரது பொருளைப் பறித்து உண்ணும் திருடர்கள், இரவில் பெரிய வழியில் செல்லும் வழிப்போக்கர்களைத் தாம் செல்லும் வழியைத் தப்பும்படி செய்து மற்றொரு வழியில் செலுத்துவதைப்போல், ஒருவன் நல்ல காரியங்களையே செய்ய ஆரம்பித்தானாயினும் அவனது தீய ஊழ்கள் மனம் சகியாமல் தீய காரியங்களில் கொண்டுபோய்ச் செலுத்தும்.

(க-ரை) எவரும் ஊழ்வினையை மீறி நடக்கமுடியாது.

(இ-குறிப்பு) நோனுமே-வினையெச்சம், ஏ-சாரியை. வியனெறி-பண்புத்தொகை. அல்லன என்பது கொண்டுய்க்கும் என்னும் பயனிலை கொண்டது.

91. நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப்போர்வை
கஞ்சுக மன்று பிறிதொன்றே—கஞ்சுகம்
எப்புலமுங் காவாமே மெய்ப்புலங் காக்குமற்
றிப்புலமுங் காவா திது.

(ப-ரை) நெஞ்சுபுறம்பு ஆ-மனதிற்கு வெளிப்படையாக, துறந்தார்-துறவடைந்த பெரியோர்களது, தவப்போர்வை - தவமாகிய போர்வை, கஞ்சுகம் அன்று-(மேலே போட்டுக்கொள்ளும்) சட்டையும் அல்ல, பிறிது ஒன்றே-மற்றொன்றேயாகும். (ஏனென்றால்) கஞ்சுகம்-சட்டையானது, எப்புலமும்-(மற்றைய கண், வாய், மூக்கு, செவி) என்ற புலன்கள் எல்லாவற்றையும், காவாமே-காப்பாற்றாமல், மெய்ப்புலம்-சரீரம் ஒன்றையே, காக்கும்-பாதுகாக்கும். இது-இப்போர்வையானது, இப்புலமும்-சரீரமாகிய புலத்தையுங்கூட, காவாது-பாதுகாவாது.

(பொ-ரை) மனதிற்கு வெளிப்படையாகத் துறவடைந்த பெரியோர்களது தவமாகிய போர்வை சட்டையும் அல்ல. மற்றொன்றேயாகும். (ஏனென்றால்) சட்டையானது ஏனைய கண், வாய்,

மூக்கு, செவி, என்ற புலன்கள் எல்லாவற்றையும் காப்பாற்றுமல் சரீரம் ஒன்றையே பாதுகாக்கும். இத்தவப் போர்வையானது சரீரமாகிய புலத்தையும்கூடப் பாதுகாவாது.

(க-ரை) மனசுத்தமில்லாத வெளிவேஷக் காரருடைய வேஷமானது யாதொரு பிரயோஜனத்தையும் தாராது.

(இ-குறிப்பு) துறந்தார் - வினையாலணையும் பெயர். தவப் போர்வை-பண்புத்தொகை. இதுஎன்பது காவாது என்னும் பயனிலை கொண்டது.

92. வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு

(ப-ரை) வஞ்சித்து-(பிறரை) ஏமாற்றி, ஒழுகும்-நடக்கின்ற, மதியிலிகாள் - அறிவில்லாதவர்களே! யாவரையும்-எல்லோரையும், வஞ்சித்தோமென்று - ஏமாற்றி விட்டோம் என்று, மகிழன்மின்-சந்தோஷப் படாதேயுங்கள்; வஞ்சித்த-(நீங்கள்) ஏமாற்றியவைகளை, எங்கும் உளன்-எப்பொருளிடத்தும் உளனாகிய, ஒருவன்-ஒப்பற்ற ஓர் கடவுள், காணுங்கொல்-காணுவான், என்று-என்று நினைத்து, அங்கம்-உடம்பானது, குலைவது-நடுநடுங்குவது, அறிவு-அறிவாகும்.

(பொ-ரை) பிறரை ஏமாற்றி நடக்கின்ற அறிவில்லாதவர்களே! யாவரையும் ஏமாற்றிவிட்டோம் என்று சந்தோஷப்படாதேயுங்கள். நீங்கள் ஏமாற்றிய விஷயங்களை எப்பொருளிடத்தும் உளனாகிய ஒப்பற்ற ஓர் கடவுள் காணுவான் என்று நினைத்து உடல் நடுங்குவது அறிவாகும்.

(க-ரை) நாம் செய்யும் தீய காரியங்கள் அனைத்தும் நம்மைப் படைத்த கடவுள் ஒருவனுக்குத் தெரியும் என்று நினைத்து அக்காரியத்தைச் செய்யாதொழிதலே மிகவும் சிறப்புடைத்தாகும்.

(இ-குறிப்பு) ஒழுகும் மதியிலி - பெயரெச்சம். மகிழன்மின்- மின்விகுதிபெற்ற ஏவல்முற்று. வஞ்சித்த-வினையாலணையும்பெயர். குலைவது என்பது அறிவு என்னும் பயனிலைகொண்டது.

93. மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப் பரக்கும்—கழிமுடைப்
புன்புலா ஞற்றம் புறம்போதிந்து மூடினும்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து.

(ப-ரை) கழிமுடை-மிகவும் துர்நாற்றம் உடைய, புல்-இழிவாகிய, புலால்-மாமிசத்தை, பொதிந்து - மறைத்து, மூடினும்-மூடினாலும், புறம்சென்று-வெளிப்பட்டு, சேயார்முகத்து - அதிகதூரத்தில் இருப்பவர்களுடைய முகத்தில், சென்று உதைக்கும் - சென்றுதாக்கும். (அதுபோல) மறைவழி-இரகசியமாக, பட்ட-நடந்தேறிய, பழிமொழி - பழிச்சொற்கள், தெய்வம் - கடவுள், பறையறைந்தாங்கு - பறைகொட்டினாற்போல, ஓடி-விரைந்து, பரக்கும்-(எங்கும்) பரந்து செல்லும்.

(பொ-ரை) மிகவும் துர்நாற்றம் உடைய இழிவாகிய மாமிசத்தை மறைத்து மூடினாலும் வெளிப்பட்டு அதிக தூரத்தில் இருப்பவர்களுடைய முகத்தில் சென்று தாக்கும். (அதுபோல) இரகசியமாக நடந்த பழிச்சொற்கள் கடவுள் பறை கொட்டினாற்போல விரைந்து எங்கும் பரந்து செல்லும்.

(க-ரை) பழிச்சொற்களை மறைத்து வைக்கமுடியாது. அதிவிரைவில் பரந்து செல்லும்.

(இ-குறிப்பு) மறை-தொழிற்பெயர், புன்புலால்-பண்புத்தொகை, சேயார்-வினையாலணையும்பெயர். நாற்றம் என்பது உதைக்கும் என்னும் பயனிலை கொண்டது.

94. மெலியார் விழினு மொருவாற்ற னுய்ப
வலியார்மற் றேன்றானு முய்யார் —நிலைதப
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினும்
உய்யுமா லுய்யா பிற.

(ப-ரை) மெலியார்-சிறியோர்கள், விழினும்-(தமது நிலையில்) தவறினாலும், ஒரு ஆற்றான் - ஓர்வகையால், உய்ப-பிழைப்பார்கள்; வலியார்-பெரியோர்கள் (தந்நிலையில் தவறினால்) மற்று ஒன்றானும்-மற்று யாதொரு வகையாலும், உய்யார் - பிழைக்கமாட்டார்கள். நொய்ய - அற்பமான பொருள்கள், நிலைதப-நிலைதவறி, சழக்கென-விரைவாக, வீழாவாம்-விழமாட்டாவாம்; வீழினும் - (ஒருவாறு தவறி) வீழ்ந்தாலும், உய்யும்-பிழைக்கும், பிற-கனமான பொருள்கள், உய்யா-(தவறி வீழ்ந்தால்) பிழைக்கமாட்டாவாம்.

(பொ-ரை) சிறியோர்கள் தமது நிலையில் தவறினாலும் ஒரு வகையால் பிழைப்பார்கள். பெரியோர்கள் தந்நிலையில் தவறினால் யாதொரு வகையாலும் பிழைக்கமாட்டார்கள். அற்பமான பொருள்கள் நிலைதவறி விரைவாக விழமாட்டாவாம். ஒருவாறு தவறி வீழ்ந்தாலும் பிழைக்கும். கனமான பொருள்கள் தவறி வீழ்ந்தால் பிழைக்கமாட்டாவாம்.

(க-ரை) பெரியோர் தந்நிலையில் ஒருகாலமும் தவறுதல்கூடாது.

(இ-குறிப்பு) ஒருஆறு-பண்புத்தொகை. மெலியார் என்பது உய்ப என்னும் பயனிலை கொண்டது. வலியார் என்பது உய்யார் என்னும் பயனிலை கொண்டது. நொய்ய என்பது உய்யும் என்னும் பயனிலை கொண்டது.

95. இசையாத போலினு மேலையோர் செய்கை
வசையாகா மற்றையோர்க் கல்லால் — பசுவேட்டுத்
தீயோம்பி வான்வழக்கங் காண்பாரை யொப்பவே
ஊனோம்பி யூன்றின் பவர்.

(ப-ரை) மேலையோர்-பெரியோருடைய, செய்கை-காரியங்கள்-இசையாத போலினும் - ஒவ்வாதனபோல் காணப்படினும், மற்றையோர்க்கு - கீழோர்க்கு, அல்லால் - அல்லாமல், வசைஆகா - (பெரியோர்க்கு) பழிப்பாக மாட்டா. பசு வேட்டு-பசுவைக்கொண்டு யாகம்செய்து, தீஓம்பி - அக்கினியைப் பூசித்து, வான்வழக்கம் - மழை பெய்தலை. காண்பாரை-(காணக்கூடிய) பெரியோரை, ஊன்ஓம்பி-(மாமிசத்தால் ஆகிய) உடலைப் பாதுகாக்க, ஊன்தின்பவர்-மாமிசத்தைத் தின்னுகின்ற இழிவானவர்கள், ஒப்பவே - ஒப்பாவார்களோ? (ஆகமாட்டார்கள் என்றபடி)

(பொ-ரை) பெரியோருடைய காரியங்கள் ஒவ்வாதனபோலக் காணப்பட்டாலும், கீழோர்க்கு அல்லாமல் அது பெரியோர்க்குப் பழிப்பாகமாட்டா. பசுவைக்கொண்டு யாகம்செய்து அக்கினியைப் பூசித்து மழைபெய்தலைக் காணக்கூடிய பெரியோரை, இழிவான உடலைப்பாதுகாக்க மாமிசத்தைத் தின்னுகின்ற இழிவானவர்கள் ஒப்பாவார்களோ? ஒப்பாகமாட்டாரென்றபடி.

(க-ரை) பெரியோர் செய்யும் காரியங்கள் ஒருகாலமும் பழிப்படையமாட்டாவாம்.

(இ-குறிப்பு) இசையாத-வினையாலணையும்பெயர். தீயோம்பி-வேற்றுமைத்தொகை. காண்பார்-வினையாலணையும் பெயர். செய்கை என்பது வசையாகா என்னும் பயனிலைகொண்டது.

96. எவரேவ ரெத்திறத்த ரத்திறத்த ராய்நின்
றவரவர்க் காவனகூறி—எவரேவர்க்கும்
உப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையான்
எப்பாலும் நிற்ப தெனெ.

(ப-ரை) *தம்உடையான் - நம்மையாளாகவுடைய (கடவுள்), எப்பாலும்-எந்தவிடங்களிலும், நிற்பதென - நிற்பதைப்போல, எம் உடையார்-எம்மையாளாகவுடைய துறவிகள், எவர் எவர்-யார் யார், எத்திறத்தர் - எப்பக்குவத்தையுடையரோ, அத்திறத்தர்ஆய் - அப் பக்குவத்துக்கு தகுந்தவர்ஆய், நின்று-இருந்து, அவர்அவர்க்கு-அவர் அவர்களுக்கு, ஆவனகூறி-வேண்டிய நீதிமொழிகளை உபதேசித்து, எவர் எவர்க்கும்-எவ்வகையானவர்க்கும், உப்பால்ஆய்-நடுவுநிலைமை யுடையர்ஆய், நிற்ப - இருப்பார்கள்.*

(பொ-ரை) *நம்மையாளாகவுடைய கடவுள் எந்தவிடங்களி லும் நிற்பதைப்போல, எம்மையாளாகவுடைய துறவிகள், யார், யார் எவ்வெப் பக்குவத்தையுடையரோ அவ்வப் பக்குவத்துக்குத் தகுந்த வராய் இருந்து அவர்அவர்க்கு வேண்டிய நீதிமொழிகளை உபதே சித்து, எவ்வகையானவர்க்கும் நடுவு நிலைமையாய் இருப்பர்.*

(க-ரை)*யோகிகள் கடவுளைப்போல் நடுவு நிலைமையுடையவராய் இருப்பர்.*

(இ-குறிப்பு) *எவர் எவர்-அடுக்குத்தொடர். ஆவன-வினையால ணையும் பெயர். உடையார் என்பது நிற்ப என்னும் பயனிலை கொண் டது.*

97. மெய்யுணர்ந்தார் பொய்மேற்புலம்போக்கார் மெய்யுணர்ச்சி
கைவருதல் கண்ணுப் புலங்காப்பார்—மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழிநாணம் நீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து.

(ப-ரை) மெய் உணர்ந்தார் - உண்மை ஞானம் அறிந்தவர்; பொய்மேல்-பொய்யாகிய உலகவிஷயங்களில், புலம்போக்கார்- தமது ஐம்புலன்களைச் செலுத்தாதவராகி, மெய் உணர்ச்சி-உண்மையான ஞானமானது, கைவருதல்-கையின்கண் சித்தித்தலே, கண் ஆக-முக்கியமாகக் கொண்டு; புலம்காப்பார் - தமது ஐம்புலன்களையும் காத்துக் கொள்வார்; மெய் உணர்ந்தார்-உண்மை ஞானத்தை அறிந்தவர்கள், காப்பே-புலன்களைப் பாதுகாத்தலே, நிலையா-வாசல் நிலையாகவும், பழி-பழிக்கு, நாணம்-நாணுதலே, நீள் கதவா-நெடும் கதவாகவும், நிறை-(ஐம்புலன்களை) நிறுத்தலாகிய, தாழ்- தாழ்க்கோலை, செறித்து- நெருக்கி, சேர்ப்பார் - அடக்குவார்கள்.

(பொ-ரை) உண்மை ஞானம் அறிந்தவர் பொய்யான உலக விஷயங்களில் தமது ஐம்புலன்களைச்செலுத்தாதவர்களாகி, உண்மையானஞானமானது கையின்கண் சித்தித்தலே முக்கியமாகக்கொண்டு தமது ஐம்புலன்களையும் காத்துக்கொள்வார். அவ்வாறு உண்மை ஞானத்தை அறிந்தவர்கள் புலன்களைப் பாதுகாத்தலே வாசல் நிலையாகவும், பழிக்கு நாணுதலே நெடுங்கதவாகவும், ஐம்புலன்களை நிறுத்தலாகிய தாழ்க்கோலை நெருக்கி அடக்குவார்கள்.

(க-ரை) உண்மைஞானம் அறிந்த பெரியோர் ஐம்புலன்களை அடக்கி ஆளுவர்.

(இ-குறிப்பு) உணர்ந்தார்-வினையாலணையும் பெயர். போக்கார்- முற்றெச்சம். செறித்து-வினையெச்சம், உணர்ந்தார் என்பது சேர்ப்பார் என்னும் பயனிலை கொண்டது.

98\. கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினாள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போல்—முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்விற் றோன்றுவதே யின்பம்
இறந்தவெலாம் துன்பமலா தில்.

(ப-ரை) கற்று-அறிவு நூல்களைப்படித்து, துறைபோய - சிறந்திருக்கின்ற, காதலற்கு-தன்நாயகனுக்கு, கற்பினாள் - கற்பிற்சிறந்த மனைவியானவள், பெற்றுக்கொடுத்த-பெற்றுக்கொடுத்த, தலைமகன் போல்-சிறந்த புத்திரனைப்போல, முற்றும்-எல்லாவற்றையும், துறந்தார்க்கு-வெறுத்தவர்க்கு (துறவிகட்கு), மெய்உணர்வில் - உண்மையான அறிவில், தோன்றுவதே - தோன்றும் இன்பமே, இன்பம் - சிறந்த இன்பமாம். இறந்தஎலாம்-அது ஒழிந்த மற்றைய இன்பங்கள் எல்லாம், துன்பம்அலாது - துன்பத்தைக்கொடுப்பதல்லாமல், இல்-இன்பத்தைக்கொடுக்காது.

(பொ-ரை) அறிவுநூல்களைப் படித்துச் சிறந்திருக்கின்ற தன் நாயகனுக்குக் கற்பிற்சிறந்த தன் மனைவியானவள் பெற்றுக்கொடுத்த சிறந்த புத்திரனைப்போல எல்லாவற்றையும் வெறுத்தவர்க்கு உண்மையான அறிவில்தோன்றும் இன்பமே சிறந்த இன்பமாம். அது ஒழிந்த மற்றைய இன்பங்கள் எல்லாம் துன்பத்தைக் கொடுப்பதல்லால் இன்பத்தைக் கொடுக்காது.

(க-ரை) துறவிகளுக்கு அனுபவ ஞானத்தாலேற்படும் இன்பமே சிறந்ததாகும்.

(இ-குறிப்பு) கற்று-வினையெச்சம். கொடுத்த மகன்-பெயரெச்சம். எல்லாம்-குறிப்பு வினையாலணையும் பெயர். தோன்றுவது என்பது இன்பம் என்னும் பயனிலைகொண்டது.

99. கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப்—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச்சென் றார்.

(ப-ரை) கற்று-கற்க வேண்டிய நீதி நூல்களைப் படித்து, அறிந்து-அவற்றின் பொருள்களைத் தெரிந்து கொண்டு, அடங்கி-

(கர்வங்கொள்ளாமல்) அடங்கியிருந்து, தீது ஒரீஇ-தீயகாரியங்களை நீக்கி, நன்று ஆற்றி-நல்லகாரியங்களைச் செய்து, பெற்றதுகொண்டு-தான் சம்பாதித்த அறிவைக்கொண்டு, மனம்-மனதை, திருத்தி-நல் வழிப்படுத்தி, பற்றுவதே பற்றுவதே-உறுதிப்பொருளாகிய முத்தி மார்க்கத்தையும், பற்றி-உறுதியாகப் பற்றிக்கொண்டு, பணி அற-(தமது) முயற்சியையெல்லாமொழித்து, நின்று-யோகத்தில் நிலைத்து நின்று, ஒன்றுணர்ந்து-ஒன்றாகிய பரம்பொருளைத் தெரிந்து, நிற்பாரே-(அந்நிலைபெயராது) நிற்பவரே, நீள்நெறி-நல்ல முத்தி மார்க்கத்தில், சென்றார்-சென்றவராவர்.

(பொ-ரை) கற்கவேண்டிய நீதிநூல்களைப்படித்து, அவற்றின் பொருள்களைத் தெரிந்துகொண்டு, கர்வம் கொள்ளாமல் அடங்கியிருந்து, தீயகாரியங்களை நீக்கி, நல்லகாரியங்களைச் செய்து, தான் சம்பாதித்த அறிவைக்கொண்டு, மனதை நல்வழிப்படுத்தி, உறுதிப் பொருளாகிய முத்திமார்க்கத்தையும் உறுதியாகப் பற்றிக்கொண்டு, தமது முயற்சியை யெல்லாம் ஒழித்து, யோகத்தில் நிலைத்து நின்று, ஒன்றாகிய பரம்பொருளைத் தெரிந்து, அந்நிலைபெயராது நிற்பவரே, நல்லமுத்தி மார்க்கத்தில் சென்றவராவார்.

(க-ரை) நீதிநூல்களில் விதித்தனவற்றைச் செய்தும், விலக்கியனவற்றை நீக்கியும் நடக்கும் பெரியோரே முத்திமார்க்கத்தை அடைவர்.

(இ-குறிப்பு) அடங்கி - வினையெச்சம். ஒரீஇ - உயிரளபெடை. பற்றுவதே பற்றுவதே-அடுக்குத்தொடர். உணர்ந்து-வினையெச்சம். நீள்நெறி-பண்புத்தொகை. நிற்பாரென்பது சென்றார் என்னும் பயனிலை கொண்டது.

100. ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார்—தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்.

(ப-ரை) ஐயம்-சந்தேகமும், திரிபு - (ஒன்றை மற்றொன்றாக நினைக்கும்) வேறுபாடும், இன்று-இல்லாமல், அளந்து-தெரிந்து, உத்தியில் -(தமது) அறிவால், தெளிந்து-தீர்மானம் செய்து, மெய் உணர்ச்சி-உண்மைப்பொருளை அறியும் தியானமாகிய, கண்விழிப்ப-கண்கள் மூடாதிருக்க, தூங்குவார்-தியான உறக்கம் கொள்பவர், தம்உள்ளே-தம்மனதிலே, காண்பதே-அடையும்படியான பரமானந்தமே, காட்சி-காட்சியாகும்; கனவு-அந்நித்திரையில் தோன்றும் கனவுகளை, நனவு ஆக- விழித்துக்கொண்டு செய்யும் பொருளாக, பூண்பதே-மேற்கொள்ளுவதே, தீர்ந்த பொருள்-முடிவான பலனும்.

(பொ-ரை) சந்தேகமும், ஒன்றை மற்றொன்றாக நினைக்கும் வேறுபாடும், இல்லாமல், தெரிந்து, தமது அறிவால் தீர்மானம் செய்து, உண்மைப் பொருளை அறியும் தியானமாகிய கண்கள்மூடாதிருக்க, தியான உறக்கம் கொள்பவர், தம்மனத்திலே அடையும்படியான பரமானந்தமே காட்சியாகும். அந்நித்திரையில் தோன்றும் கனவுகளை விழித்துக்கொண்டு செய்யும் பொருளாக, மேற்கொள்ளுவதே முடிவானபலனும்.

(க-ரை) கண்மூடி தியானத்திலிருந்து அடையும் ஆனந்தமே சிறந்ததாம்.

(இ-குறிப்பு) ஐயம்திரிபு-உம்மைத்தொகை. தெளிந்து - வினையெச்சம். தூங்குவார்-வினையாலணையும் பெயர். காண்பது என்பது காட்சி என்னும் பயனிலை கொண்டது.

நீதிநெறி விளக்கம் மூலமும்-உரையும்,

முற்றிற்று.

Printed at the Vivekananda Press, Madura:—35.

நவீன முறையில் எழுதப்பெற்ற

புதிய தமிழ்ப் பாட புத்தகங்கள்

சிதம்பரவாசகம்	முதற் புத்தகம்	...	0—2—6
ஷை	இரண்டாம் புத்தகம்	...	0—3—6
ஷை	மூன்றும் புத்தகம்	...	0—4—0
ஷை	நான்காம் புத்தகம்	...	0—4—6
ஷை	ஐந்தாம் புத்தகம்	...	0—6—0

கதைப்பகுதிகள்

நீதிக் கதம்பம்	முதற் புத்தகம்	...	0—3—0
ஷை	இரண்டாம் புத்தகம்	...	0—4—0
ஷை	மூன்றும் புத்தகம்	...	0—5—0
ஷை	நான்காம் புத்தகம்	...	0—6—0
கதைக் கடல்	மலர் I	... ...	0—6—0
ஷை	மலர் II	... ...	0—8—0
நான்கு புலவர்கள்	...	... ...	0—5—0

உயர்தர வகுப்புகளுக்குரிய பாடங்கள்

நவீன தமிழ் இலக்கியக் கோவை

(8-ம் வகுப்புக்குரியது)	0—12—0
(9-ம் வகுப்புக்குரியது)	0—12—0

உயர்தர வகுப்புகளுக்குரிய உப பாடங்கள்

ஆப்ரஹாம் லிங்கன்	... ...	0—
பத்தினிக் கடவுள்	....	0—
பார்வதிபாய்	... ...	0—

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

பெரம்பூர் பாரக்ஸ்போஸ்டு, சென்னை. } பப்ளிஷர்ஸ் & புக்ஸெல் மதுரை.